கல்கி

KALKI 9.7.95 ரூ. 3.00





வீராணம் திட்டம்:

வீண் முயற்சி!

புதிய வீராணம் திட்டத்தை அரசு வீம்புக்காக நிறைவேற்ற லாம்; கோடி கோடியாக மக்கள் வரிப் பணத்தை அதில் கொட்ட லாம்! குழாயில் தண்ணீர் வருமா? மாற்றுத் திட்டம் என்ன?

தமிழக அரசு, புதிய வீராணம் திட்டத்தை நிறைவேற்ற உலக வங்கியிடம் சுமார் 1638 கோடி ரூபாய் கேட்டிருக்கிறது. இத் திட்டத்தின் மூலம், தினசரி 190 மில்லியன் லிட்டர் தண்ணீரை, வீராணம் ஏரியிலிருந்து போரூர் நீர்த் தேக்கத்துக்குக் கொண்டு வந்து, சென்னைக்கு வழங்குவது சாத்தியமாகலாம்.

இது பற்றி விவாதிக்கவும் பொது மக்களின் கருத்துக்களை அறியவும், சென்னையில் ஒரு கருத்துப் பரிமாற்ற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார் திண்டுக்கல்லிலிருக்கும் பகவதி சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்த பால் பாஸ்கர். பலரும் பங்கு கொண்ட இந் நிகழ்ச்சியில், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் முன்னாள் தலைமை இஞ்சினியர் ஆர்.கே. மூர்த்தி தெரிவித்த கருத்துக்கள் கவனத்தை ஈர்த்தன.

ஆர்.கே. மூர்த்தியைத் தனியே பேட்டி கண்டோம். இதோ, பேட்டியின் முக்கியப் பகுதிகள்:

● *புதிய வீராணம் திட்டம் சாத்தியமா இல்லையா?*

வீராணம் ஏரியில் தண்ணீர் இருந்தால் சாத்தியமாகலாம். 1974 காவிரி விவாதத்திற்குப் பிறகு, இப்போதெல்லாம் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அங்கே இல்லாத நிலைதான் அனேகமாய் இருந்து வருகிறது. தண்ணீர் இருந்துவிட்டால், அங்கிருந்து சென்னைக்குக் கொண்டு வருவது வெறும் தொழில் நுட்ப சமாசாரம்தான். பருவமழை பெய்து, காவிரியில் வெள்ளம் வந்தால்தான் வீராணத்துக்குத் தண்ணீர் வரும். காவிரியிலிருந்து கொள்ளிடம்; கொள்ளிடத்திலிருந்து வடவாறு; வடவாற்றிலிருந்து வீராணத்துக்கு நீர் வர வேண்டும். அதுவும், காவிரியில் போதுமான நீர் வரும்பட்சத்தில்தான் அங்கிருந்து இங்கே கொண்டு வர முடியும்.

● *விவசாயத்துக்குப் போக மீதிதானே சென்னை வரும்?*

30,000 ஏக்கர் ஒரு போகமும், 15,000 ஏக்கர் இரண்டு போகமும் விளைய, விவசாயத்துக்கு வீராணம் தண்ணீர் தேவை. அதாவது விவசாயத்துக்கு 8 முதல் 10 டிஎம்சி தண்ணீர்; இந்நிலையில் சென்னைக்கு 2.44 டி.எம்.சி தண்ணீர் வருடத்துக்குத் தருவது சாத்தியமா? 0.95 முதல் 1.5 டி.எம்.சி கொள்ளளவு உள்ள ஏரியைக் கொண்டு, 12.5

டி.எம்.சி தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும். ஏரிக்குத் தண்ணீர் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தால் தான் இது சாத்தியம். காவிரியிலேயோ வரத்து மிகக் குறைவு!

● *பழைய வீராணம் திட்டச் செலவு எவ்வளவு?*

23.2 கோடி. இப்போது 71 மடங்கு ஆகி விட்டது என்று, 1640 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டிருக்கிறார்கள். அதே அளவு தண்ணீர்தான். அதே வழிதான். ஆனாலும் 71 மடங்கா ஆகும் என்று கேட்கத் தோன்றுகிறது. ஏரியை ஆழப்படுத்தவும், கரைகளை உயர்த்திக் கட்டவும், ஆகிற செலவுகளையும் இதில் சேர்த்திருக்கிறார்கள். தவிர, காவிரி, கொள்ளிடம், வடவாறு நதிகளின் கரைகள், கால்வாய்கள் தூர் வாரப்பட்டு, கரைகளில் 'ஸ்லேப்' பதித்துச் செப்பனிடப்படுமாம். இது எவ்வளவு ஆதாரபூர்வமானது என்று சொல்ல முடியவில்லை.

● *உலக வங்கி, இத்தனை செலவு ஏன் என்றெல்லாம் கேட்காதா?*

அவர்கள் தொழில் நுட்பக் கோணத்தில் பார்க்க மாட்டார்கள். சுற்றுச்சூழல் கோணத்தில் மட்டுமே பார்ப்பார்கள்.

● *சரி, வீராணம் தண்ணீர் இல்லை என்றால் வேறு மாற்று வாய்ப்பு என்ன?*

முதலாவது, சுமார் 60 கோடி ரூபாய் செலவில், சென்னைக்கு 40 கி.மீ. தூரத்திலிருக்கும் புலிகாட் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வர முடியும். வருடம் 30 டி.எம்.சி தண்ணீர் சென்னைக்கு வழங்க முடியும். 2 டி.எம்.சி எங்கே, 30 டி.எம்.சி எங்கே! சுமார் 140-150 வருடங்களுக்கு முன்பே, டைரக்டர் ஜெனரல் அஃப் இர்ரிகேஷன் பதவி வகித்த, சர் ஆர்தர் காட்டன் இதைச் சொல்லியிருக்கிறார். பொதுப்பணித்துறை லைப்ரரியில் இதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. அருகில் இருக்கும் கடல் நீர் 150 மீட்டர் நீளத்துக்கு ஏரியுடன் கலப்பதால், புலிகாட் ஏரி நீரும் உப்பு நீராக இருக்கிறது. இதை 150 மீட்டர் அளவுக்குத் தடுப்பு மூலம் டோனிரெவிக் குப்பத்தில், பிரித்து விடலாம். பிறகு சுத்தமான குடிநீராக மாற்றி விடலாம். கடல் நீர் கலக்காது. ஸ்வர்ணமுகி, கலங்கி, ஆரணியாறு என்ற மூன்று நதிகளின் நீர் இந்த ஏரியை நிரப்புகிறது. கொரட்டலையாற்றின் நீர் வரத்தை விட பத்து மடங்கு அதிகம் நீர் புலிகாட் வழியாக, கடலுக்குப் போய் வீணாகிறது. இதைத் தடுக்க வேண்டியது அவசியம்.

இன்னொன்று, மகாநதி-கோதாவரி-கிருஷ்ணா நதிகளை இணைக்கும் பெனின்சுலர் க்ரிட் திட்டம். இன்றைக்கு 2500 டி.எம்.சி நீர் கோதாவரியிலிருந்தும், 1100 டி.எம்.சி தண்ணீர் மகாநதியிலிருந்தும், 1000 டி.எம்.சி தண்ணீர் கிருஷ்ணாவிலிருந்தும் வீணாகக் கடலுக்குப் போகிறது. ஒரு முறை சுப்பிரமணியம் சுவாமியிடம் இந்தத் திட்டத்தைப் பற்றி இரண்டரை மணி நேரம் என் வீட்டில் விளக்கமாக எடுத்துச் சொன்னேன். கங்கை-காவிரி இணைப்பை விட இது சாத்தியமானது என்று விவரித்தேன். மறுநாளே தில்லியில் ஒரு 'பிரஸ்மீட்' ஏற்பாடு செய்து, "கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் சாத்தியமானதே அல்ல. அதற்குப் பதிலாக, மகாநதி-கோதாவரியை இணைத்து, பிறகு கிருஷ்ணாவுடன் இணைக்க முடியும் என்கிற புதிய திட்டத்தை நான் தயாரித்திருக்கிறேன். பிரதமரிடம் அதை இன்று கொடுக்கப் போகிறேன்!" என்றார்!

மூன்றாவதாக, ஏரிகளைப் பாதுகாக்க வேண்டும். திருவள்ளூரை அடுத்த கக்களூர் ஏரியில் சுமார் 3800 குடியிருப்புகளுக்கு மனைகளை விற்றுவிட்டார்கள். வீடு கட்டும் பணி நடக்கிறது. பரங்கிமலை, பல்லாவரம், கொரட்டூர், கொடுங்கையூர், கொளத்தூர் ஏரிகள் இருந்த இடங்களில் எல்லாம் இன்று குடியிருப்புகள் கட்ட அனுமதிக்கப்பட்டிருக்கிறது. எம்.எம்.டி.ஏ. இப்படி வீடுகள் கட்ட இனியேனும் அனுமதி வழங்கக்கூடாது. பாலவாக்கத்துக்குத் தெற்கே உள்ள ஒகியன் மதகு என்ற (8 மைல் X 1½ மைல்) பழைய ஏரியை, மறுபடி செப்பனிட்டு உபயோகத்திற்குக் கொண்டு வந்தால், 1 முதல் 14 டி.எம்.சி தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

நான்காவதாக, பல மாடிக் குடியிருப்புகளின் சுற்றுத் தளங்களில் எல்லாம் கான்க்ரீட் போட்டு மூடக் கூடாது. மழைநீர் பாய்ந்து பூமிக்குள் செல்லுமாறு அமைக்க வேண்டும். இதற்கு ரெயின் வாட்டர் ஹார்வெஸ்டிங் என்று பெயர். இது இஸ்ரேல் நாட்டின் மிக முக்கிய மழைநீர்ச் சாகுபடி. இது அவர்கள் உயிர்நாடி.

பேட்டி, கட்டுரை : **சாருகேசி**

அடுத்த இதழில்....

● அப்பாவிடம் தப்பு என்ன? — அலசுகிறது டீன் ஏஜ்

● ஜெயிலுக்கு உள்ளே... 'ஏ' வகுப்புக் கைதிகளும் களுருண்டைக் கைதிகளும்! — சிறப்புக் கட்டுரை

வில்லாதி வில்லன்

(கோவைக்காரர்கள் மன்னிக்க!)

“ஏனுங்க, படமா பாத்துப்போட்டு வாரீங்க?”

“தியேட்டருக்கு உள்ற போயிட்டு வாறவன் பின்ன பஞ்சுமிட்டாய் வித்துப் போட்டா வருவான்?”

“சத்தியராசு படமுங்களா?”

“அ, ஆ மா!”

“சத்தியராசு நடிச்சிருக்காருங்களா?”

“இல்ல... தியாகராசபாகவதரு. டிபி. ராஜ லட்சுமி... கேக்கறாம் பாரு.”

“ஏனுங்க கோவிச்சுக்கறீங்க... மூணு ரோலு பண்ணியிருக்கறாராம்ல?”

“அ, ஆமு. பின்னிப் போட்டாரு பின்னி...”

“நெசமாவா?”

“பின்ன பொய்யாங்காட்டியும்! சார்லி சாப்ளினுக்கு வில்லன் கெட்டப்பு



ஏத்துனாப்ல ஒரு பார்ட்டு பாரு, சும்மா பிச்சு போட்டாருல்ல...”

“கதை நல்லா இருக்குதுங்களா?”

“அட, ஆரு இப்ப கதை பாக்க றாங்க! நாலு ஃபைட்டு, மூணு பாட்டு, கவுண்டரு காமெடி. பத்தாதாக்கு?”

“அப்ப கதை இல்லீங்கறீங்களா?”

“இருக்குது, இருக்குது... எல ஒரத்ல ஊறுகா மாதர. வக்கீலு, கொல, கச்சேரி, தீர்ப்பு... அத உட்ரு. நம்ம மணிவண்ணன் என்ன போடு போடறாருங்கற...”

“வில்லனாக்கு?”

“நொள்ளன். மந்திரி ரோலு... கொன்னு போட்டாரு கொன்னு. அந்தாளு மாதர டயலாக்கு உட பொறந்து வரோணுமாங்காட்டியும்!”

“அவுரே எளுதியிருக்காருங்களா?”

“சத்தியராசுன்னு தா சொன்னாங்க.”

“எல்ப்பு செஞ்சிருப்பாராக்கு.”

“இந்த நூலு உடறதுதானே வேண்டாமுங்கறது?”

“பாட்டு நல்லாருக்குதுங்களா?”

“நேரா காதுமிசின் கடைக்குத்தான் போறேன்.”

“போட்டோ?”

“நாட்டுப்பொறத்தான்! கேமரான்னு சொல்லத் தெரியாதாக்கு? நம்மால மட்டும் பளிச்சுனு புடிச்சிருக்காங்க.”

“அட அட, நம்மா இருக்குதா?”

“அலஞ்சுருமியே?”

“சொல்லுங்க, சொல்லுங்க...”

“ஆமு, பெரிய ராமாயணம், நீட்டி மொழக்கிச் சொல்லிப் போட... 'நக்மா துணை'ன்னு போட்டுத்தான் ஸ்கிரிப்டு எளுதவே ஆரம்பிச்சிருப்பாங்க ளாக்கு...”

“அடடா!”

“உன்ற மாதர அலை யற பசங்கள நம்பித் தானே படமே புடிச் சிருக்காங்க!”

— ஆர்.பி.ஆர்.

ஜனதாதள செயற்குழுவும் குழப்பி தலைவர்களும்!



“பி.ஜே.பி. தவிர, எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து, நரசிம்மராவ் தலைமையில் ஆட்சியமைக்க வேண்டும்!” என்று, ஜனதாதள தேசிய செயற்குழு கூட்டம் நடைபெறுவதற்குச் சுமார் பத்து நாட்கள் முன்பு ஹெக்டே ஓர் அஸ்திரத்தை எடுத்து வீசினார்.

தேவேகௌடா, பொம்மை, பிஜு பட்நாயக் என்று அனைவருமே ஹெக்டேயின் இந்தக் கூட்டாட்சிக் கருத்தை எதிர்க்க, பத்திரிகைச் செய்திகள் சூடுபிடிக்க ஆரம்பித்தன.

பத்திரிகையாளர்கள் ஹெக்டேயைச் சந்தித்துக் கேட்ட போது, “நான் சொல்லுவது இப்போது ஒப்புக் கொள்ளும்படி இருக்காது; ஆனால் பிற்பாடு இதுதான் நிகழப் போகிறது!” என்றார். பிறகு ஜனதாதள தலைவர்கள் சந்தித்துவிட்டுச் சென்ற மறுநாளே, “இது என்னுடைய முடிவான கருத்து அல்ல; விவாதத்திற்கு வைத்திருக்கிறேன்; அவ்வளவுதான்! விவாதங்கள் நல்ல முடிவுகளைத் தரலாம் இல்லையா?” என்றார்.

ஹெக்டே மட்டுந்தான் பிளேட்டை மாற்றினார் என்பதில்லை; “சென்ற முறை நாம் வி.பி. சிங்கை பிரதமராகத் தேர்ந்தெடுத்ததுதான் மிகப் பெரிய தவறு. சந்திரசேகரை மட்டும் பிரதமராக்கியிருந்திருந்தால் ஜனதா அரசு கவிழ்ந்தே இருக்காது!” என்று இன்னொரு புறம் புயலைக் கிளப்பிக் கொண்டிருந்த பிஜு பட்நாயக்கும் பத்திரிகையாளர்களை நேரில் சந்தித்தபோது தாம் அப்படியெல்லாம் பேசவேயில்லையென்று பல்டியடித்து விட்டார்.

இந்தச் சூழ்நிலையில்தான் தேசிய செயற்குழு கூட்டம் நடைபெறப் போகிறது என்பதால் அனைவருமே அதில் அனல் பறக்கும் விவாதங்கள் நடைபெறும் என்று எதிர்பார்த்தார்கள். பத்திரிகையாளர்களும் தங்கள் பேனாவைக் கூர் தீட்டிக் கொண்டு காத்திருந்தார்கள். கட்சிக்காரர்களும், தங்கள் செயற்குழு கூட்டத்தில் நடைபெறும் சண்டைகள் வெளியில் தெரியாமலிருக்க வேண்டுமே என்கிற கவலையில் கூட்டத்தை பெங்களூரில் நடத்தாமல், ஊருக்கு அருகிலுள்ள அத்திபௌ என்னுமிடத்தில் ஒதுக்குப்புறமாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

ஆனால், செயற்குழு கூட்டத்தில் தமது கூட்டாட்சிக் கருத்தை ஹெக்டே வலியுறுத்திப் பேசுவார் என்று எதிர்பார்த்திருந்தவர்களுக்குப் பெருத்த ஏமாற்றம். தமது ‘கூட்டாட்சி’ கருத்தை அவர் கண்டுகொள்ளவேயில்லை. மாறாக, காங்கிரஸையும் நரசிம்மராவின் சில கொள்கை முடிவுகளையும் சாடோசாடென்று சாடினார்.

அனலை எதிர்பார்த்து ஏமாந்தவர்களில் ஒருவரான குஜராத்தைச் சேர்ந்த முன்னாள் எம்.பி. கோகோ பிரம்மபட் என்பவர், “ஹெக்டேஜி! இதுதான் உங்கள் கருத்து என்றால், இதை ஏன் முன்பே சொல்லாமல், வேறு எதெதையோ சொல்லி எங்களைக் குழப்பிக் கொண்டிருந்தீர்கள்?” என்று நேரடியாகவே கேட்டும் விட்டார்.

ஹெக்டே ஏன் இப்படிக் குழப்பினார்? “ஹெக்டே மிகவும் தந்திரசாலி. மாநில அரசியலில் தமக்கு இனி வேலையில்லை என்பதால், தேசிய அரசியலில் குறிவைத்து விட்டார். பிரதமர் பதவியோ அல்லது ஜனாதிபதி பதவியோதான் அவரது குறி. இனி எப்படியெல்லாம் அவர் பாலிடிக்ஸ் பண்ணப் போகிறார் என்று பாருங்களேன்!” என்கிறார்கள் ஹெக்டே எதிர்ப்பாளர்கள்.

இது பற்றி ஹெக்டேயிடம் நேரடியாகவே கேட்டபோது, “நான் அரசியலிலிருந்தே விலக முடிவு செய்து விட்டேன். அதற்கான ஏற்பாடுகள்தாம் கொஞ்சம் கொஞ்சமாகத் துவங்கியிருக்கின்றன!” என்றார் சிரித்துக் கொண்டே.

பெங்களூரிலிருந்து :

அமுதவன்

"இனிமே நீ எப்ப வேணும்னா லும் என்னோட போன்ல பேசலாம்... நம்பர் குறிச்சுக்கிறியா?"

"அப்படியா! ரொம்ப சந்தோஷம். சொல்லு..."

".....இதுதான் நம்பர். எப்படிப் போனாலும் ராத்திரி ஒன்பது மணிக்கு மேல நான் வீட்டுலதான் இருப்பேன். நீ தாராளமா போன் பண்ணலாம்...."

"ஆமா, நீ போனுக்கு அப்ளை பண் ணினதாவே தெரியலையே, அப்புறம் எப் படி போன் வந்தது?"

"அட, என்னப்பா நீ... பக்கத்து ஃபிளாட்டுக்கு வந்திருக்கப்பா. அந்த நம்பர்தான் நான் குடுத்தது."

"அவங்களுக்கு டிஸ்டர்பன்ஸா இருக் கப் போவுதப்பா— ஏதாவது நெனச்சுக்கப் போறாங்க..."

"சேச்சே! அதெல்லாம் ஒண்ணும் நெனக்க மாட்டாங்கப்பா. நீ கூச்சப் படாம பண்ணு... சரியா...?"

– இப்படி நிறையப் பேர் இருக்கிறார் கள். ஏதாவது ஓர் அவசரத்துக்குப் பயன் படுத்திக் கொள்ளட்டுமே என்று தங்கள் வீட்டு டெலிபோன் நம்பரைக் கொடுத்து உதவிய நண்பர்களைப் படாதபாடு படுத்தி விடுவார்கள்!

ஒருவேளை பக்கத்து வீட்டுக்காரர்கள் ஒன்பது மணிக்கு மேல் தங்கள் வீட்டு விஷயங்கள் பற்றியோ வரவு செலவுகள் பற்றியோ பேசுகிற பழக்கமுள்ளவர் களாக இருக்கலாம். அல்லது அந்தக் குடும்ப உறுப்பினர்கள் பலரும் பல இடங்களில் வேலை பார்ப்பதால் இரவு உணவை மட்டும்தான் அவர்கள் அனை வரும் ஒட்டுமொத்தமாக உட்கார்ந்து சந்தோஷமாகச் சேர்ந்து சாப்பிடக்கூடிய நிலையிலிருக்கலாம். இல்லையென்றால் அவர்கள் களைப்பின் காரணமாக ஒன் பது மணிக்கே தூங்குகிற பழக்கமுள்ள வர்களாகக் கூட இருக்கலாம்.

இவற்றையெல்லாம் சிறிதும் யோசித் துப் பார்க்காமல் பார்க்கிற நண்பர்களிட மெல்லாம் நாம் அந்த வீட்டு போன் நம்ப ரைக் கொடுத்து டெலிபோன் செய்யச் சொல்வது எந்தவிதத்தில் நியாயம்?

பெண்களும் சளைத்தவர்களல்ல – இந்த டெலிபோன் விஷயத்தில், குழந்தை களை மல்லுக்கட்டி ஸ்கூலுக்கு அனுப்பி, கணவனையும் ஆபீஸுக்கு அனுப்பி, மார்க் கெட்டுக்குப் போய் வந்து 'உஸ் அப்பாடா' என்று ஓர் அரைமணி நேரம் படுத்து எழுந் திருக்கலாம் என்று படுக்கிற நேரத்தில் டெலி போன் சிணுங்கும். எடுத்தால் 'எதிர் பிளாக்கி லுள்ள மூன்றாவது மாடியிலிருக்கும் மாமி யைக் கூப்பிட முடியுமா?' என்று எதிர் முனையில் கேட்பார்கள்!

அடுத்தவர் வீட்டு டெலிபோனில் பேசுவதற்குத்தானே நேரம், காலம், கட்டுப் பாடுகளெல்லாம்! சொந்த டெலிபோனில் பேசுவதற்குக் கூடவா விதிமுறைகள் இருக் கின்றன என்று கேட்பவர்களும் இருக்கிறார் கள். "இருக்கிறது!" என்கிறார், சபரி இன்ஸ்டி டியூட்டில் ரிசப்ஷனிஸ்டாக இருக்கும் குமாரி தில்யா. அவரே போனில் எப்படிப் பேச வேண் டும் என்று சில டிப்ஸ்களையும் தந்தார்.

- ஒரு நிறுவனத்தில் பணிபுரிகிறவராய் இருந்தால் ரிசீவரை எடுத்தவுடன் முதலில் உங்கள் நிறுவனத்தின் பெயரைச் சொல்லுங் கள்.
- வீட்டு டெலிபோன் என்றால், உங்கள் பெயரையோ அல்லது உங்கள் டெலிபோன் நம்பரையோ முதலில் சொல்லுங்கள்.
- உரத்த குரலிலும் அல்லாமல் மெது வான கிசுகிசுக் குரலிலும் அல்லாமல் சாதார ணமாகப் பேசுங்கள்.
- நீங்கள் பேச விரும்புகிற நபர் அந்த அலுவலகத்தில் இல்லாத பட்சத்தில் உங்கள் பெயரையும் நீங்கள் சொல்ல வேண்டிய செய்தியையும் சுருக்கமாகச் சொல்லி சம் பந்தப்பட்ட நபரிடம் தெரிவிக்கச் சொல்லி அன்புடன் வேண்டிக் கொள்ளுங்கள். உங் கள் பெயரைக் கூறிய பிறகே அவரது பெய ரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.
- எதிர் முனையில் பேசுகிறவர் கேட்கிற நபர், உங்கள் அலுவலக சீட்டில் இல்லை யென்றால், 'மே ஐ ஹெல்ப் யூ?' என்று கேளுங்கள். அல்லது 'எனி மெசேஜ்?' என்று விசாரியுங்கள். சீட்டுக்குரியவர் வந்ததும் தக வலை மறக்காமல் சொல்லுங்கள் அல்லது கையோடு எழுதி வைத்து விடுங்கள்.
- வி.ஐ.பிக்கள் அல்லது பொறுப்பான



சொல்லி

பதவி வகிப்பவருடன் பேச நேரும் போது, 'எஸ் சார்' என்றோ 'எஸ் மேம் (மேடம்)' என்றோ, அவர்கள் வாக்கியத்தை முடிக்கும் போது சொல்லுங்கள். அவர்கள் சொல்லு வதை நீங்கள் மிகவும் சிரத்தையோடு கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்கிற எண்ணம் அவர்களுக்கு வரும்படி உங்கள் குரல் இருப்பது மிகவும் அவசியம்.

● அலுவலகத்தில் நீங்கள் டென்ஷன் அல்லது கோபமாக இருக்கிற சமயங்களில் பேச நேர்ந்தாலும் அவற்றை வெளிக் காட்டாதவாறு பேசுவது முக்கியம்.

● வேலை மிகுதி அல்லது வேறு காரணத்தால், நமக்கு வரும் ஃபோன் காலைப் பேச முடியாது போனால், ஆபரேடரிடம் 'நான் வெளியே போயிருக்கேன்னு சொல்லி விடு' என்று நழுவும் பொய்யர்கள் சீக்கிரமே மாட்டிக் கொள்வார்கள். பேச இயலாமைக்கு உண்மை காரணத்தைச் சொல்வதுதான் மேலானது.

● அடுத்த முனையில் இருப்பவர் பேசுவது உங்களுக்குத் தெளிவாகப் புரியாவிட்டால் 'பார்டன்?' என்றோ 'சாரி' என்றோ சொல்லி மீண்டும் அதைக் கேட்கத் தயங்காதீர்கள்.

● பேச்சை முடிக்கும் போது நாசூக்காக முடியுங்கள். பகலாய் இருந்தால் 'குட்டே' என்றோ இரவாய் இருந்தால் 'குட்நைட்' என்றோ, எதிர்முனைக்காரர் 'தாங்க்ஸ்' என்று முடிக்கிற போது 'வெல்கம்' என்றோ முடியுங்கள்.

இவை எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமான விஷயம் ஒன்று இருக்கிறது :

நீங்கள் ஒரு நபருக்கு டெலிபோன் செய்கிறீர்கள் என்றால், பேச வேண்டிய விஷயங்களைச் சுருக்கமாகக் குறித்து வைத்துக் கொண்டு பேசுவது அவசியம். அப்படியல்லாமல் பேசி முடித்த பிறகு, 'அடடா, இந்த விஷயம் விட்டுப் போய் விட்டதே!' என்று மீண்டும் அவருக்கே போன் செய்து பேசுவது பண விரயமும் கால விரயமும் மட்டுமல்ல; சம்பந்தப்பட்டவருக்கு எரிச்சலைத் தூண்டுகிற விஷயமாகவும் அது அமையக்கூடும்.

பல சமயங்களில் அவசரமாக யாருக்காவது ஒரு செய்தி சொல்வதற்காக டயல் செய்




கிற போது, 'உங்கள் நடத்திலுள்ள எல்லா இணைப்புகளும் தற்போது உபயோகத்தில் உள்ளன. சிறிது நேரம் கழித்து டயல் செய்யவும்' என்கிற ரெகார்ட் குரலே திரும்பத் திரும்பக் கேட்பதை நம்மில் பலரும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

இதற்கு என்ன காரணம்? சிலர் பதினைந்து இருபது நிமிடங்களுக்குக் குறையாமல் ரிசீவரைக் கீழே வைப்பதில்லை. ஒரு வேண்டுதல் போல் ஊர்க் கதைகளையெல்லாம் பேசிக் கொண்டேயிருப்பார்கள். அப்படி வெட்டி அரட்டை அடிக்கிற சமயத்தில், உங்கள் அலுவலகத்திலுள்ள மற்றவர்களுக்கோ அல்லது உங்கள் அலுவலகத்துக்கோ... அத்தனை ஏன், உங்களுக்கோ கூட கிடைக்க வேண்டிய அதிமுக்கியமான ஓர் அவசரச் செய்தி மிகவும் தாமதமாகக் கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். இதன் காரணமாகத்தான் 'ஹலோ' என்கிற வார்த்தை கூட அநாவசியமானது. எடுத்தவுடனேயே உங்கள் பெயரைச் சொல்லி விட்டு விஷயத்துக்கு வந்து விடுங்கள் என்று டெலிபோன் இலாகாவினரே கேட்டுக் கொள்கிறார்கள்.

அட்டையில் : சுபஸ்ரீ ராமசந்திரன்
வண்ணப்படம் : காமெரா திருஞானம்
— எஸ். ஐ., எஸ்.வி.என்.

அறுக்காதீங்க!





1995 ஜூலை 9
யுவ ஆனி 25
மலர் : 53
இதழ் : 49

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.




வைத்தால் குடுமி; சிரைத்தால் மொட்டை!

அமெரிக்காவில் உள்ள மிகப் பெரிய நிறுவனமாகிய 'என்ரான்', மகாராஷ்டிராவில் மின் உற்பத்தி செய்ய, ஷரத் பவார் ஆட்சியில் செய்து கொண்ட ஒப்பந்தம் தற்போது அபாய நிலையில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நிற்கிறது.

'என்ரான் நிறுவனத்துக்கு ஏகப்பட்ட சலுகைகள் காட்டப்பட்டிருக்கின்றன; நாங்கள் பதவிக்கு வந்தால் ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்வோம்' என்று தேர்தல் பிரசாரத்தின்போது கூறியதைத்தான் தற்போதைய சிவசேனா-பி.ஜே.பி. அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. ஒரு கமிட்டி அமைத்தாகிவிட்டது. 'அதன் அறிக்கை கிடைத்ததும் இரண்டே வாரங்களில் முடிவெடுப்போம்' என்கிறார் மகாராஷ்டிரா முதல்வர். அது 'ஒப்பந்த ரத்து' என்ற முடிவாகத்தான் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'அவ்வாறு ரத்து செய்தால் ஒப்பந்த ஷரத்துப்படியே கோடி கோடியாக நஷ்டஈடு கொடுத்து அழ வேண்டியிருக்குமே?' என்ற கேள்விக்கு மகாராஷ்டிர முதல்வர், 'பணத்தை விட தேசத்தின் மானம் பெரிது' என்று பதிலளித்துள்ளார்.

'இப்படி ஓர் அரசு எடுத்த முடிவை, அடுத்து வரும் அரசு ரத்து செய்தால்




இந்தியாவிடம் உலக நாடுகள் முழுமைக்கும் நம்பிக்கை போய்விடும்; அப்புறம் அயல்நாட்டுத் தொழிலதிபர்கள் இங்கு முதலீடு செய்யவே யோசிக்க ஆரம்பிப்பார்கள்' என்கிறது என்ரான் நிறுவனம்.

நமது பிரதமர் பாரிஸில் இருக்கும்போது 'ஒப்பந்தம் ரத்தாகாது' என்று அபயம் அளித்தார்! ப. சிதம்பரமோ அமெரிக்காவில் வைத்து, 'சிற்சில மாறுதல்களுக்கு இரு சாராரும் சம்மதிக்க, ஒப்பந்தம் தொடரும்' என்று ஒரு சமரச திட்டத்தை முன் வைத்தார்!

'என்ரான் நிறுவனத்துக்கு இத்தகைய கூடுதல் சலுகைகள் எப்படி தரப்பட்டன'? என்ற கேள்வி பின்னால் எழக் கூடும் என்பதற்காக மத்திய அரசின் வர்த்தக-நிதிக் கொள்கை ஆவணங்களே மாற்றியமைக்கப்பட்டிருப்பதும் இன்று வெளிச்சத்துக்கு வந்து விட்டது.

"என்ரானுக்குத் தரப்படுவது போன்ற சலுகைகள் நமது மின்வாரியங்களுக்குத் தரப்பட்டால் இவையும் லாபகரமாக இயங்குமே?" என்று ஓர் ஓய்வு பெற்ற மின் வாரிய உயர் அதிகாரி கேட்டிருக்கிறார். உதாரணமாக, "அரசியல் நோக்கில் விவசாயத்துக்கு இலவச மின்சாரம் வழங்குமாறு மின்வாரியங்கள் வற்புறுத்தப்படுகின்றன. என்ரானை இப்படி கட்டாயப்படுத்த முடியுமா?"

கவனிக்கப்பட வேண்டிய விஷயம்,
'என்ரானுக்குச் சலுகை காட்டப்பட்டதா'
என்பதல்ல; 'எந்த நோக்கில்' என்பதுதான்!



"என்ரான் கொண்டு வரும் மின் உற்பத்தி உபகரணங்களை விடவும் மலிவாக நமது பி.எச். இ.எல். தயாரித்து அளிக்க முடியும்" என்பதாக மற்றொரு வாதம்.

"மின் உற்பத்தி என்பது இன்று முதல்போட்டு நாளை லாப அறுவடை பண்ணும் காரியமல்ல. ஏராளமான முதலீட்டை விழுங்கி, நீண்டகாலம் சென்று வருவாய் தரத் தொடங்கும். மேலும் என்ரான் கொண்டு வருவது அதிநவீன தொழில் நுணுக்கம். சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாட்டுக்கு முக்கியத்துவம் தருவது. பாது காப்பு மிக்கது. இப்படி அபரிமித முதலீடு செய்துவிட்டு லாபத்துக்குக் காத் திருக்கும் வல்லமை படைத்த நிறுவனங்கள் உலகில் மிகக் குறைவு. சர்வதேச அரங்கில் இவற்றுக்கு கிராக்கி மிகுதி. எனவே இந்தியாவுக்குத்தான் இழப்பு ஏற் படும்" என்று எச்சரிக்கை செய்பவர்களும் பலர் உள்ளனர்.

இத்தகைய வாதப் பிரதிவாதங்கள் அனைத்திலுமே சாரம் இருக்கிறது. ஆக, கவனிக்கப்பட வேண்டிய விஷயம், 'என்ரானுக்குச் சலுகை காட்டப்பட்டதா' என்ப தல்ல; 'எந்த நோக்கில்' என்பதுதான்! உண்மையில் நாட்டு நலன் கருதி சில பல சலுகைகள் தரப்பட்டிருந்தால் அவற்றை அடுத்து வரும் மாற்றுக் கட்சி அரசு மதித்து ஏற்க வேண்டும். அதுதான் தேசப்பற்று. இதில் கட்சிக்குப் பிரசார அனு கூலம் தேடக் கூடாது. மாறாக, சலுகைகள் சில தனி நபர்களின் சுயநலனுக்காக அல்லது ஒரு குறிப்பிட்ட கட்சி நலனுக்காக வழங்கப்பட்டிருந்தால் நிச்சயம் அந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்படவே வேண்டும். ஒப்பந்தத்தை ரத்து செய்யும் முன்னர் இதைத் தெளிவு படுத்த வேண்டியது மகாராஷ்டிரா அரசின் கடமை.

"என்ரானுக்குத் தரப்பட்ட சலுகைகள் சில தனி நபர்கள் அல்லது தனியொரு கட்சி பணம் பண்ண உதவியிருக்கிறதா?"- முதல்வர் ஜோஷி பதில் சொல்லட்டும்.



மாறும் முகங்கள்!

ஆர். ரகோத்தமன்

"சேகர்! சுரேஷ் எங்கே? ஸீட்ல ரொம்ப நேரமாக் காணோமே!"

"யாருக்கோ ரேஷன் கார்டு எடுக்கணுமாம். சிவில் சப்ளை ஆபீஸுக்குப் போயிருக்காரு."

"யூஸ்லெஸ் ஃபெல்லோ!" மானேஜர் சீறினார். "வந்ததும் என்னைப் பார்க்கச் சொல்."

அவன் வந்ததும் கடுகாய் வெடித்தார். தொங்கின முகத்துடன் சுரேஷ் வெளியே வந்தான்.

அடுத்த வாரத்தில் ஒரு நாள்....

"சுரேஷை இன்னிக்கும் ஸீட்ல காணோமே?" என்றார் மானேஜர். "லீவு போட்டுட்டாரா?"

"இல்லே சார்.... உறவுக்காரர் ஒருத்தருக்கு 'லாரி பர்மிட்' எடுக்கணுமாம். மினிஸ்டரோட செக்ரடரியைப் பார்க்கப் போயிருக்காரு. ஒரு மணி நேரம் பர்மிஷனாம்!"

"டாமிட்! டைப் அடிக்க முக்கியமான லெட்டர்ஸ் கொடுத்திருக்கேன். அதையெல்லாம் 'பெண்டிங்' வச்சுட்டு தொலைஞ்சுட்டானே....!"

அன்றும் சுரேஷுக்கு செமை டோஸ் கிடைத்தது. ஆனாலும் அவன் வெளியே போவது குறையவில்லை. அவன் வேலையையும் சேர்த்து மானேஜரின் பி.ஏ.வான நான்தான் செய்ய வேண்டியிருந்தது.

இன்னொரு நாள்....

"வேர் ஈஸ் தட் ஃபெல்லோ சுரேஷ்?" என்றார் மானேஜர் கடுப்புடன்.

"சிங்கப்பூரிலிருந்து யாரோ உறவுக்காரங்க வர்றாங்களாம். கஸ்டம்ஸ் ஆபீசர் ஒருத்தரைப் பார்த்து 'டூட்டி'யெல்லாம் அட்ஜஸ்ட் பண்ணிப் போட ஏற்பாடு பண்ண ஏர்போர்ட் போயிருக்கார்."

சுரேஷ் வந்ததும் மானேஜர் வெடித்தார்.

"யோவ்... உனக்குச் சம்பளம் நம்ப ஆபீஸில் தர்றாங்களா? இல்லை, ஏர்போர்ட்டிலும் சிவில் சப்ளை ஆபீஸிலும் தர்றாங்களா? நானைபிலிருந்து ஊர் சுற்றப் போனால் சீட்டைக் கிழிச்சுடுவேன்!" என்றவர், என்னை - உதாரணமாக்கிப் பேசினார்:

"சேகரைப் பாரு... அவனை மாதிரி உழைக்கக் கத்துக்கோ... போ! கெட் லாஸ்ட்!"

சுரேஷ் முகம் கருங்கி வெளியே வந்தான்! எனக்குப் பெருமையாயிருந்தது.

ஹெட் ஆபீஸிலிருந்து ஒரு லெட்டர் வந்தது. அடுத்த மாதம் மானேஜருக்கு சிங்கப்பூர், ஹாங்காங், மலேசியா ஆகிய நாடுகளில் இரண்டு வாரம் டிரெயினிங்! உதவியாளர் ஒருவரையும் அழைத்துப் போகலாமாம். அதைப் படித்ததும் நான் சந்தோஷமாக வெளி நாட்டுக் கனவுகளில் மிதந்தேன். என்னென்ன வாங்கி வருவது என்று ஒரு லிஸ்ட் போட்டு, பணத்துக்கும் ஏற்பாடு செய்தேன்.

கடிதம் வந்த நான்காவது நாள் மானேஜர் கூப்பிட்டார்.

"சுரேஷ் எங்கே?" என்றார்.

"யாருக்கோ பாஸ்போர்ட் எடுக்கணும்னு பாஸ்போர்ட் ஆபீசுக்குப் போயிருக்காரு.... சார்... வந்து... அவரு பழையபடி வேலையெல்லாம் என் தலைல கட்டிட்டு சுத்த ஆரம்பிச்சுட்டாரு...."

மானேஜர் ஏன் கோபப்படவில்லை? புன்முறுவல் பூக்கிறாரே!

"அதுவா, நாங்க இரண்டு பேரும். ஃபாரின் டூர் போறோமில்லையா.... அதுக்காக பாஸ்போர்ட் எடுக்கவும், மத்த ஏற்பாடு செய்யவும் தான் அலையறான். அதெல்லாம் கண்டுக்காதே..."

எனக்கு அதிர்ச்சி!

"சார் நான்தானே உங்க உதவியாளர்? நான் தானே உங்ககூட வரணும்?"

மானேஜர் சிரித்தார். "உனக்கு ஆபீஸ் வேலை தவிர என்ன தெரியும்? சுரேஷுக்கோ எல்லா இடத்துலேயும் தொடர்பு இருக்கு! ஃபாரின்லே உறவுக்காரங்க ஏகப்பட்டவங்க இருக்காங்க. தங்கற இடத்துலேருந்து தரமான விஸிஆர், காமிரான்னு எல்லாம் 'சீப்'பா அரேன்ஜ் பண்றானாம். அவன் கூட போனா டூர் பயங்கர சக்ஸஸாகும்.... சரி சரி நீ போய் உன் வேலையைப் பாரு. டோண்ட் வேஸ்ட் ஆபீஸ் டைம்!" என்றார்.



Kalki Shopping Page

Kalki Shopping Page

WE WELCOME YOU TO THE WORLD OF KARISHMA CHURIDARS AND COTTON SAREES

OUR PRODUCTS

1) Karishma Churidars
2) Karishma Sarees
3) Andhra Pochham Palli Cotton Sarees
4) Belgaum Polyster (Saradha) Sarees
5) Seiko Sarees
6) Banaras cotton sarees
7) Beekay Sarees (New Product)

AALURI SAREES

The Shop exclusively for Ladies

(DEALER OF KARISHMA CHURIDARS & SAREES)
WHOLESALE & RETAIL
4/24, R.K. MUTT ROAD, LUZ BAZAAR,
MYLAPORE, MADRAS - 600 004.
NEXT TO SRINIVAS SILK
PHONE : 4935791

WE WELCOME CITIBANK CARDS

KOMALA ADS

மணமக்கள் :	மணநாள் :
R. பாரதி	08.06.1995
S.D. பாபு	வியாழக்கிழமை

குடியாத்தம், பிச்சானூர், ஸ்ரீ முருகன் திருமண மண்டபத்தில் நடைபெற்ற திருமணத்திற்கு சுற்றமும், நட்பும் சூழ வருகை புரிந்து மணமக்களை வாழ்த்திய அன்பு உள்ளங்களுக்கு எங்கள் இதயங் கனிந்த நன்றி!

இங்ஙனம்

R.J. ஏகமூர்த்தி D.M.E.,
கோவர்த்தன நாயுடு, சேம்பள்ளி
R. கங்காதரன் D.M.E.,
ரங்கநாத நாயுடு, லோகையாநாயுடு.

— தனலக்ஷ்மி —

சத்யம் சீலம் நாணயம் தர்மம் = இதுதான் சசிநாத் சத்யம் சீலம் நாணயம் தர்மம் = இதுதான் சசிநாத்

சத்யம் சீலம் நாணயம் தர்மம் = இதுதான் சசிநாத்

உங்களுக்கு தெரியுமா?

6 மாதத்தில் **6** கிளைகள், **1000%** டெப்பாசிட் வளர்ச்சி

கம்பெனி ஆஸ்த்தி **1** கோடி

ஆதரவு அளித்தவர்களுக்கும் அளிப்பவர்களுக்கும் நன்றி! நன்றி!! நன்றி!!!

நீங்கள் எப்போது இணைகிறீர்கள்?

சசிநாத் சாஸ்வத நிதி லிமிடெட்

H.O. 36, ரங்கநாதன் தெரு, சென்னை-17, PH: 4348233, 4346786

B.O. 35, M.C. ரோடு, சென்னை-21, 205, N. M. ரோடு, ஆவடி, சென்னை-54. 34-C, ரயில்வே ரோடு, காஞ்சிபுரம்-631 501, 56 கடப்பா டிரங் ரோடு, திருத்தணி - 631 209, 38, ஆற்காடு சாலை, வேலூர் 632 004, 161, S.V. பட்டேல் ரோடு, பாண்டி-605 001

SOORYA ADVERTISEMENTS

வேலாதேவிகள் பங்குதாரர்களுக்கு மட்டும் செவ்வாய் விடுமுறை

* இவை தவிர இன்னும் பல டெப்பாசிட் திட்டங்களும், 6 மாத வட்டி 1 வருட வட்டி டெப்பாசிட் செய்தவுடனேயே பெறும் திட்டங்கள் உண்டு.

மக்கள் சேவையில் 17 ஆம் ஆண்டு சசிநாத்துடன் இணைவோம்! சௌக்கியமாக வாழ்வோம்

சத்யம் சீலம் நாணயம் தர்மம் = இதுதான் சசிநாத் சத்யம் சீலம் நாணயம் தர்மம் = இதுதான் சசிநாத்

கோடம்பாக்கம் லிபர்ட்டியை உரசும்போதே சூழலில் ஒரு மாறுதல் தெரிந்தது. லேசாக மழை வரப் போகிற மாதிரி... சிலீர் - முதல்வர் வரப் போகிற மாதிரி... சரிர்!

நிறைய போலீஸ். கரகர மோட்டார் சைக்கிள்கள். 'திரும்பி உடுய்யா. திரும்பி உடுய்யா' - குரல்கள். நின்று ஒளிரும் சீரியல் பல்புகள். நீளமான கார் வரிசைகள். பளபளவென்று திரை முகங்கள். பளிச் கேமராக்கள். நீள ஒயர்களுடன் வீடியோ மனிதர்கள். ராகவேந்திரா மண்டபத்தில் இயக்குநர் பாலசந்தரின் இரண்டாவது மகன் பிரசன்னாவுக்குத் திருமண வரவேற்பு.

வாசலில் வெண்ணுடை கே.பி. வழியில் நியூஸ் வரதராஜன், தாமு, அமீர்ஜான். மேடையில் அடிக்கடி தாடியைத் தடவியபடி வஸந்த். மாலை வேளையில் மாலைத் தோளர்கள் (அதாகப்பட்டது மணமக்கள்) வெளிச்சப் புரட்சியில் நொடிக்கொரு சிரிப்பு வீசி, கைகூப்பி, குலுக்கிக் கொண்டிருக்க, கீழே, கதிரி கோபால்நாத்தின் சாக்ஸஃபோன் ஜாலங்கள்.

ஆச்சர்யம், கல்யாணக் கச்சேரிக்குரிய இலக்கணங்களையெல்லாம் மீறி, நீள ஹாலை அடைத்துக் கொண்டிருந்த அத்தனை பேரும் அங்கே இங்கே அசையாமல் உட்கார்ந்து, அமைதி காத்து ரசித்தது!

அம்மா வந்த போது எழுந்த லேசான சலசலப்பு கூட, அவரே உட்கார்ந்து ரசிக்க ஆரம்பித்ததும் கப்சிப்!

கே.பி. வீட்டுக் கல்யாணம்



அது ஆபேரியா? பேஃபூரியா? காரம், மணம், குணம் தூக்க, முதல்வரே உட்கார்ந்து ரசிக்கிறார் என்கிற உணர்வில், கதிரி ஒரு தூக்கு தூக்கினார் பாருங்கள்! உச்சஸ்தாயியில் எந்த நிமிஷம் இடறி விடுமோ என்கிற அச்சம் நம்மைக் கவ்விக் கொள்ள, இந்திரஜாலம் என்பார்களே... அது! டெரிஃபிக்! விஸிலடிக்கத் துடித்த மனத்தை அடக்கி ஒடுக்க அரை லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டியிருந்தது!

வசதியாக பிளாஸ்டிக் பாக்கெட்டுகளில் மினரல் தண்ணீர் மூலைக்கு மூலை குவித்திருந்தார்கள். மீசை இழந்த முகத்துடன் சட்டென்று அந்தப் பக்கம் பிரசன்னமான விவேக், ஒரு பாக்கெட்டை எடுத்து, மூக்கருகே கொண்டு போய், "உறையா?" என்றொரு டைமிங் கடி கடித்தாரே, சிரிப்பு பிய்த்துக் கொண்டு பறந்தது!

முதல்வர் வந்து, நின்று, சிரித்து, வாழ்த்தி, உட்கார்ந்து, ஜூஸ் குடித்து, எழுந்து, வணங்கிப் போனதும் ஒயர்லெஸ் மெஸேஜ் போய், சற்று நேரத்தில் அன்பர்கள் புடை சூழ கலைஞர் வந்தார். ராஜாராம் வந்தார். சோ வந்தார். கமல் வந்தார். தெரிந்த பிரபலங்களையெல்லாம் நினைத்துக் கொள்ளுங்கள். அத்தனை பேரும் வந்தார்கள். பிரபலங்களிலேயே சிலர், தம்மை வணங்கும் மணமக்களை கவனிக்காமல் கே.பி. காலில் தாம் விழுந்து ஆசி பெற்றது வித்தியாசமான காட்சி!

— பா. ராகவன்

படைப்பாளியாகும் படிப்பாளிகள்!

அறிவொளி இயக்கம் நடக்காத மாவட்டமே இல்லை. ஆனால் அதன் தொடர்ச்சியாக என்ன நடக்கிறது? எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்குக் கையெழுத்துப் போடக் கற்றுத் தருவதோடு அறிவொளி இயக்கத்தின் வேலை முடிவடைந்து விடுகிறதா? இல்லை என்பதற்குக் காமராஜர் மாவட்டம் ஓர் உதாரணம்.

'படிப்பாளியைப் படைப்பாளியாக்குவோம்' என்கிற கோஷத்துடன் அண்மையில் ஒரு நடைப் பயணம் நடந்தது காமராஜர் மாவட்டத்தில். மாவட்ட ஆட்சித் தலைவர் கனகராஜ் துவக்கி வைக்க, 45 குழுக்கள் 450 கிராமங்களுக்குச் சென்றன. வெறும் கோஷங்களுடன் மட்டும் செல்லவில்லை; புத்தக மூட்டைகளோடு புறப்பட்டுச் சென்றிருக்கிறார்கள்.

அறிவொளி திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் ஏற்கெனவே 350 கிராமங்களில் நூலகங்கள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இவை அந்தந்த கிராம மக்களின் முயற்சியாலும் ஆர்வத்தாலும் நடந்து வருகின்றன. இந்த நூலக 'நெட்வொர்க்கை' விரிவுபடுத்துவதே நடைப்பயணத்தின் முக்கிய நோக்கம்.

இந்த கேபிள் டீவி யுகத்தில் புத்தகங்களை விரும்பும் கிராமங்களும் இருக்கின்றனவா என்ன? ''ஏன் இல்லை?'' என்கிறார், மாவட்ட பெண் ஒருங்கிணைப்பாளரான எஸ். வெங்கடேஸ்வரி.

''சிவகாசி அருகிலுள்ள வடமலாபுரம் என்னும் கிராமம். அங்கு நாங்கள் சென்ற நாளில், இரண்டு குழந்தைகள் கிணற்றில் விழுந்து இறந்திருக்கின்றன. ஊரே துக்கத்திலிருந்த நிலையிலும் எங்களை அன்புடன் வரவேற்று எங்கள் நிகழ்ச்சிகளை நடத்தச் சொன்னார்கள். நாங்களும் நூலகத்தின் பயன்கள், படிப்பதன் பயன்கள் போன்றவற்றை எடுத்துச் சொல்லுகிற வகையில் நாடகங்கள் போட்டோம். பாட்டுக்கள் பாடினோம். எடுத்துச் சென்ற புத்தகங்களிலிருந்து, சில பகுதிகளைப் படித்துக் காட்டினோம். இதே வரவேற்புத்தான் எல்லா கிராமங்களிலும் கிடைத்தது!'' என்கிறார், மற்றொரு மாவட்டப் பெண் ஒருங்கிணைப்பாளரான ராதா.

எப்படிப்பட்ட புத்தகங்களை கிராம மக்களிடம் கொடுக்கிறார்கள்?

''சுகாதாரம், சட்டம், வரலாறு, பஞ்சாயத்து ராஜ்... என்று பல விஷயங்கள் பற்றிய விவாதங்களைக் கிராம மக்கள் தொடங்க வேண்டும் என்பதற்கான முதல் படியாகவே எங்கள் புத்தகங்களை உருவாக்கினோம். முன்பு இம்மாவட்டத்தின் ஆட்சித் தலைவராயிருந்த கே. என். வெங்கட்ரமணன் அவர்கள் கிராம மக்களுக்குப் புரிகிற வகையில் சாமர்செட் மாம் புத்தகங்களைக் கூட எளிய தமிழில் மொழிபெயர்த்திருந்தார். இவற்றோடு, நாட்டுப்புறக் கதைகள், பழமொழிகள், விஞ்ஞானம், மருத்துவம் என்று அனைத்தையும் அறிமுகப்படுத்துகிற அளவிலான புத்தகங்கள் எங்கள் புத்தகங்கள். எங்கள் புத்தகங்களை தேசிய எழுத்தறிவு கமிஷனே பாராட்டியிருக்கிறது. ஆங்கிலத்திலும் இந்தியிலும் கூட எங்கள் நூல்களை மொழிபெயர்த்திருக்கிறார்கள்!'' என்கிறார் மாவட்ட அறிவொளி இயக்கத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளரான ச. மாடசாமி.

விருதுநகரிலிருந்து : **அகிலா நியூஸ்**



* நடைப்பயணத்தில் சிறுவர்களும் உற்சாகமுடன் கலந்து கொண்டனர்

கிரெடிட் அனாலிசிஸ் அண்ட் ரிசர்ச் லிமிடெட் அமைப்பின் மதிப்பீட்டுக் குழு, "CARE A (FD)" மதிப்பீட்டை வழங்கியதைத் தொடர்ந்து, சான்மேக் பிக்சட் டெபாசிட்டுகளுக்கு சாதகமாக மேலும் பல சிறப்புகள் சேர்ந்துள்ளன. அசல் மற்றும் வட்டிக்கு பாதுகாப்பு போதிய அளவில் உள்ளது என்று கணிக்கப்பட்டுள்ளது. எனவே எங்கள் மீது நீங்கள் வைத்துள்ள நம்பிக்கை சரியானதே என்று புரிந்து கொண்டிருப்பீர்களே?

டெபாசிட்தாரர்கள் கொண்டுள்ள இந்த முழுமையான நம்பிக்கையின் காரணத்தால்தான் மற்றவர்கள் வியக்கும் வண்ணம் சான்மேக் இந்த அளவுக்கு உயர்ந்து பல சாதனைகளையும் படைத்திருக்கிறது.

பொது டெபாசிட்டுகள் ரூ. 25 கோடிக்கு உயர்ந்துவிட்டன ■ நிகர மதிப்பு ரூ. 9.5 கோடியாக உயர்ந்துள்ளது. ■ ஈடுபடுத்தப்பட்டுள்ள மொத்த நிதியானது ரூ. 50 கோடியைத் தாண்டிவிட்டது. ■ EPS இப்போது ரூ.5 (ஆண்டுக்கணிப்பிலானது) என்ற அளவில் உள்ளது. ■ கிளைகளின் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்துள்ளது.

இந்த CARE A (FD) மதிப்பீட்டுடன், தன் தகுதிக்கு உரிய மற்றும் ஓர் அங்கீகாரத்தை சான்மேக் பெறுகிறது. அத்துடன் இதனுடைய டெபாசிட் திட்டங்கள், சிறந்த பாதுகாப்புக்கான மற்றும் ஒரு முத்திரையைப் பெறுகின்றன.

<u>கிளைகள் :</u> சென்னை: அண்ணா நகர் மேற்கு ✆ 6214454, 6262219. அண்ணா சாலை ✆ 8520921. அசோக் நகர் ✆ 4824525, 4824624, 4824625, 4824757. டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை ✆ 8258637, 8240051. மயிலாப்பூர் ✆ 4992488. புரசைவாக்கம் ✆ 6425036, தி. நகர். ✆ 8278515 தாம்பரம் ✆ 2366327. கோயம்புத்தூர் ✆ 446375. கடலூர் ✆ 22728. கும்பகோணம் ✆ 24844. மதுரை ✆ 23334.

14



வானம் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு மேகங்களை வேறு திசைக்குத் திருப்பி வெளிச்சமான போது, சொர்ணலட்சுமியும் கதிரேசனும் மீண்டும் ஒருமுறை பார்த்துக் கொண்டார்கள். பிரச்னைகள் இல்லாத முகத்தோடு... சுத்தமான முகத்தோடு எதிரும் புதிருமாய் நாற்காலியில் அமர்ந்து கொண்டார்கள்.

"என்னை மன்னிச்சிடணும்."

"எதுக்கு?"

"நான் பாட்டுக்கு டிரைவர்னு நினைச்சிட்டு ஏதேதோ பேசிட்டேன். அக்கா துண்டு நீட்டினப்பதான் தெரிஞ்சிச்சு. அடடா... தப்புப் பண்ணிட்டோம்னு அப்பவாவது சும்மா இருந்திருக்கலாம 'இவ்வளவு நல்ல துண்டை எதுக்கு டிரைவருக்குக் குடுக்கறே'ன்னு அக்காகிட்ட கேட்டேன். அக்கா 'யாருடி டிரைவர்!'னு கத்திட்டாங்க. உருண்டு பொறண்டதெல்லாம் சொல்லலை. தயவு செஞ்சு நீங்களும் சொல்ல வேணாம்."

கதிரேசன் மெல்லச் சிரித்தான்.

உருண்டு புரண்டதைச் சொல்ல வேண்டாம் என்று கெஞ்சுகிறபோதே அதைக் கதை போல சின்னம்மாவிடம் சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

"ஏன் சின்னம்மா... நீ பெரிய கேங் லீடராம்! உனக்குக் கீழே பத்து இருபது பொண்ணுங்க இருக்குமாம். எல்லாருக்கும் கறிகுழம்பு வைக்கிறது சொல்லித் தருவியாம். உங்கிட்ட தயாரான பொண்ணுங்க எங்க போனாலும் கொடி கட்டிப் பறக்குமாம்" - கேட்க ஆசை வந்தது. கேலி செய்ய முனைப்பு வந்தது. ஆனால் பகவதி மெல்ல முகம் பொத்திக் கேவ ஆரம்பித்ததும் சட்டென்று விழித்துக் கொண்டான்.

துக்கம் கேக்க வேணாமா? சரசரன்னு வந்து சரசரன்னு ஓடிப் போயிட்டாங்க.

பாலகுமாரன்


இவங்களும் அப்பாவோட வாழ்ந்தவங்க தானே. பேசி சிரிச்சு, படுத்து வாழ்ந்து... அம்மாவோட துக்கம் அப்படியே இருக்குமில்ல. நான் போய் இந்தப் பொண்ணோட சிரிச்சிட்டு உக்காந்திருக்கேனே...

சட்டென்று எழுந்து கொண்டான். கதவுக்குப் பின்னே பகவதி சுவரில் சாய்ந்து கொண்டிருக்க அவன் நிலைப்படியைப் பிடித்து நின்றான்.

"சின்னம்மா..." என்று தழுதழுத்த குரலில் அழைத்தான்.

"இந்த ஜென்மத்துக்கு இது போதும்டா சாமி... நீ வாயத் திறந்து சின்னம்மான்னு கூப்பிட்டா போறும். இன்னும் பல ஜென்மத்துக்கு உங்க குடும்பத்துக்கு உழைச்சுப் போடுவேன்."

"அட... என்னது... என்னென்னவோ பேசிக்கிட்டு... எங்கம்மா உங்க பேர்ல எவ்வளவு பிரியமா இருக்காங்க. உங்களை யாரும் ஒரு வார்த்தை கூட சொல்லிடக் கூடாதுங்கறதுல எத்தனை கவனமா இருக்காங்க. இப்பவும் கூட ஒரு வார்த்தைச் சொல்லி அனுப்பிச்சாங்க. அழுத கண்ணும் சிந்தின



> “நீ வாயத் திறந்து சின்னம்மான்னு கூப்பிட்டா போதும். இன்னும் பல ஜென்மத்துக்கு உங்க குடும்பத்துக்கு உழைச்சுப் போடுவேன்.”

சூக்குமா இருக்க வேணாம். உடம்பைப் பார்த்துக்கச் சொல்லு. எப்ப காசு வேணும்னாலும் கேக்கச் சொல்லு. வெளிய எங்கயும் கடன் வாங்க வேண்டாம்னு சொல்லச் சொன்னாங்க. இது தவிர தனியா உங்களண்டை பேசறதுக்கு விஷயம் இருக்கு.''

அவன் திரும்பி சொர்ணலட்சுமியைப் பார்த்தான்.

''உன் கையால அப்பா படத்துக்குக் கற்பூரத் தட்டைக் காமிச்சுட்டு சாப்பிட உட்கார். பேசறதை நாளைக்குப் பேசிக்கலாம்.''

இரண்டடிக்கு ஒரு அடியில் அப்பாவின் முழங்கால் வரையிலான போட்டோ சட்டமிடப்பட்டிருந்தது. அந்த போட்டோவில் பகவதியை அணைத்தபடி அவர் நின்றிருக்க வேண்டும். பகவதியை எடுத்துவிட்டு அங்கே ஒரு உயரமான ஸ்டூலை வரைந்திருந்தார்கள். ஸ்டூல் மீது புத்தகங்கள் அடுக்கி வைத்தது போல் வரையப்பட்டிருந்தது. பகவதியின் தோள் மீது கை வைத்துக் கொண்டிருந்த சந்தோஷம் முகத்தில் தெரிந்தது.

அருமையான சிரிப்பு. கால் அகட்டிய அட்டகாசமான போஸ் அது.

கதிரேசன் கற்பூரம் காட்டினான். வாழைப் பழம், வெற்றிலையைச் சுற்றித் தண்ணீரைத் தெளித்து அப்பாவுக்கு நைவேத்தியம் செய்தான்.

பகவதி விழுந்து கும்பிட்டாள். சொர்ணலட்சுமியையும் விழுந்து கும்பிடச் சொன்னாள். ''சொர்ணலட்சுமி ரெண்டுங்கெட்டான். நான் நிறைய பொண்ணுங்களுக்கு நிறைய விஷயங்கள் சொல்லிக் கொடுத்திருக்கிறது வாஸ்தவம்தான். இதுல ஒண்ணும் கத்துக்காத வெறுமனை ஓட்டிட்டுத் திரிஞ்சவ சொர்ணலட்சுமி. அப்பவே வலுவான பொண்ணு. இப்ப வளர்ந்து இன்னும் வலுவாயிட்டா. அவ பேசினது பெரிசு பண்ண வேணாம்.''

''அடட தப்பாவே ஒண்ணும் பேசலியே... மாடு ஓட்டறவனா நீ?''ன்னு கேட்டா. பள்ளத்துல உருண்டு விழுந்தவங்க எல்லாரும் கேக்கறதுதானே.''

''பள்ளமா? எந்த பள்ளம்?''

''ஆனைப்புல்லு மண்டிக் கிடக்கே... அங்கதான் சறுக்கிட்டம்.''

''ஐயோ எப்படி?''

''கார் கதவுல முட்டினாங்க. கதவு பிளந்துக்கிச்சு. நேர நாப்பதடி. போயிட்டாங்க.''

''ஐயோ அப்புறம்?''

''பழக்கமில்லாதவங்க மேல வர முடியுமா? நானும் இறங்கினேன். மொள்ள மொள்ள மேல வந்தோம்.''

''இவளையும் தூக்கிட்டா மேல வந்தே?''

''தூக்கறதெல்லாம் இல்லை. மாட்டுக்குப் பின்னால உருளை கட்டி ரோடு போட

என்னுயிரும் நீயல்லவோ

இழுப்பாங்களே அந்த மாதிரி இழுத்தாந் தேன்."

"என்னா கூத்துடி இது! படாத இடத்துல பட்டிருந்தா என்ன ஆயிருக்கும்?"

சொர்ணலட்சுமி மிரண்டாள்.

சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்ட மூன்றாவது நிமிடம் சகலமும் சொல்லி விட்டானே என்று புழுங்கினாள்.

"இவரு உலுக்கி உலுக்கி வண்டி ஓட்டினாரு. நான் கதவுல போய் இடிச்சுக்கிட்டேன். கதவு டபக்குன்னு திறந்துக்கிச்சு. கீழ வுழுந்ததுதான் தெரியும். நைலக்ஸ் புடைவையா... ரொம்ப தூரம் போய்தான் நின்னேன்."

பகவதி அவளைக் கவனிக்கவேயில்லை. "எங்களா அடிபட்டுதா கதிரேசா?"

அவன் பக்கம் திரும்பினாள். தலையை அழுத்தி முதுகு தடவினாள்.

"எனக்கு ஒண்ணுமில்ல சின்னம்மா. சொர்ணலட்சுமிதான் தடுமாறி வுழுந்துருச்சு. நான் எப்படி கேக்கறதுன்னு தயங்கி, பேசாத வுட்டுட்டேன். எங்களா அடிபட்டிருக்கா கேளு."

அதுவரை....

'சுந்தையானாலும்
சுசக்கிக்
கட்டு.'
காயும்வரை எதைக்
கட்டுவது...?
- பா. ஜெயக்குமார்



"என்னடி?" பகவதி திரும்ப,

"இடுப்பில் லேசாய் வலி இருக்கிறது" என்று சொர்ணலட்சுமி சொன்னாள்.

"ராத்திரி தைலம் தொடச்சுவுடறேன். கதவு தொறக்கும்படியாவா கார்ல இடிப்பாங்க. மலைப்பாதைல ஏறும் போது வண்டி அலைபாயும்தான். உறுதியா உக்கார வேணாமா? உன் உடுப்பெல்லாம் எங்க?"

"வண்டிலயே இருக்கு."

"போ. போய் எடுத்தா."

"என் பொட்டி கூட இருக்கு" கதிரேசன் எழுந்தான்.

"இரு. இரு. நீ எதுக்குப் போற? விநாயகம்! ஐயா பொட்டிய எடுத்தா. அதத் தவிர உன்ன ரெண்டு பேக் இருக்கு. அதையும் எடுத்தா."

குடையோடு வீட்டின் வலப்பக்க வராந்தாவில் உட்கார்ந்திருந்தவன் சரட்டென்று எழுந்து நின்றான். உள்ளே வந்து கார் சாவி வாங்கிக் கொண்டான்.

"வேறென்னவோ முக்கியமா சொல்லணும்னியே" - பகவதி கதிரேசனை விசாரிப் பதைக் குறித்துக் கொண்டான்.

"வாங்க... அந்தப் பக்கம் போயிடுவோம்." கதிரேசன் வீட்டின் வேறு பக்கத்துக்கு நகர்வதைக் குறித்துக் கொண்டான்.

டிக்கியைத் திறந்து பெட்டியை எடுத்தான். எடுக்கும் முன்பு திறக்க முடியுமா என்று பார்த்தான். பெட்டியைத் திறக்க முடியவில்லை. பெட்டியைத் தலையில் வைத்துக் கொண்டு வீடு நோக்கி நடந்தான். கூடம் தாண்டி உள்ளே அறையிலே இறக்கி வைத்தான். பகவதியைத் தேடினான். வேறு அறையில் அவர்கள் பேச்சுக் குரல் கேட்பது கேட்டு அறைவாசலில் போய் நின்றான்.

"நல்லா சொல்லித் தரேன். ஒவ்வொரு சூட்சுமமும் சொல்லித் தரேன். ஆனா இங்க இருக்கறவங்ககிட்ட எஸ்டேட் வேலை கத்துக்க வந்திருக்கேன்னு மறந்து போயும் சொல்லிடாதே. எல்லாம் தெரியும்கற மாதிரியே இரு. யார் அங்க?"

"நான்தாம்மா."

"என்ன வேணும்?"

"ஐயா பொட்டி வச்சுட்டேன். வேறெதோ ரெண்டு பை சொன்னீங்களே."

"ரெண்டு பை வண்டி பின் சீட்ல இருக்கு... சொர்ணலட்சுமியிது" கதிரேசன் கட்டளையிட, விநாயகம் மெல்ல நகர்ந்தான்.

கதவு திறந்து, ஜிப் வைக்கப்பட்ட பையைத் திறந்து பார்த்தான். துணிமணிகள் தெரிந்தன. முகர்ந்து பார்த்தான். சோப்பு வாசனை அடித்தது. விநாயகத்திற்கு அந்தப் பையிலிருந்து எதாவது திருட வேண்டுமென்று தோன்றவில்லை. ஆனால் திறந்து அதில் இருக்கிறது என்ன என்று பார்க்க வேண்டும் என்று தோன்றியது. மறுபடி மூடினான். பையைத் தூக்கியபடி அறைவாசலில் நின்றான்.

"எதுக்கு பன்னிரண்டரை லட்சம்? பன்னிரண்டரை லட்சம் கொடுக்கும்படியா அவ்வளவு பெரிய வியாபாரம் இங்க என்ன இருக்கு? செட்டியார் புள்ளை தனிச்சு வியாபாரம் பண்ணணும். அது நல்ல விஷயம் தான். ஆனா நீயும் ஏன் ஏலக்காய்ல இறங்கற? நாப்பது ஏக்கர் ஏலக்கா இருக்கு. அப்பா சொத்து - நீ வேறு எதுனா செய்."

"வேறென்ன செய்றது. நமக்குத் தெரிஞ்ச தொழில் ஏலக்காயில்ல..."

"இறங்கினதும் தானா தெரிஞ்சி போயிடும். இதே உயரத்துக்கு இன்னொரு பொருள் வரும். காப்பி. இந்தப் பக்கம் ரொம்ப நல்லா வருது. பாடு கம்மி. பாடு கம்மின்றதுனாலேயே அக்கறையில்லாம வளர்க்கறாங்க. டக்குன்னு காப்பில இறங்கிட வேணாம். முதல்ல பயிர் பற்றி விசாரிப்போம். என்ன ரகம் என்ன விலைக்குப் போகுதுன்னு பார்ப்போம். அதற்குப் பிறகு எஸ்டேட் வருதான்னு கேப்போம். காப்பி

மோகமுள் ஒரு கிளாஸிக் படம். அதுதான், ரிலீசுக்கு முன்பு, ப்ரிவியூவாகவே நூறு காட்சிகள் ஓடி விட்டது!

தேசிய விருது பெற்ற தமிழக கலைஞர்களுக்கு பாலு ஜுவல்லர்ஸ் நடத்திய பாராட்டு விழாவில் பேராசிரியர் பெரியார்தாசன் கூறியது.

- மௌலி

வாங்கற மாதிரி யாருக்கும் சொல்லாத... யாரது?" மறுபடி வாசல் பார்த்து வினவினாள். விநாயகம் என்று தெரிந்ததும் முகம் கனித்தாள்.

"வந்து நின்னா குரல் குடு. திருடன் மாதிரி சத்தமில்லாம நிக்காத..."

"சரிம்மா... இது யாருது. ஐயாவுதா? உங்க தங்கச்சியுதா..." எதுவுமே தெரியாதவன் போல் வினவினான்.

"சொர்ணலட்சுமி உங்க தங்கச்சியா?" கதிரேசன் இடையில் புகுந்தான்.

"பொதுவா அக்கான்னு கூப்புடுது. அவ என் தம்பி பொண்டாட்டிக்குச் சொந்தம்."

"ஒண்ணு விட்ட தங்கச்சின்னு பஸ்ஸுல சொல்லுச்சே?" - விநாயகம் மிகுந்த ஆச்சரியத்தோடு பேசுவது போல் நடித்தான்.

"உங்கிட்டயா சொல்லுச்சு?"

"எங்கிட்ட சொல்லலை. முன் சீட்ல உக்காந்து டிரைவர், கண்டக்டர்கிட்ட பேசிட்டு வந்துச்சு. அப்ப கேட்டேன்."

"டிரைவர் கண்டக்டர் கிட்டயா? முன் சீட்ல உக்காந்துக்கிட்டா..?" கதிரேசன் வருகைக்குச் சந்தோஷப்பட்ட பகவதி, சொர்ணலட்சுமி நுழைந்தவுடனே பிரச்னைகள் வருவதைப் பற்றிக் கவலைப்பட்டாள். "போ... போய் உன் வேலையைக் கவனி" - விநாயகத்திடம் சீறினாள்.

"இந்தான் மடையனாச்சே சின்னம்மா."

"இல்லியே... வேலைல ரொம்ப கெட்டிக்காரன். ஏலக்கா சூடு பண்ணி சுருக்கணும். நேரம் தெரிஞ்சு ஆறப் போடணும். பாதி சூட்ல கம்பி வலைல தேய்க்கணும். தூசு எடுக்கணும். கூட ஒரு ஆளை வச்சுக்கினு மடமடன்னு முடிப்பான்."

"இவன் ரொம்ப அவசியமா நமக்கு?"

"அப்பனே... என்ன கேக்கற...?"

"இவனைக் கண்டா எனக்குப் புடிக்கலை. ஒரு திருட்டு முழி."

"மலைலயே பொறந்து மலைலயே வளர்ந்தவன். நாகரீகம் தெரியாது. மலங்க மலங்க முழிப்பான். மக்கு மாதிரி பேசுவான். மத்தபடி கெட்ட புத்தி கிடையாது. உங்கப்பா மதுரைக்குப் போயிட்டா மாசக் கணக்கா இவன்தான் எனக்குக் காவல் தெரியுமா?"



சொர்ணலட்சுமியை பகவதி உரக்க அழைத்து, தட்டு வைத்தாள். சொர்ணலட்சுமிக்கும், கதிரேசனுக்கும் சுடச்சுட சோறு பரிமாறினாள். "அஞ்சு அஞ்சரைக்கு இருட்டிடும். கொஞ்ச நேரம் உக்காந்து ரேடியோ கேட்டுட்டுப் படுத்து தூங்குங்க. காலைல நாலு மணிக்கு எழுப்பறேன்."

திணறத் திணறச் சாப்பிட்டுவிட்டு டிரான்சிஸ்டர் ரேடியோவை வாசற்படியில் வைத்து சினிமா பாட்டு கேட்டபடியே உட்கார்ந்து கொண்டிருக்க, இருட்டு மெல்ல கவிந்தது. தரையில் ஈரத்தைக் காற்று உதற மெல்ல குளிர் கௌவத் துவங்கியது. நூறு வாட்ஸ் பல்புகள், இருபத்தைந்து வாட்ஸ் பல்புகள் போல சிணுங்கி, சோம்பலாய் எரிந்தன.

"மலைல அப்பப்ப வோல்டேஜ் ட்ராப் வந்துரும். ராத்திரி பன்னிரண்டு மணிக்கு மேலதான் பளிச்சுன்னு எரியும்."

பூச்சிகள் ரீங்காரம் அதிகரித்தது. இரண்டு மூன்று பூச்சிகள் முகத்தைத் தாக்கின. எங்கேயோ தமுக்கு ஓசை கேட்டது.

கண்ணாடி கதவுகளைச் சார்த்தி விட்டு அறைக்குள் அடைந்து கொண்டார்கள். மணி ஏழு பத்து. மதுரை இப்போதுதான் உச்ச வேகத்துக்குத் தன்னைத் தயார்ப் படுத்திக் கொள்ளும் நேரம். இங்கு எல்லாம் முடிந்து தூங்கப் போயாகி விட்டது. எதாவது படிக்கலாமா... வாரப் பத்திரிகை பிரித்துப் படிக்க, பத்து வரிகளுக்கு மேல் மனம் போகவில்லை. நடு இரவில் பசித்தால் என்ன செய்வது? சின்னம்மாவிடம் பிஸ்கட் பழம் இருக்கிறதா என்று கேட்க அறையை விட்டு வெளியே வந்தான். சமையற்கட்டில் எட்டிப் பார்த்தான். சொர்ணலட்சுமி அவனுக்கு முதுகு காட்டி நின்று கொண்டிருந்தாள். அந்த முதுகில் மூன்று இலைகள் ஒட்டப்பட்டிருந்தன. நான்காவது இலைக்கு எண்ணெய் தடவி சின்னம்மா வாட்டிக் கொண்டிருந்தாள். கதிரேசன் பின்னடைந்தான். தலைகுனிந்து கொண்டான்.

கதிரேசன் பாம்பு மாதிரி அறைக்குள் போனான். பாம்பு மாதிரி மூச்சு விட்டான். டிரான்சிஸ்டர் ரேடியோ 'கட்டித் தங்கம் வெட்டி எடுத்து' என்று கத்தி பாடிக் கொண்டிருந்தது. 'காதலென்னும் சாறு பிழிந்து' என்று தொடர்ந்து பாடியது. அந்தப் பாட்டிலிருந்தது காதலா காமமா என்று கதிரேசனுக்குத் தெரியவில்லை. 'வருவாயா வேல் முருகா என் மாளிகை வாசலுக்கே' - அடுத்த பாட்டு தொடர்ந்தது.

'எவ்வளவு பெரிய மாளிகை...!' சொர்ணலட்சுமியை நினைத்துக் கொண்டு கதிரேசன் தனக்குத்தானே பேசினான்.

(தொடரும்)

உண்மைகள் உறங்கட்டும்

ராஜேஷ்குமார்

கஜபதி தயக்கமாய் ரிஸீவரை எடுத்து, காதுக்குக் கொடுத்த படி - டயலில் எண்களைத் தட்டினார்.

மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது.

"ஹலோ..."

"மிஸ்டர் வாத்சல்யன் ப்ளீஸ்."

"நீங்க...?"

"நான் கஜபதி..."

"ப்ளீஸ்... பி... ஆன் த லைன்..."

கஜபதி காத்திருந்தார்.

அரை நிமிஷ அவகாசத்துக்குப் பின் வாத்சல்யனின் குரல் கேட்டது.

"ஹலோ..."

"வணக்கம். நான் கஜபதி..."

"கஜபதி...?"

"ரமாவோட அப்பா..."

"ஓ... நீங்களா...? வணக்கம். ஸாரி லைன்ல உங்களைக் காக்க வெச்சுட்டேன். இன்னிக்கு ஆபீஸ் வொர்க் ரொம்பவும் டைட். ட்யூ டு இயர் எண்டிங்..."

"தொந்தரவு கொடுத்துட்டேனா...?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. நானே உங்களுக்கு போன் பண்ணணும்ன்னு நினைச்சிட்டிருந்தேன். வேலை மும்முரத்துல முடியலை."

டெலிபோனில் ஒரு ஐந்து விநாடிகளுக்கு வேண்டாத நிசப்தம் நிலவ - அதை கஜபதி கலைத்தார்.

"ரெண்டு நாள்ல தகவல் தர்றதாச் சொன்னீங்க?"

"வாஸ்தவந்தான்..."

"எம் பொண்ணு ரமாவை உங்க பையனுக்குப் பிடிச்சிருக்கா இல்லையா...?"

"உங்க பொண்ணைப் பார்த்த அன்னிக்கே ராத்திரி பையன் வேலை விஷயமா... அவசரமா... டெல்லி போயிட்டான். அவன்கிட்ட எதுவும் பேச முடியலை. எப்படியும் இந்த வாரக் கடைசிக்குள்ளே ஊர் திரும்பிடுவான். வந்ததும் கலந்து பேசிட்டு... உடனே முடிவைச் சொல்லிடறேன்."

"இதை நீங்க தரகர் மூலமாச் சொல்லி விட்டிருந்தா நான் கொஞ்சம் டென்ஷன் இல்லாம இருந்திருப்பேன்..."

"மன்னிக்கணும்... தரகர் குமாரசாமி நாலைஞ்சு நாளா ஊர்ல இல்லை.. ஏதோ 'பெரிய காரியம்' ஆயிடுச்சுன்னு அவரோட சொந்த கிராமத்துக்குப் புறப்பட்டுப் போயிருக்காராம்..."

"அப்படியா...! விஷயம் தெரியாமே நான்தான் உங்களைத் தப்பா புரிஞ்சுக்கிட்டேன். உங்க பையன் டெல்லியிலிருந்து எப்ப திரும்பறார்னு சொன்னீங்க...?"



அருள்வாக்கு

நாம் ஒரு விவாஹம் செய்கிறோம், உபநயனம் செய்கிறோம், ஸீமந்தம் செய்கிறோம் என்றால், அதற்கு இரண்டு நாள் முந்தி பாஷ்யக்ஞரான வேத பண்டிதரை வரவழைத்து, அதிலே பிரயோகமாகிற மந்திரங்களுக்கு என்ன அர்த்தம், சடங்குகளுக்கு என்ன தாத்பரியம் என்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். கர்மாவைப் பண்ணுகிற போதே கேட்டுத் தெரிந்து கொள்வதென்றால் 'டயம்' [பொழுது] இருக்காது. முன்னாடியே தெரிந்து கொண்டால்தான், மனஸிலும் ஊறும்; கர்மா பண்ணுகிறபோது அதில் மனஸாரப் பிடிப்பும் இருக்கும்.

இப்போது நடக்கும் கல்யாணங்களில் ஒரு மாஸத்துக்கு முன்கூட அவகாசம் இருப்பதில்லை. யார் பாண்ட் (Band) வைக்கலாம், யார் டான்ஸ் வைக்கலாம், எப்படி ஊர்வலம் விடலாம் என்று ஏற்பாடு பண்ணுவதற்கே காலம் போத மாட்டேன் என்கிறது! எதுதான் இத்தனைக்கும் உயிர் நிலையோ, எதை வைத்துத்தான் கல்யாணமோ, அந்த மந்திரங்களையும், அவற்றைச் சொல்லி நடத்தி வைக்கும் வைதிகர்களையும்தான் கடைசி பக்ஷமாக வைத்திருக்கிறோம்! யாருக்காவது சிரத்தை ஏற்பட்டு, அவகாசமும் கிடைத்து, தான் செய்ய வேண்டிய கர்மாக்களின் மந்த்ரார்த்தங்களைத் தெரிந்து கொள்ளப் பிரியப்பட்டால், அதைச் சொல்லி விளக்குவதற்குச் சிலரையாவது தயார்ப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில்தான், வேத பாஷ்யம் சொல்லிக் கொடுத்து பரீக்ஷைகள்

"இந்த வாரக் கடைசியில..."

"உங்க பதிலை எப்போ எதிர்பார்க்லாம்?"

"பையன் டெல்லியிலிருந்து வந்த அடுத்த பத்தாவது நிமிஷம் உங்க வீட்டு டெலிபோன் மணி அடிக்கும்..."

"ரொம்ப சந்தோஷம்...."

"வேற விசேஷம் ஒண்ணுமில்லையே...?"

"இல்லை...."

"வீட்ல எல்லாரையும் கேட்டதாச் சொல்லுங்க."

பேசிவிட்டு ரிஸீவரை வைத்த வாத்சல்யன் தனக்கு எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்த தரகரைப் புன்னகையோடு பார்த்தார்.

"போன்ல யார் தெரியுமோ...?"

"தெரியும். புரிஞ்சுட்டேன்...."

"யாரு....?"

"கஜபதி...."

"நம்ம சைடிலிருந்து எந்த பதிலும் போகலைன்னதும்.... மனுஷன் பதறியடிச்சுகிட்டு போன் பண்ணிட்டார்...."

"பொண்ணைப் பெத்தவராச்சே..."

"பொண்ணு சொர்ண விக்கிரகம் மாதிரி இருக்கா. ஆனா... அவளைப் பத்தி கேள்விப்படற விஷயம் மனசுக்குச் சங்கடமாயிருக்கே..."

"எனக்கென்னமோ நீங்க கேள்விப்படற விஷயம் உண்மையா இருக்காதுன்னு படுது. ஒரு பொண்ணு லட்சணமாயிருந்தா அது நாலு பேரோட கண்ணைக் குத்தத்தான் செய்யும்..."

"யோவ் தரகு...! விஷயம் புரியாமே பேசாதே...! அந்த ரமாப் பொண்ணு அஞ்சு வருஷத்துக்கு முந்தி விஜயவாடாவில் இருக்கிற ஷ்யூர் க்யூர் மெண்ட்டல் ஹாஸ்பிடலில் ஒரு பேஷண்டா இருந்திருக்கா. விஷயத்தை என்கிட்ட வந்து சொன்னது சாதாரண ஆளில்லை... எனக்கு வேண்டப்பட்ட நெருக்கமான சிநேகிதர். அவர் பொய் பேசி நான் கேட்டதில்லை. பொண்ணோட போட்டோவைப் பார்த்ததும் அதிர்ச்சியாய் அவர் முகம் போன போக்கு இன்னும் என் கண்ணிலேயே ஒட்டிக்கிட்டு இருக்கு..."

"நீங்க அப்படி சந்தேகப்படற பட்சத்தில் பொண்ணோட அப்பா கஜபதிகிட்டேயே போய்க் கேட்டு சந்தேகத்தை நிவர்த்தி பண்ணிக்கலாமே?"

"எம் பையன் அப்படி கேட்கக்கூடாதுன்னு சொல்றானே..."

"சரி... இதுக்கு என்னதான் முடிவு...?"

"இப்போ ஒரு முடிவுக்கு வந்திருக்கோம்."

"என்ன...?"

"டெல்லியில் இருக்கிற என் பையன் கிட்ட பேசிட்டேன். இன்னிக்கு ராத்திரி ரயிலில் நீயும் நானும் விஜயவாடா புறப்பட்டுப் போறோம். ஷ்யூர் க்யூர் ஹாஸ்பிடல்ல போய்ப் பழசைத் தோண்டறோம்.

டாக்டர் புன்னம்சந்தரின் பிரத்யேக அறைக்கு வெளியே போடப்பட்டிருந்த ஃபோம் சோபாவில் புதைந்தபடி காத்திருந்தார்கள் வாத்சல்யனும் தரகரும்.

ஒரு நர்ஸ் அவர்களைச் சமீபித்தாள்.

"டாக்டரைப் பார்க்க மெட்ராஸிலிருந்து வந்திருக்கிறது நீங்கதானே...?"

"ஆமா...."

"உள்ளே போங்க... டாக்டர் உங்களுக்காக வெயிட் பண்ணிட்டிருக்கார்...."

எழுந்து போனார்கள்.

"குட்மார்னிங் டாக்டர்."

"குட்மார்னிங்... ப்ளீஸ்... பீ... ஸீட்டட்...."

நடத்துகிறோம்.

விவாஹம், உபநயனம் என்று ஒரு கர்மாவின் பெயரைச் சொல்லிப் பத்திரிகை போட்டு, அதற்காக ஊர் கூட்டி, பந்துக்களை வரவழைத்து, ஆயிரக்கணக்கில் செலவும் செய்கிறோம். ஆனால், அந்த கர்மாவுக்கு உரிய கவனத்தைச் செலுத்துவதில்லை, அதன் அர்த்தம் என்ன, தாத்பரியம் என்ன என்பதையே தெரிந்துகொள்ள முயலுவதில்லை என்றால், அது சரியேயில்லை.



அர்த்தம் செய்து தெரிந்தால்தான் பலன் ஜாஸ்தி என்று சொல்லியிருக்கிறது. கர்மாவை விட்டுவிடுகிற துணிச்சல் வராமல் இன்னமும் பண்ணிக் கொண்டிருக்கிறவர்கள், அர்த்தத்துக்கான முக்யத்துவத்தைக் கொடுக்கத்தான் வேண்டும். கர்மாவை விட்டுவிட்டால் தப்பு என்று ஏதோ ஒரு பயம் இருப்பதால் தானே, இன்னமும் செய்து வருகிறோம்? அதே மாதிரி, இதற்கு அர்த்தம் தெரியாமல் செய்தாலும் தப்பு என்ற பயம் ஏற்பட்டு, பண்டிதர் மூலமாக அதைத் தெரிந்து கொள்ள வேண்டும். கர்மாவைச் செய்கிறவர்கள் அர்த்தம் தெரிந்து செய்தாலே அதன் பலனுக்குள்ள வீரியமும் ஜாஸ்தியாகிறது.

-ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

உட்கார்ந்தார்கள்.

வாத்சல்யன் ஆங்கிலத்தில் பேச்சை ஆரம்பிக்க, புன்னம்சந்தர் புன்னகைத்தார்.

"எனக்குத் தமிழ் தெரியும்.... நான் மெட்ராஸ் மெடிகல் காலேஜ்லதான் படிச்சேன்...."

"ஈஸிட்....? கேட்கவே சந்தோஷமாயிருக்கு டாக்டர்...."

"மெட்ராஸிலிருந்து யார் என்னைப் பார்க்க வந்தாலும் தமிழ்லதான் நான் பேசுவேன்" சொல்லிவிட்டு சிரித்த புன்னம் சந்தர் கேட்டார். "சொல்லுங்க... என்ன விஷயம்.... யாரையாவது இந்த ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணணுமா...?"

"அதெல்லாம் இல்லை டாக்டர். ஒரு சின்ன என்கொய்ரிக்காக வந்தோம்."

"என்கொய்ரி...?"

"எஸ்...!" சொன்ன வாத்சல்யன் தன்து சட்டைப் பையில் வைத்திருந்த ரமாவின் போஸ்ட் கார்டு சைஸ் போட்டோவை எடுத்து புன்னம்சந்தரிடம் நீட்டியபடி கேட்டார்.

"இந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா டாக்டர்?"

புன்னம்சந்தர் போட்டோவை வாங்கிப் பார்த்தார். நெற்றி சுருங்கி மூன்று வரிகள் உற்பத்தியாகி, சட்டென்று மறைந்தன. தலை நிமிர்ந்தார்.

"எனக்கு இந்தப் பெண்ணைத் தெரியுமான்றது ஒரு பக்கம் இருக்கட்டும்; டாக்டர் தங்கள் பேஷண்டுகளைப் பற்றி வேற ஒருத்தர்கிட்டே பேசக் கூடாதுன்றது உங்களுக்குத் தெரியுமா? மெடிகல் எதிக்ஸ்..."

"அப்ப, இந்தப் பொண்ணு உங்ககிட்ட பேஷண்டா இருந்திருக்கா..."

"ஆமா, ஒரு மெண்ட்டல் பேஷண்ட். ஹைலி டிஸ்டர்ப்ட். இது ரொம்ப வருஷமாச்சே...?"

"அஞ்சு வருஷம் இருக்குமா டாக்டர்...?"

"மே... பி..." என்று தலையசைத்தார். கேட்டார் : "இப்ப எதுக்காக இந்தப் பொண்ணைப் பத்தி விசாரிக்கிறீங்க...?"

"டாக்டர்! இந்தப் பொண்ணைத்தான் என் பையனுக்குக் கல்யாணம் பண்ண முடிவெடுத்து அதுக்கான ஏற்பாடுகளை செஞ்சிட்டிருந்தேன். இனி சம்பந்தம் பேச வேண்டியதுதான் பாக்கி. எனக்கு வேண்டப்பட்ட நண்பர் ஒருத்தர்... ஹி... ஈஸ் வொர்க்கிங் ஏஸ் ஏ மெடிக்கல் ரெப். அவர் உங்க ஹாஸ்பிடல்ல இந்தப் பொண்ணை அஞ்சு வருஷம் முன்னாடி ஒரு பேஷண்டா பார்த்திருக்கிறதாச் சொன்னார். அவர் சொன்னது உண்மையா பொய்யான்னு கேட்டுத் தெரிஞ்சுக்கத்தான் இங்கே வந்தோம். இப்போ உண்மை வெட்ட வெளிச்சத்துக்கு வந்தாச்சு... ரொம்ப நன்றி டாக்டர். என் பையனை ஒரு பெரிய விபத்திலிருந்து....."

டாக்டர் குறுக்கிட்டு கையமர்த்தினார்.

"பொறுங்க...! நீங்க.. இப்ப பேசிக்கிட்டிருக்கிறது எனக்குப் புரியலை. குழப்பமா இருக்கு. இந்தப் பொண்ணை உங்க பையனுக்குக் கல்யாணம் பேச முடிவு பண்ணியிருந்தீங்களா?"

"ஆமா...."

"அப்படி.... இருக்க முடியாதே!"

"டாக்டர்... நீங்க... என்ன சொல்றீங்க...?"

"இந்தப் பெண் இப்போ உயிரோடு இல்லை. அவ செத்துப் போய் அஞ்சு வருஷமாச்சு..."

"டா...க்...டா...ர்..." வாத்சல்யன், தரகர் இரண்டு பேர்களின் முகங்களும் ஒரு பெரிய

அதிர்ச்சிக்குப் போயிற்று.

"எ... என்னது... செத்துட்டாளா...?"

"எஸ்...."

"நோ டாக்டர்... இந்தப் பொண்ணு உயிரோடுதான் இருக்கா.... போன வாரம் அவ வீட்டுக்கே போய் பெண் பார்த்தோமே...?"

புன்னம்சந்தர் புன்னகைத்தார்.

"இம்பாஸிபிள்...! இந்த போட்டோவில் இருக்கிற பெண்ணோட பேர் சென்னம்மா. விஜயவாடா ரயில்வே ஸ்டேஷனில் அஞ்சு வருஷத்துக்கு முந்தி புத்தி பேதலிச்ச நிலையில் உட்கார்ந்திருந்தாளாம். யாரோ கொண்டு வந்து இங்கே அட்மிட் பண்ணிட்டுப் போயிட்டாங்க... அவ யாரு என்னங்கிற விவரம் தெரியலை. அவளைக் குணப்படுத்திட்டா விவரம் தெரியும்னு நினைச்சு ட்ரீட்மெண்ட்டை ஆரம்பிச்சேன். ஆனா அவ குணமாகிற மாதிரி தெரியலை. ஒருநாள் ராத்திரி திடீர்னு வெறி அதிகமாகி, ஆர்டர்லிகளைத் தாக்கிட்டு ரூமை விட்டு வெளியே வந்து, ஹாஸ்பிடலுக்கு ஒதுக்குப்புறமாய் இருந்த ட்ரான்ஸ்ஃபார்மர் மேல ஏறிட்டு- யாரும் எதுவும் செய்ய முடியாத நிலைமையில நாங்க எல்லாரும் பார்த்துட்டிருக்கும்போதே - அவளை மின்சாரம் தாக்கி கரிக்கட்டையாக்கி விசிடுச்சு...."

வாத்சல்யனின் விழிகள் வியப்புக்குப் போயின.

"டாக்டர்...! இந்தப் போட்டோவில் இருக்கிறது ரமா. இண்டஸ்ட்ரியலிஸ்ட் கஜபதியோட பொண்ணு...."

"ப்ளீஸ்... வெயிட் ஏ... மினிட்..." சொன்ன புன்னம்சந்தர் எழுந்து "ரிகார்ட் ரூம்" என்று அறிவித்த பக்கத்து அறைக்குள் நுழைந்து, சற்று நேரத்தில் ஒரு ஃபைலைக் கொண்டு வந்தார். மேஜையின் மேல் வைத்துப் பிரித்தார். பழுப்பேறிய தாள்களை ஒரு ஐந்து நிமிஷ நேரம் புரட்டி, கற்றையாய்ச் சில தாள்களை எடுத்தார்.

"பாருங்க! மிஸ்டர் வாத்சல்யன். இது சென்னம்மாவோட போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட். அஞ்சு வருஷத்துக்கு முந்தினது. சென்னம்மா உயிரோடு இருந்தப்ப எடுத்த போட்டோவும், இதுலேயே ஒட்டியிருக்கு பாருங்க..."

வாத்சல்யனும் தரகரும் பார்த்தார்கள். ஆச்சர்யம் அவர்களை அள்ளிக் கொண்டது. உதடுகள் தன்னிச்சையாய் முணகின.

"ரமாவின் முகச்சாயல் அப்படியே இருக்கே."

"உடம்பு மட்டும் கொஞ்சம் மெலிவா இருக்கு..."

டாக்டர் குறுக்கிட்டார். "இந்த சென்னம்மா யாரு.. எந்த ஊரைச் சேர்ந்தவ... அவளோட அப்பா அம்மா யாருன்னு தெரிஞ்சுக்கிறதுக்காக பேப்பருக்கு போட்டோவைக் கொடுத்து விளம்பரப்படுத்தியும் பார்த்தேன். யாரும் சொந்தம் கொண்டாட வரலை. வருஷங்களும் இப்ப ஓடிப் போச்சு..."

வாத்சல்யன் புன்னம்சந்தரை ஏறிட்டார்.

"டாக்டர்...! நான் ஒரு பெரிய தப்பு பண்ண இருந்தேன். ரமாவோட முகச்சாயல் இருந்த சென்னம்மாவை இந்த ஹாஸ்பிடல்ல வெச்சு என்னோட நண்பர் பார்த்திருக்கார். ரமாதான் மெண்டல் பேஷண்டா இருக்கணும்னு நினைச்சு என்கிட்ட சொல்லப் போக, நானும் என் பையனும் குழம்பிட்டோம்."

டாக்டர் சிரித்தார்.

"குழம்பியதோடு நிறுத்திக்காமே அது உண்மையா பொய்யான்னு விசாரிக்க வந்தது ரொம்பவும் நல்லதாப் போச்சு... இல்லேன்னா ஒரு பொண்ணோட வாழ்க்கை நாசமாகியிருக்கும்...."

தரகர் தலையாட்டினார்.

"நல்லா சொன்னீங்க டாக்டர். அந்தப் பொண்ணு ரமாவைப் பார்த்தா ரவி வர்மா வரைஞ்ச மஹாலட்சுமி மாதிரி இருப்பா.. நான் ஆரம்பத்திலிருந்தே அவர்கிட்ட பொண்ணைப் பார்த்தா அப்படித் தெரியலை. அவசரப்பட்டு பொண்ணை வேண்டாம்னு சொல்லிடாதீங்கன்னு சொல்லிட்டேயிருந்தேன். இன்னிக்கு எங்க குழப்பம் தீர்ந்து போச்சு..."

வாத்சல்யன் கைகளைக் கூப்பிக் கொண்டு எழுந்தார்.



பல வாரங்களாக, கரூரிலுள்ள தொலைபேசிகள் இயங்கவில்லை. வியாபார நிறுவனங்கள் இதனால் மிகுந்த இழப்பிற்கு ஆளாயின. எனவே வியாபாரிகளும் தொழிலதிபர்களும் ஊர்வலம் வந்தனர். அவர்களில் இருவர் கறுப்புத் துணியால் மூடப்பட்டு, மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு டெலிஃபோனைத் தாங்கி வந்து, வட்டாரத் தொலைபேசி அலுவலகம் முன்பு சிதர்தேங்காய் போல் தரையில் வீசி உடைத்தனர். சிதறுண்ட பாகங்களைப் பொறுக்கி எடுத்து, குழி தோண்டிப் புதைத்து விட்டு, நீராடி வீடு திரும்பினர்.

(ஆதாரம்: ஹிந்து) –சீனி மகாலிங்கம்.

'ஒரிஜினல்' வில்லன்கள்!


• ராஜ்குமார்

ஒரிஜினல் குண்டர்களையே நடிக்க வைத்து- 'ஓம்' என்ற படத்தைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறார், கன்னட படவுலகில் 30 ஆண்டுகாலமாக மூடிசூடா மன்னனாக விளங்கும் ராஜ்குமார்! நிஜ குண்டர்களே நடித்திருப்பது படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாகிவிட்டது. மூன்று குண்டர்களில்- ஒருவரை காவல்துறையினர் ஏற்கனவே தீவிரமாகத் தேடி வருகிறார்கள்! மூன்று நிஜவாழ்க்கை வில்லன்களும்- படம் முழுவதும் அட்டகாசம் செய்துவிட்டு கடைசியில் திடீரெனத் திருந்துவதாக உறுதி சொல்கிறார்கள். படம் பல இடங்களில் சென்சார் அதிகாரிகளின் எதிர்ப்பைச் சந்தித்து 'வெட்டு'ப்பட்டிருக்கிறது. இதனால் அவர்கள் டெலிஃபோன் மிரட்டல்களைச் சந்திக்கவும் நேர்ந்தது. இவர்களுக்குப் போலீஸ் பாதுகாப்பு அதிகப்படுத்தப்பட்டுள்ளது!

படத்தின் ஹீரோ, ராஜ்குமாரின் முதல் மகன் ஷிவ்ராஜ்குமார்! இதன் டைரக்டர் உபேந்திரா சத்தம்போடாமல் அடுத்த படத்தை ஆரம்பித்து விட்டார். பெயர்: 'சென்ஸார்'!

-பார்கவி.

"ரொம்ப நன்றி டாக்டர்..."

"மேரேஜ் இன்விடேஷனை அனுப்பி வையுங்க. கல்யாணத்துக்கு வர முடிஞ்சா கண்டிப்பா வர்றேன்..."

"வர முடிஞ்சாங்கிற வார்த்தை வேண்டாம் டாக்டர். நீங்க கண்டிப்பா கல்யாணத்துக்கு வர்றீங்க... ரமாவையும் என் பையனையும் ஆசீர்வாதம் பண்றீங்க..."

விடைபெற்றார்கள்.

அவர்கள் இரண்டு பேரும் ஹாஸ்பிடல் வளாகத்தைத் தாண்டும் வரையில் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த டாக்டர் புன்னம்சந்தர் பின் மெதுவாய் நடந்து மேஜைக்கு வந்து டெலிபோனைத் தொட்டு, ரிஸீவரை எடுத்துக் கொண்டு மெட்ராஸுக்குரிய எஸ்.டி.டி. கோட் எண்களையும், டெலிபோன் எண்களையும் டயலில் தட்டினார்.

இணைப்பு உடனே கிடைத்தது.

"மிஸ்டர் கஜபதி...! நான்தான் டாக்டர் புன்னம்சந்தர் பேசறேன். நீங்க சந்தேகப்பட்டது சரிதான். ரமாவைப் பத்தி விசாரிக்கிறதுக்காக வாத்சல்யனும் தரகரும் வந்திருந்தாங்க..."

கஜபதி தவிப்பாய்க் கேட்டார்.

"டா... டாக்டர்! நீங்க என்ன சொன்னீங்க...?"

புன்னம்சந்தர் சிரித்தார். "மின்சார ட்ரான்ஸ்பார்மரில் சிக்கி அஞ்சு வருஷத்துக்கு முந்தி செத்துப் போன சென்னம்மாங்கிற அநாதைப் பொண்ணை உபயோகப்படுத்திக்கிட்டேன்.... போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்ல நான் மாற்றி ஒட்டியிருந்த பழைய ரமா போட்டோவைப் பார்த்ததும் நம்பிட்டாங்க..."

"டா... டாக்டர்..."

"சொல்லுங்க..."

"இந்த உண்மை ஹாஸ்பிடலில் வேலை செய்யற மத்தவங்க மூலமா வெளியே வந்துடாதா...?"

"வரவே வராது. அஞ்சு வருஷத்துக்கு முந்தி வேலை பார்த்த பலர் இப்போ இந்த ஹாஸ்பிடலில் இல்லை. மேலும் பேஷண்டுகளைப் பற்றி யாரிடமும் பேசக் கூடாதுன்றது இங்கே முதல் பாடம். நீங்க தைரியமா கல்யாணத்தை நடத்துங்க..."

"டா... டாக்டர்...! நீங்க எவ்வளவுதான் தைரியம் சொன்னாலும் மனசுக்குள்ளே 'திக்திக்'ன்னு இருக்கு..."

"இதோ பாருங்க கஜபதி...! உங்க பொண்ணு ரமா சேலையைக் கிழிச்சுக்கிட்டு அலைஞ்ச பைத்தியம் இல்லை. ஸ்கூல் ஃபைனலில் எதிர்பார்த்த மார்க்ஸ் வரலைங்கிற காரணத்தினால மெண்டலி டிஸ்டர்ப் பாகி யார் கூடவும் பேசாமே இருந்தா. அதைப் பைத்தியம் வகையில சேர்க்க வேண்டியதில்லைன்னு அன்னிக்கே சொன்னேன். இன்னிக்கும் சொல்றேன். இப்ப நான் சொன்ன பொய் மாப்பிள்ளை வீட்டுக்காரங்களைச் சந்தோஷப்படுத்த மட்டுமே... 'ரமா பைத்தியம் ஒண்ணுமில்லே'ன்னு நான் உண்மையையே சொல்லியிருக்கலாம். ஆனா அதுனால அவங்க குழப்பம் தீராது. ஒரு கல்யாணம் நடக்க ஆயிரம் பொய்களைச் சொல்லலாம்கிறது பழமொழி. இதுவோ அவசியமான ஒரே ஒரு பொய். ஒரு சில உண்மைகளுக்கு நிரந்தர உறக்கம் தேவை மிஸ்டர் கஜபதி..."

கஜபதி மறுமுனையில் லேசாகச் சிரித்தார்.

"உங்க உதவிக்கு ரொம்ப நன்றி டாக்டர்..."

"கல்யாண காரியங்களை கவனிங்க. உங்க சம்பந்தி என்னைக் கல்யாணத்துக்குக் கூப்பிட்டிருக்கார். கண்டிப்பா நானும் வருவேன்... ஆனா கல்யாண மண்டபத்துல என்னை நீங்களோ உங்க மனைவியோ மகளோ தெரிஞ்சதா காட்டிக்க வேண்டாம்" - சொல்லி விட்டு டாக்டர் புன்னம்சந்தர் சிரித்த சிரிப்பில் ஒரு கல்யாணத்தின் மொத்த சந்தோஷம் தெரிந்தது.

காசி குரூப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம் 25.06.95 அன்று நடைபெற்ற குலுக்கலில் வீடு பெற்ற அதிர்ஷ்டசாலிகளை காசி பில்டர்ஸ் நிறுவனம் வாழ்த்துகிறது!

We accept Fixed Deposits at the rate of 24% with incentivies.

வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலிகளின் புகைப்படங்கள் இனிவரும் அடுத்த இதழில் பிரசுரமாகும்.

''காசி குரூப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம்'' திட்டத்தில் ரூ. 1,500/- முதல் ரூ. 5,000/- வரை மாதத் தவணைகளாகச் செலுத்தி 300 முதல் 1000 சதுரடிகள் வரை உள்ள வீடுகளை குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து சொந்த வீடாக்கிக் கொள்ளலாம். மீதித் தொகையை சொந்த வீட்டிலிருந்து கொண்டே வாடகை போல் செலுத்தலாம்.

சுபமங்களா திட்டம் :

இத் திட்டத்தில் உடன் குடிபுகத் தயாரான நிலையில் உள்ள வீடுகளில் மொத்த தொகையில் ரூ. 10,000/- மட்டுமே செலுத்தி உடனே சொந்த வீட்டில் குடியேறலாம். மீதித் தொகைக்கு நாங்கள் கடன் உதவி ஏற்பாடு செய்து தருகிறோம்.

வீடு கிடைக்கும் இடங்கள் :

சென்னை கே.கே. நகர் (மேற்கு), விருகம்பாக்கம், வடபழனி, சாலிகிராமம், போரூர், நங்கநல்லூர், வளசரவாக்கம், கோடம்பாக்கம் (ரெங்கராஜபுரம் மெயின் ரோடு) ஆகிய இடங் களில் வீடுகள் கட்டித் தருகிறோம்.

வைப்பு நிதித் திட்டம் :

நீங்கள் முதலீடு செய்யும் வைப்பு நிதித் தொகைக்கு 24% வட்டியுடன் ஊக்கப் பரிசுகளும் வழங்கப்படுகிறது. மேலும் எங்களது கூட்டு வட்டி வைப்பு நிதியில் தாங்கள் செய்யும் முதலீடு 3½ ஆண்டுகளில் இரட்டிப்பாகிறது.

மேலும் விவரங்களுக்கு :

காசி பில்டர்ஸ்

மற்றும்

காசி ஹவுஸிங் & டெவலப்மெண்ட் லிமிடெட்

காசி தியேட்டர் காம்ப்ளக்ஸ்,
91, 92 ஜவாஹர்லால் நேரு சாலை,
அசோக் நகர், சென்னை - 600 083.
போன் : 4822206, 4821969, 4825606, 4825506 FAX : 044-4822206
கிளை அலுவலகம் : நெ. 13, கிழக்கு ஜோன்ஸ் ரோடு, சைதாப்பேட்டை,
சென்னை - 600 015, போன் : 456464

ஞாயிறு முழு நேர அலுவலகம் உண்டு

பார்த்திபன் கனவு

அமரர் கல்கி

31. பைரவரும் பூபதியும்

பொன்னன் சிறிதும் சத்தம் செய்யாமல் மரங்களின் இருண்ட நிழலிலேயே நடந்து சாலையருகில் சென்று ஒரு மரத்தின் மறைவில் நின்றான்.

"சித்திர குப்தா, எங்கே மகாப் பிரபு?" என்று மாரப்பன் கேட்டது பொன்னன் காதிலே விழுந்தது. பிறகு, பின்வரும் சம்பாஷணை நடந்தது.

"அய்யனார் கோவிலில் இருக்கிறார். என்னை இங்கே இருந்து உங்களுக்கு வழி காட்டி அழைத்து வரும்படி சொன்னார்.... ஆமாம், அவன் எங்கே?"

"எவன்?"

"அவன்தான். பல பெயர் கொண்டவன்... இரத்தின வியாபாரி... தேவசேனன்... உம்முடைய தாயாதி- ஹிஹிஹி" என்று குள்ளன் கீச்சுக் குரலில் சிரித்தான்.

"அவனா? ஹா ஹா ஹா!...." என்று மாரப்பனும் பெருங்குரலில் சிரித்தான்.

அந்த நள்ளிரவில் அவர்கள் இருவரும் சிரித்த சிரிப்பின் ஒலி பயங்கரமாகத் தொனித்தது. மரங்களில் தூங்கிக் கொண்டிருந்த பட்சி ஜாதிகளை எழுப்பி விட்டது. சில பறவைகள் சிறகுகளை அடித்துக் கொண்டன. வேறு சில பறவைகள் தூக்கக் கலக்கத்தில் பீதியடைந்து தீனக் குரலில் சப்தித்தன.

"அவன் பத்திரமாக யிருக்கிறான். நீ கவலைப்படாதே. அடே! அன்றைக்கு அந்த இரத்தின வியாபாரிக்கு வழி காட்டிக் கொண்டு போனாயே, அந்த மாதிரிதான் எனக்கும் வழி காட்டுவாயோ?" என்று கூறி மாரப்பன் மறுபடியும் உரத்த குரலில் சிரித்தான்.

சித்திர குப்தன் கூறிய மறுமொழி பொன்னன் காதில் விழவில்லை. மீண்டும் மாரப்பன், "ஓஹோஹோ! எனக்கு வழிகாட்டி அழைத்து வரச் சொன்னாரா? எங்கே? அழைத்துப் போ, பார்க்கலாம்" என்று சொல்லி தன் கையிலிருந்த சவுக்கைச் சடீரென்று ஒரு சொடுக்குச் சொடுக்கினான். சவுக்கின் நுனி சித்திரகுப்தன் மீது சுளீரென்று பட்டது. சவுக்கு சொடுக்குகிற சத்தத்தைக் கேட்டதும் குதிரை பிய்த்துக் கொண்டு பாய்ந்து சென்றது.

குள்ளன் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே பின்னால் விரைவாகச் சென்றான். அவன் இவ்வளவு வேகமாக நடக்க முடியுமென்பதைக் கண்ட பொன்னனுக்கு ஆச்சரியமாயிருந்தது. அவனைச் சற்றுத் தூரத்தில் பின் தொடர்ந்து ஓட்டமும் நடையுமாக பொன்னனும் போனான்.

ஒரு நாழிகை தூரம் சாலையோடு கிழக்கே போன பிறகு, சாலையில் குதிரை நிற்பதும், பக்கத்தில் மாரப்பன் நிற்பதும் தெரிந்தது. சித்திரகுப்தன் மாரப்பனைப் பார்த்து, "ஏன் நிற்கவேண்டும்? போவதுதானே?" என்று கேட்க, "ஏண்டா, காட்டுப் பூனை! இருட்டு ராஜாவாகிய நீ வழிகாட்டிதான் இனிமேல் போக வேண்டும்" என்றான் மாரப்பன்.

"ஆகா! வழி காட்டுகிறேன். ஆனால் காட்டுப் பூனையிடம் நீ சற்று ஜாக்கிரதை யாகயிரு. விழுந்து புரண்டினாலும் புரண்டி விடும்!" என்று சொல்லிவிட்டுக் குள்ளன் சாலைக்கு வலது புறத்தில் புதர்களும் கொடிகளும் மண்டிக் கிடந்த காட்டில் இறங்கிப் போகலானான்.

பொன்னனுக்கு அவர்கள் எங்கே

போகிறார்கள் என்பது இப்போது சந்தேக மறத் தெரிந்து விட்டது. பாழடைந்த அய்ய னார் கோவிலுக்குத்தான் அவர்கள் போகி றார்கள். செடி கொடிகளில் உராய்வதினால் சத்தம் கேட்கக் கூடுமாதலால் பொன்னன் சற்றுப் பின்னால் தங்கி அவர்கள் போய்க் கால் நாழிகைக்குப் பிறகு தானும் அவ் வழியே சென்றான்.

நள்ளிரவில் அந்தக் காட்டு வழியே போகும் போது பொன்னனுக்கு மனத்தில் திகிலாய்த்தானிருந்தது. திகிலை அதிகப் படுத்துவதற்கு ஆந்தைகள் உறுமும் குரலும் நரிகள் ஊளையிடும் குரலும் கேட்டன. மரம், செடிகள் அசைந்தாடும் போதும், தரையில் கிடந்த இலைச் சருகுகளின் சரசர வென்னும் சத்தம் கேட்கும்போதும் பொன் னனுக்கு என்னவோ செய்தது. ஆனால் ஏதோ ஒரு முக்கியமான சம்பவம் நடக்கப் போகிறது - முக்கியமான இரகசியத்தைத் தெரிந்து கொள்ளப் போகிறோம் - என்ற ஆவலினால் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அய்யனார் கோயில் உள்ள திசையை நோக்கிச் சென்றான்.

சற்று நேரத்துக்கெல்லாம் தூரத்தில் ஒரு தீவர்த்தியின் வெளிச்சம் தெரிந்தது. அது ஐயனார் கோயில்தான். கிட்ட நெருங்க நெருங்க கோயிலுக்கு முன்னால் வைத் திருந்த பிரமாண்டமான வீரர்களின் சிலை களும் மண் யானைகளும், குதிரைகளும் தீவர்த்தி வெளிச்சத்தில், கோரமாகக் காட்சி யளித்தன. இந்த ஏகாந்தக் காட்டுப் பிரதேசத் தில் உள்ள பாழடைந்த கோவிலுக்குப் பட்டப் பகலில் வந்தபோதே பொன்னனுக் குத் திகிலாயிருந்தது. இப்போது கேட்க வேண்டியதில்லை. கோயிலின் வாசற் படிக் கருகில் பொன்னன் கண்ட காட்சி அவ னுடைய திகிலை நூறு மடங்கு அதிகமாக் கிற்று. அங்கே, புராணங்களில் வர்ணித்திருப் பது போன்ற கோர ராட்சஸ ரூபமுடைய ஒருவன் கையில் தீவர்த்தியுடன் நின்று கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் நெடிய கம்பீர உருவமும் வஜ்ரசரீரமும்



கொண்ட மகா கபால பைரவர் நின்று கொண்டிருந்தார். தீவர்த்தியின் சிவந்த ஒளியில் அவருடைய நெற்றியில் அப்பியிருந்த சந்தனமும் குங்குமமும் இரத்தம் மாதிரி சிவந்து காட்டின. அவருடைய கழுத்தில் தொங்கிய கபால மாலை பொன்னனுக்குக் குலை நடுக்கம் உண்டாக்கிற்று. அவன் நடுங்கிக் கொண்டே கோயிலுக்குப் பின்புறமாகச் சென்று கோயில் வாசற்படிக்கு அருகில் இருந்த பெரிய வேப்பமரத்துக்குப் பின்னால் மறைந்து கொண்டு நின்றான். அதே சமயத்தில் சித்திரகுப்தனும், மாரப்பனும் மகா கபால பைரவரின் முன்னால் வந்து நின்றார்கள்.

"மகாப் பிரபோ!" என்று மாரப்பன் பைரவருக்கு நமஸ்கரித்தான்.


"சேனாபதி! மாதாவின் ஆக்ஞையை நிறைவேற்றினாயா? பலி எங்கே?" என்று கபால பைரவரின் பேய்க் குரல் கேட்டது.

அந்தக் குரல் - மகேந்திர மண்டபத்தின் வாசலில் அன்றிரவு கேட்ட குரல் ஏற்கெனவே பயப் பிராந்தியடைந்திருந்த பொன்னனுடைய உடம்பில் மயிர்க்கூச்சு உண்டாக்கிற்று. அடித் தொண்டையிலிருந்து — அதற்கும் கீழே இருதயப் பிரதேசத்திலிருந்து — வருவதுபோல் அந்தக் குரல் தொனித்தது. எனினும், உரத்துப் பேசிய மாரப்பனுடைய குரலைக் காட்டிலும் தெளிவாக அக்குரல் பொன்னனுடைய செவிகளில் விழுந்தது.

கபால பைரவரின் கேள்விக்கு மாரப்பன், "மகாப் பிரபோ! பலி பத்திரமாயிருக்கிறது" என்றான்.

"எங்கே? ஏன் இவ்விடம் கொண்டு வரவில்லை? காளி மாதாவின் கட்டளையை உதாசீனம் செய்கிறாயா, சேனாபதி!"

"இல்லை, இல்லை. மகாப் பிரபோ! இன்று சாயங்காலந்தான் இளவரசனைக் கைப்பற்ற முடிந்தது. உடனே இவ்விடம் கொண்டு வருவதில் பல



அபாயங்கள் இருக்கின்றன, பிரபோ! அந்த ஓடக்காரன் இங்கேதான் இருக்கிறான்...."

இதைக் கேட்டதும் மரத்தின் பின்னால் மறைந்து நின்ற பொன்னனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவனுடைய அடிவயிறு மேலே நெஞ்சுக்கு வந்து விட்டது போலிருந்தது. மாரப்ப பூபதியின் அடுத்த வார்த்தையினால் அவனுக்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது.

"... அவனைக் கைப்பற்ற முடியவில்லை. சக்கரவர்த்தியின் மகள் குறுக்கே நின்று மறித்தாள். மகாப்பிரபோ! குந்தவி தேவியும் இன்னும் இங்கேதான் இருக்கிறாள். இளவரசனைத் தப்புவிப்பதில் முனைந்திருக்கிறாள். ஆகையால் நாம் ரொம்பவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் காரியம் கெட்டுப் போய்விடும்."

மகா கபால பைரவர் இப்போது ஒரு சிரிப்புச் சிரித்தார். அந்த வேளையில் அந்தப் பயங்கரத் தொனியானது நாலா பக்கமும் பரவி எதிரொலி செய்தபோது, பல நூறு பேய்கள் ஏக காலத்தில் சிரிப்பது போலிருந்தது.

"சேனாபதி! நீதானா பேசுகிறாய்? காளி மாதாவின் கட்டளையை நிறைவேற்றப் பயப்படுகிறாயா? அதுவும் ஒரு பெண்பிள்ளைக்கும் ஒரு ஓடக்காரனுக்கும் பயந்தா?"

"இல்லை, சுவாமி, இல்லை! நான் பயப்படுவதெல்லாம் காளி மாதாவின் கைங்கரியத்துக்குப் பங்கம் வந்துவிடுமோ என்பதற்குத்தான். மகாப் பிரபோ! தாங்கள் எனக்கு இட்ட கட்டளையை எப்படியும் நிறைவேற்றுவேன். அமாவாசையன்று இரவுக்குள் பலியைக் கொண்டு வந்து சேர்ப்பேன்."

"சேர்க்காவிட்டால்?...." என்றது கபால பைரவரின் கடூரமான குரல்.

"என்னையே மாதாவுக்குப் பலியாக அர்ப்பணம் செய்வேன்."

"வேண்டாம். பூபதி! வேண்டாம். உன்னால் மாதாவுக்கு இன்னும் எவ்வளவோ காரியங்கள் ஆகவேண்டும். இந்தச் செழிப்பான தமிழகத்தில் மகா காளியின் சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது நீதான் பிரதம தளகர்த்தனாயிருக்க வேண்டும்."

"மகாப்பிரபுவின் கட்டளையையும், காளிமாதாவின் ஆணையையும் எப்போதும் சிரமேற் கொள்ளக் காத்திருக்கிறேன்."

"மாரப்பா! மாதாவுக்கு உன்பேரில் பூரண கிருபை இருக்கிறது. மேலும் மேலும் உனக்குப் பெரிய பதவிகளை அளிக்கப் போகிறாள்... இருக்கட்டும்; இப்போது எந்த இடத்தில் பலியைக் கொண்டு வந்து சேர்ப்பாய்?"

"அமாவாசையன்று முன் ஜாமத்தில் பராந்தகபுரத்தைத் தாண்டி, மகேந்திர மண்டபத்துக்கு அருகில் கொண்டு வந்து சேர்ப்பேன். அங்கே சாலை வழியில் தங்களுடைய ஆட்களை அனுப்பி ஏற்றுக் கொள்ள வேண்டும்."

"ஏன் அந்த வேலையை எனக்குக் கொடுக்கிறாய்?"

"மகாப் பிரபோ! இங்கே உள்ள ஆட்களிடம் எனக்கு முழு நம்பிக்கை இல்லை. சக்கரவர்த்தியின் கட்டளைப் பிரகாரம் இளவரசரைக் காஞ்சிக்கு அனுப்புவதாகச் சொல்லித்தான் அனுப்பப் போகிறேன். அவர்களைத் தொடர்ந்து சற்றுப் பின்னால் நான் வருவேன். தங்களுடைய ஆட்கள் வந்து வழிமறித்து இளவரசரைக் கொண்டு போக வேண்டும். ஆனால், நான் அனுப்பும் ஆட்கள் அவ்வளவு அசகாயசூரர்களாயிருக்க மாட்டார்கள். தங்களுடைய திருநாமத்தைச் சொன்னால், உடனே கத்திகளைக் கீழே போட்டுவிட்டு நமஸ்கரிப்பார்கள்."

"அப்படியே யாகட்டும், சேனாபதி! ஆனால் ஜாக்கிரதை! காளிமாதா அடுத்த அமாவாசை இரவில் அவசியம் பலியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள்!"

"இன்னொரு விஷயம் தெரிவிக்க வேணும், மகா பிரபோ!"

"சீக்கிரம் சொல்; பொழுது விடிவதற்குள் நான் ஆற்றைத் தாண்ட வேண்டும்."

"இந்த ஓடக்காரப் பொன்னனைச் சில நாளாகக் காணவில்லை. அவன் மகாராணியைத் தேடிக் கொண்டிருக்கிறான் என்று தெரிந்தது. அவனைப் பற்றி அறிய நான் ஆள் விட்டிருந்தேன். நேற்றுத்தான் அவனைப் பற்றித் தகவல் கிடைத்தது. பொன்னனும் இன்னொரு மனிதனும் குதிரைமேல் காட்டாற்றோடு கொல்லி மலைப் பக்கம் போனதாக என்னுடைய ஒற்றன் வந்து சொன்னான்..."



"ஓடக்காரன் இங்கே இருக்கிறான் என்றாயே?"

"ஆமாம்; இன்றைக்குத்தான் இங்கே வந்து சேர்ந்தான்."

"அவ்வளவுதானே?"

"பொன்னனுடன் போன இன்னொரு மனிதன் யார் தெரியுமா, பிரபோ?"

"யார்?"

"தங்களுக்கும் எனக்கும் ஜன்ம விரோதிதான்."

"என்ன? யார்? சீக்கிரம் சொல்!"

"பொய் ஜடாமுடி தரித்த அந்த போலிச் சிவனடியார்தான்."

"இதைக் கேட்டதும் மகா கபால பைரவனின் முகத்தில் ஏற்பட்ட பயங்கரமான மாறுதலைப் பார்த்து பொன்னன் திகைத்துப் போனான். ஏற்கெனவே கோரமாயிருந்த அந்த முகத்தில் இப்போது அளவில்லாத குரோதமும் பயமும் பகைமையும் தோன்றி விகாரப்படுத்தின. அதைப் பார்த்து "ஐயோ!" என்று பொன்னன் அலறிய குரல் நல்ல வேளையாகப் பயத்தின் மிகுதியால் அவன் தொண்டையிலேயே நின்றுவிட்டது.

கபால பைரவரும் சித்திரகுப்தனும் மாரப்ப பூபதியும் அங்கிருந்து கிளம்பிச் சென்றார்கள். தீவர்த்தி பிடித்துக் கொண்டு நின்ற ராட்சதன் அவர்களுக்கெல்லாம் முன்னால் போனான். சற்று நேரத்துக்கெல்லாம் தீவர்த்தி வெளிச்சம் மறைந்தது. கீழ் வானத்திலே இளம்பிறைச் சந்திரன் உதயமாயிற்று.

அவர்கள் போய்க் கொஞ்சம் நேரத்துக்குப் பிறகுதான் பொன்னன் அங்கிருந்து கிளம்பினான். அவனுடைய உடம்பு மிகவும் தளர்ச்சியடைந்திருந்தாலும், மனத்தில் ஒருவித உற்சாகம் ஏற்பட்டிருந்தது. விக்கிரம மகாராஜாவை இந்த நரபலிக்காரர்களிடமிருந்து தப்புவிக்கும் வழி அவனுடைய மனத்தில் உதயமாகியிருந்தது. மாரப்பனுடைய தந்திரம் இன்னதென்பது அவனுக்கு இப்போது ஒருவாறு புலப்பட்டது. இளவரசரைக் காஞ்சிக்கு அனுப்புவது போல் பாசாங்கு செய்து மகா கபால பைரவரின் நரபலிக்கு அவரை அனுப்ப மாரப்பன் எண்ணியிருக்கிறான். ஆனால், தன் பேரில் குற்றம் ஏற்படாதபடி இந்தக் காரியத்தைத் தந்திரமாகச் செய்ய உத்தேசித்திருக்கிறான். அவனுடைய தந்திரத்துக்கு மாற்றுத் தந்திரம் செய்து விக்கிரம மகாராஜாவை விடுவிக்க வேண்டும். விடுவித்து நேரே மாமல்லபுரம் துறைமுகத்துக்கு அழைத்துப் போக வேண்டும். குந்தவி தேவியின் உதவியைக் கொண்டு இந்தக் காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும்... இவ்விதமெல்லாம் சிந்தித்துக் கொண்டு பலபலவென்று பொழுது விடியும் தருணத்தில் பொன்னன் தோணித் துறையை அடைந்தான்.

(தொடரும்)

ஓரக் கண்ணால் அப்பாவைப் பார்த்தேன்.

'உர்'ரென்று முகத்தை வைத்துக் கொண்டு ஹால் சோபாவில் அமர்ந்திருந்தார்.

கொஞ்சம் கடுமையாகத்தான் பேசி விட்டேனோ? ஆனால், வேறு வழியில்லை.

தாடியைக் கூட மழிக்காமல், குளிக்காமல் ஒட்டி வைத்த சூயிங்கம் போல ஒரே இடத்தில் காலையிலிருந்து அமர்ந்திருந்தார்.

"பாவம்டா ஸ்ரீதர். குடை ராட்டினம் மாதிரி வீட்டுக்குள்ளே சுற்றி சுற்றி வரும் மனுஷன், இப்படி உற்சாகமேயில்லாத முகத்தோடு... ப்ச்" என்று மெல்லிய குரலில் வருத்தப்பட்டாள் அம்மா.

"வேற என்னம்மா செய்யறது? கையை, காலை ஒடிக்கவேண்ணா பாருன்னு வீட்டு வாசல்ல நின்னு ஒருத்தன் கத்திட்டுப் போற அளவுக்கு ஆயிடுச்சே!"

"உண்மைதான். அந்த சேகரோட மனைவி டெலிவரி சமயத்துல இவர் பணம் கொடுத்து உதவினதைக் கூட மறந்துட்டு இப்படிப் பேசிட்டானே அவன்" என்று அங்கலாய்த்தான்.

அம்மா சொன்னது வாஸ்தவம்தான். ஆனால் அப்பாவின் பேச்சு எல்லாவற்றையும் மறக்கடித்து விடும். நாக்கில் சனி என்பார்களே, அது அவரைப் பொருத்தவரை சரி.

ரிடையர் ஆனபிறகுதான் அதிகமாகி விட்டது. மனசு நன்றாயிருந்தாலும், வார்த்தைகள் மென்மையாய் இருக்க வேண்டாமோ?

"டேய் சாவு கிராக்கி" என்று அழைத்தாரானால் தெருவே நடுங்கும்.



கிருஷ்ணா

நாக்கு

காலையில் ஐந்து மணிக்குப் பேப்பர் போடும் பையன் 'தட்'டென்று 'ஹிண்டு'வை வீசினதும், இவர் மீதே வீசி விட்டதைப் போல பதறி எழுவார்.

மடமடவென்று பல்தேய்ப்பார், குளிப்பார், பட்டையாய் விபூதி குழைத்து இடுவார். ஐந்தரை மணிக்கு பேப்பரைப் பிரித்தால், ஆறேகாலுக்குள் பேப்பரை கடாசி விடுவார்.

ஆறேகாலுக்குத்தான் வீட்டில் மற்றவர்களுக்கு விடியும்.

"கல்யாணி, தெரியுமோ? அவுட், க்ளோஸ், ஐம்பத்துநாலு பேரு" என்பார் சுப்ரபாதமாய்.

"பாம்பே மெயில் கவுந்துடுச்சு. ஏதோ லாரி மோதலில் ஏழு பேர்... பாவம் உயிர் ஊசலாடுதாம்."

அம்மாவுக்குக் கோபம், கோபமாய் வரும்.

"காலையில் எழுந்ததுமே இழவு செய்தி தானா?" என்று சத்தம் போடுவாள்.

"நானா சொல்றேன். பேப்பர் நியூஸ்" என்பார்.

அவர் பார்வையிலிருந்து நழுவி நான் பாத்ரூம் செல்ல யத்தனிக்கும் போது வலையை வீசிவிடுவார்.

"டேய் ஸ்ரீதர், அந்த கிரானைட் பேக்டரி லாக் அவுட்டாம்."

எனக்குள் உதறலெடுக்கும். ஏனென்றால் நான் வேலை பார்ப்பதும் கிரானைட் பேக்டரியில்தான்.

"என்னடா முழிக்கற? நம்ம ஊர் 'ஹோ லாட்ஜில்' காதல் ஜோடி தற்கொலையாம். மூணாம் பக்கத்துல பாரு, போட்டிருக்கு. அடேடே, அட்வகேட் ராமச்சந்திரன் இல்லே, அதான் கோமதியோட மச்சினன். ஹார்ட் அட்டாக்காம் ஆபிச்சுவரி'யில் போட்டிருக்கான்."

அம்மா உள்ளேயிருந்து காப்பியுடன் வருவாள்.

"நீங்க இதைப் பிடிங்க. வாசல்ல போய் நில்லுங்க. ஸ்ரீதர் ஆபீஸ் போற வரைக்கும் உள்ளேயே வரக் கூடாது" என்று விரட்டுவான்.



வாசலுக்குப் போனாலும் சும்மா நிற்க மாட்டார்.

"டேய் சாவுகிராக்கி!"

யார், வீட்டைத் தாண்டிப் போனாலும் கூப்பிடுவார். கிட்டத்தட்ட இருபது வருடம் இங்கேயே வசிப்பதால், காலனியிலுள்ள அனைவரையும் தெரியும்.

"சார்..." என்று தயங்குவார்கள்.

"என்னடா முறைக்கிற. இப்படி வா. கல்யாணி, இன்னொரு காப்பி" என்று உள்ளே குரல் கொடுப்பார்.

"அவசரமாய்ப் போகணும் சார்."

"போணுமா? போயேன். உருப்பட்டாப் பலதான் நீ போற காரியம்."

"சார்...!" என்று அலறுவான் எதிரே நிற்பவன்.

"குடிடா காப்பியை. சாவுகிராக்கி!" என்று மிரட்டுவார்.

காப்பி உபசரிப்புக்குத்தான் இத்தனை ஆர்ப்பாட்டம். எல்லோருக்கும் உதவும்

மனகள்ளவர்தான். ஆனால் வாயில் தர்ப் பையைப் போட்டுப் பொசுக்கினால் கூட வார்த்தைகள் நல்லதாய் வராது.

வீதியில் போகிறவர்களின் முணு முணுப்புக்குப் பயந்து நான் உள்ளே கூப்பிடு வேன்.

"கல்யாணி, என்ன சமையல் இன்னிக்கி? திவச சாப்பாடு மாதிரி பண்ணிடலாமா?"

அம்மா திடுக்கிட்டுப் போய்த் திரும்பு வாள்.

"இன்னிக்கு உங்க பிறந்தநாள். நல்ல நாளும் அதுவா வாயிலே வார்த்தையைப் பாரேன்!"

அதற்குள் அப்பா தானே காய்கறியை எடுத்து வெட்டித்தள்ளிவிடுவார்.

"ஐயையோ, ஒரு கிலோ கத்தரிக்காயை யும் வெட்டி... கடவுளே! இருக்கறது நாம மூணுபேரு."

"அதனாலே என்ன? கோடி வீட்டு ராமசாமி தனியாத்தான் இருக்கான். அந்த சாவுகிராக்கியைக் சவுண்டிக்குக் கூப்பிடற மாதிரி சாப்பிட கூப்பிட்டாப் போச்சு" என் பார் காஷுவலாய்.

நேற்று மாலை நாலு மணிக்கு வாசலில் நின்று கொண்டிருக்கும்போதுதான் பிரச்னை.

சேகர் சைக்கிளில் சென்றபோது வழக்க மான பாணியில் அழைத்து, அவனை பிரேக் போட வைத்தார்.

அவனுக்கு என்ன அவசரமோ!

"அப்பறம் வரேன்" என்று பேசாமல் கிளம்பிவிட்டான்.

"ஒழிடா சாவுகிராக்கி பயலே"- அவன் அலட்சியப்படுத்தி விட்டான் என்று திட்டி னார்.

ராத்திரி ஒன்பது மணிக்குத் திரும்பியவன் நேரே வீட்டு வாசலில் நின்று கத்த ஆரம்பித் தான்.

"டேய் கிழவா, உன்னை என்ன பண்றேன் பாரு. வாயிலே பெட்ரோலை ஊத்திக் கொளுத்தலே என் பேரு சேகர் இல்லை..." என்று பத்து நிமிடம் கத்தி தீர்த் தான்.

அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று பக்கத்து ஊரிலிருக்கும் அண்ணனிடமிருந்து செய்திவர, இவன் போவதற்குள் அம்மா போய்விட்டாள்.

அந்த வருத்தம். என் அப்பாவின் மேல் கோபமாய் மாறிவிட்டது. அந்த துக்கத்திலும் வந்து கத்திவிட்டு, குடும்பத்தைக் கூட்டிக் கொண்டு சென்றான்.

நானும் சப்தம் போட்டேன் அப்பாவி டம். வாய்ப்பு கிடைத்ததை அம்மாவும் பயன்படுத்திக் கொண்டாள்.

"உங்க வாயிலிருந்து இனிமே 'சாவு கிராக்கி'ன்ற வார்த்தை வந்ததோ, என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது!"

என் முகத்துக்காகவும், அம்மாவின் முகத்துக்காகவும்தான், காலனியில், அப்பா வைப் பொறுத்துக் கொள்கிறார்கள். தனியே எங்களிடம் எத்தனை பேர் பொருமி விட் டார்கள்!

சேகரின் மிரட்டலிலும், என் கண்டிப் பிலும் மிரண்டு போய் விட்டார் அப்பா.

காலையில் எழுந்தது முதல் பேப்பரைத் தொடவில்லை. காய்கறி நறுக்கவில்லை. வாசலுக்கே கூட போகவில்லை.

மாலை, வேலை முடிந்து வீடு திரும்பிய போதும் கூட அப்பாவிடம் மாற்றமில்லை.

"கொடுக்கறதைச் சாப்பிட்டார். மோட்டு வளையையே பார்த்துண்டு உட்கார்ந்துண்டு இருக்கார்" என்றாள் அம்மா சமையலடியில்.


– அவள் குரலில் பயம் தெரிந்தது.

"மாறுதல்னு வரும்போது அப்படித்தான் இருக்கும். போகப் போகப் பழகிடும். கேபிள் கனெக்ஷன் வாங்கிடலாம். டீ.வி. பார்க் கட்டும் – நாள் முழுதும் அவர். கவலைப் படாதே" என்று சமாதானப்படுத்தினேன்.

சொன்னபடியே கேபிள் டீ.வி. ஆளை வரச் சொன்னேன். தெரிந்தவன்தான். அடுத்த அரை மணியில் கேபிள் ஒயருடன் வந்தான்.

"டேய் தீவட்டி தடியா! என்ன இது?" என்று அப்பா வழக்கமான குரலில் ஆரம் பித்தாரே பார்க்கலாம். திகைத்துப் போய் பார்த்தோம்.

"நானும் இன்னிக்கு முழுதும் யோசிச் சேன். சாவு கிராக்கின்னாத்தானே அமங்கல மாய் இருக்கு. வேற என்ன வார்த்தை உபயோகிக்கலாம்னு யோசிச்சு, யோசிச் சு...ச்சே, ரொம்ப படுத்திடுச்சு. இந்த வார்த்தையினாலே சென்டிமென்டலாய் எதுவுமில்லையே, என்னடா தீவட்டி தடியன் மாதிரி நிக்கறே?" என்றதும் எனக்கு மயக் கமே வந்து விட்டது.



-ஆர். ரகோத்தமன்.

வானதி வழங்கும் புதிய நூல்கள்

சமயம், இலக்கியம், கட்டுரைகள், அறிவியல், வரலாறு

	ரூ. பை
ரா. கணபதி	
காமாக்ஷி, கடாக்ஷி	30.00
சுவாமி சச்சிதானந்தா	
பதஞ்சலி யோகம் விளக்கவுரை பகுதி-2	65.00
எஸ். லட்சுமி சுப்பிரமணியம்	
மீண்டும் சங்கர விஜயம்	30.00
இந்துமதம் பதிலளிக்கிறது (இரண்டாம் பகுதி)	75.00
தி. வே. கோபாலய்யர்	
இராமாயணத்தில் தம்பியர்	30.00
இராமாயண முனிவர்கள்	12.00
தவத்திரு குன்றக்குடி அடிகளார்	
கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல் சமூகம்	15.00
கவிஞர் நெமிலி எழில்மணி	
பாலா திரிபுர சுந்தரியின் - லீலா விநோதங்கள்	15.00
வாகீசன்	
ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்கம்	5.00
மா. அரங்கநாதன்	
காளியம்மன் முருகன் பாமாலை	25.00
பேராசிரியர் அ. ந. சொக்கலிங்கம்	
அவ்வையார் பாடல்கள் தமிழ் உரையும் ஆங்கில மொழிபெயர்ப்பும்	25.00
கவிஞர் மா. வரதராசன்	
கவிஞர் நெஞ்சில் காஞ்சி மாமுனிவர்கள்	25.00
பாவலர் மணி சித்தன்	
மேதை கம்பனும் கோதை பிராட்டியும்	22.00
ந. செல்லக்கிருஷ்ணன்	
கம்பனின் கடவுட் கொள்கை	22.00
பி. எஸ். சுப்பிரமணியம்	
இதிகாசக் கதைக் கொத்து	30.00
ஜய ஸ்ரீ மூகாம்பிகை	
தேவி பாகவதக் கதைகள்	22.00
கமலநாதன்	
சமர்த்துக் குழந்தைகளை உருவாக்க	20.00
குமரி அனந்தன்	
நீங்களும் பேச்சாளராகலாம்	55.00

	ரூ. பை
சிந்தனைப் பண்ணையில் பாரதிதாசன் பகுதி - III	32.00
டாக்டர் பொற்கோ	
தொல்காப்பிய அறிமுகம்	25.00
பேராசிரியர் மு. அப்துல் கரீம்	
கவியரசர் கண்ணதாசன்	
கவிதைத் திறம்	38.00
தமிழ் வீரம்	32.00
டாக்டர். நா. மகாலிங்கம்	
பெருமை கொள்ள உயர்வோம்	35.00
டாக்டர். அழகப்பன்	
வாழ்க்கைப் பயணமும் அதற்கு அப்பாலும்	25.00
மாலன்	
அன்புள்ள தமிழன்	30.00
க. ராதா M.A.	
கண்ணதாசன் கவிதைகளில் கற்பனை	18.00
டாக்டர் சுப. அண்ணாமலை	
திருக்குறள் சிந்தனை பொருட்பால் விளக்கம்	75.00
ஸ்ரீராம்	
வாரியார் பொன்மொழிகள்	15.00
எஸ். வைத்தீஸ்வரன்	
தேவனின் எழுத்துலகம்	18.00
டி.சி. ராமசாமி	
ஆர். ஷண்முகசுந்தரத்தின் கொங்கு மணம் கமழும் நாவல்கள்	22.00
பா. கமலக்கண்ணன்	
இந்து கிறித்துவம் இஸ்லாம் ஒருமைப்பாடு	20.00
வி. என். சிதம்பரம்	
நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்	45.00
நெல்லை சு. முத்து	
வள்ளுவர் கண்ட அறிவியல்	15.00
டாக்டர் ஆறு. அழகப்பன்	
திருவள்ளுவர் (நாடகம்)	8.00
சதா. மோகனதாசு	
நூலும் நேசமும் (படங்களுடன்)	35.00

• தேவையான பிரதிகளை வி.பி.பி. மூலம் பெறக் கடிதம் எழுதுங்கள். வி.பி.பி. தபால் செலவு தனி.

விவரங்களுக்கு :

வானதி பதிப்பகம்

13, தீனதயாளு தெரு, தி. நகர்,
சென்னை - 600 017. போன் : 4342810

மாண்புமிகு

நீலாவும் சேதுவும் 'பிருந்தாவன் எக்ஸ்பிரஸில்' திரும்பிக் கொண்டிருந்தனர். பெங்களூர் பயணம் அவர்கள் நினைத்தபடி சுமுகமாக இல்லை என்பது இருவரின் முகத்திலுமே நன்றாகத் தெரிந்தது.

நீலாவைப் பொறுத்தவரை அவள் உடலில் குறையில்லாமல் இருக்கிறாள் என்ற மருத்துவ முடிவு சேதுவுக்கு ஒரு புறம் திருப்தியளித்தாலும் மறுபுறம் எரிச்சல் மூட்டியது. அதற்குக் காரணம் அவனிடம் ஒரு குறை இருக்கிறது என்று டாக்டர் சொன்னதுதான்.

சேதுவுக்கு இருக்கும் குறை அவர்கள் இருவருமே எதிர்பார்க்காததுதான். நிச்சயம் எதிர்பார்த்திருக்க முடியாது! ஏற்கெனவே நீலா ஒருமுறை கருத்தரித்து இருந்தாளே! அதன் பிறகு சேதுவிடம் குறை ஏற்படக் காரணம் என்ன என்பதை நீலாவினால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

அவன் குறை அவளுக்குப் புதிராகத்தான் இருந்தது. அவனுக்கு உயிரணுக்கள் மிக மிகக் குறைந்து விட்டனவாம். சாதாரணமாக இருக்க வேண்டிய எண்ணிக்கையை விட பல மடங்கு குறைந்துள்ளதாம். வேறு எந்த அறிகுறிகளும் காணப்படவில்லை - ஆனால் உயிரணுக்கள் ஏன் குறைந்தன என்பதற்குக் காரணத்தை டாக்டர்கள் மூவரால் குறிப்பாகச் சொல்லவும் முடியவில்லை.

ஏதேதோ மருந்துகளை வாங்கிச் சாப்பிடும்படி சொல்லிவிட்டு, இன்னும் ஆறு மாதங்கள் கழித்து மீண்டும் பரிசோதனைக்கு வரும்படி சொன்னார்கள்.

"சேது, உங்கள் மனநிலை எனக்குப் புரிகிறது... இதில் வருத்தத்தை விட எரிச்சலும் கோபமும்தான் அதிகம் வரும் என்று டாக்டர்கள் சொன்னது உண்மைதான். எனக்கே அப்படி ஒரு உணர்ச்சிதான் மேலோங்கி நிற்கிறது."

"கோபம் மட்டுமில்லை, குழப்பமும் அதிகம் நீலா... இரண்டு வருஷத்தில் எனக்கு இந்த நிலை ஏற்பட என்ன காரணம்?"

"நானும் அதைத்தான் யோசித்து வருகிறேன் சேது. இதுவரை எந்தக் காரணமும் எனக்குத் தோன்றவில்லையே" என்றாள்.

சென்னை திரும்பிய சில நாட்களில் நீலா மீண்டும் ஒரு முறை பிரபுவின் ஆராய்ச்சிக் கூடத்துக்குப் போனாள். பிரபு இரண்டாவது வாரமாக வராதது அப்போதுதான் தெரிந்தது.

"அவருடைய குடும்பத்தில் யாருக்கோ ரொம்ப சீரியஸ்னு சொன்னார்.... வரவில்லை" பானு சுருக்கமாக விளக்கினாள்.

"டாக்டர் பிரபு செய்து வரும் ஆராய்ச்சி எல்லாம் அப்படியே நின்றிருக்குமே" என்று சிறிது வருத்தத்துடன் சொன்னாள் நீலா.

"அவருக்கும் வருத்தம்தான்... இங்கே ஆபீசிலும் கொஞ்சம் குழப்பம் இருக்கு அவருக்கு" என்று மெல்ல இழுத்தாள் பானு.


"அப்படியா... நான் அவரை வீட்டில் போய்ப் பார்க்க முடியும் என்று நினைக்கிறீர்களா மிஸ் பானு?" என்று நீலா கேட்டாள்.

"நான் என்ன சொல்வது நீலா... நீங்க போய் வேணா பாருங்க... அவர் எந்த மனநிலையில் இருக்கிறாரோ என்னவோ?" அக்கறையுடன் பேசினாள் பானு.

"ஆபீசில் என்ன குழப்பம்?" இயல்பாக விசாரித்தாள் நீலா.

"இங்கே ஒரு முக்கிய கம்ப்யூட்டர் டிஸ்க் காணாமல் போய் விட்டது. டாக்டர் பிரபு ஆபீசில்தான் இருக்கிறது என்கிறார். சல்லடை போட்டுத் தேடாத குறைதான்... எனக்குக் கிடைக்கவில்லை... அவர் வீட்டிலேயே தான் இருக்கும் என்று நான் நினைக்கிறேன்."

"ஐம் ஸாரி... நான் ஆராய்ச்சி அறை வரைக்கும் போய்ப் பார்க்கலாமா?" என்று



வாசன்

பானுவின் ஒப்புதலுடன் புறப்பட்டாள்.

அங்கு பாலு சாலமனின் துணையில்லாமல் இருந்தான். சாலமன் வேலைக்கு வரவில்லையாம். நீலா பாலுவிடம் பேச்சுக் கொடுத்துப் பார்த்தாள். அவனும் காணாமற் போன கம்ப்யூட்டர் டிஸ்க் பற்றிச் சொன்னான்.

ஆராய்ச்சி பற்றிப் பேசினான். பொதுவான விவரங்கள். நடுவில் ஒரு செய்தி நீலாவின் கவனத்தைக் கவர்ந்தது. 'மேலதயான்' உணவில் எடுத்துக் கொண்ட ஆண் எலிகள் ஐந்து; எடுத்துக் கொள்ளாத எலிகள் ஐந்து. எடுத்துக் கொண்டவையுடன் இருந்த பெண் எலிகளில் ஒன்று கூட கருத்தரிக்கவேயில்லை. எடுத்துக் கொள்ளாதவையுடன் இருந்த ஐந்து பெண் எலிகளும் கருத்தரித்துள்ளன!

பிரபுவின் வீட்டிற்கு அன்று பகலில் நீலா வந்த போது வீட்டில் அமைதி சூழ்ந்திருந்தது. வாசல் மணியை அழுத்தினாள். சாந்தி கதவைத் திறந்தாள்.

"நான் ரிப்போர்ட்டர் நீலா... டாக்டர் பிரபுவைப் பார்க்க முடியுமா?" என்று தயங்காமல் கேட்டாள்.

"கொஞ்சம் இருங்கள்... கேட்டுச் சொல்கிறேன்" என்று சாந்தி உள்ளே போனாள்.

சில நிமிடங்களில் அவள் வந்து நீலாவை அழைத்துப் போனாள். உள்ளே பிரபு ஒரு சோபாவில் உட்கார்ந்து இருந்தார். அவருக்கு எதிரே இரண்டு பையன்கள், ஒரு பெண் உட்கார்ந்திருந்தனர். நீலாவுக்குப் புரியவில்லை. அந்த இரண்டாவது பையன் யார்?

"வாங்க நீலா... உங்களுக்குப் பேட்டி கொடுப்பதாகச் சொல்லி வாரக்கணக்கில் ஓடி விட்டது. என்னால் ஆபீசுக்கு வர முடியவில்லை" என்று வருத்தத்துடன் பிரபு பேசினார்.

"கோபு, இவங்களை அழைச்சிக்கிட்டுப் போய் நீ விளையாடு" என்று பெரிய பையனிடம் பிரபு சொன்னதும் மூவரும் அங்கிருந்து ஓடினார்கள். கோபு யார் என்பது பற்றி நீலா கேட்கவில்லை.

"உங்களுக்கு உடல் நிலை சரியில்லை என்று கேள்விப்பட்டேன்." நீலா பீடிகை போட்டாள்.




"சரியில்லாமலிருந்தது உண்மைதான்... ஆனால் இப்போது அந்த பிரச்னை இல்லை... நீலா, உங்களுக்கு என்ன மாதிரியான விவரம் வேண்டும்?"

அப்போது சாந்தி தட்டில் டீ கப்புகளுடன் வந்தாள். பிரபு, நீலா இருவரும் ஆளுக்கொரு கப் எடுத்துக் கொண்டதும், "நான் குழந்தைகள் என்ன செய்கின்றன என்று பார்க்கிறேன்" என்று சாந்தி போய் விட்டாள்.

"டாக்டர் பிரபு... 'மேலதயான்' ஆண் எலிகளின் உயிரணுக்களை வெகுவாகப் பாதிக்கும் தன்மை வாய்ந்தது என்பது உண்மைதானே?" என்றாள் நீலா.

"சந்தேகமேயில்லை. இதை 'ரிபொரடக்டிவ் டாக்சிசிட்டி" என்பார்கள். 'மேலதயான்'



பொறியியல் கல்விக்கான நுழைவுத் தேர்வில் 1/900 மார்க் மட்டுமே பெற்றுள்ள ஒருவருக்கு இன்ஜினியரிங் சீட் கிடைத்து விட்டது.

மத்திய பிரதேசம் போபாலில் மலைவாழ் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட 20 காலி இடங்களில் 8 பேரே தேர்வு எழுதியதால் இந்த மாணவருக்கும் - ஒரே ஒரு மார்க் பெற்றாலும் - இடம் கிடைத்து விட்டது.

மாநில அரசின் மனிதவள மேம்பாட்டு துறை இதுகுறித்து கவலை தெரிவித்துள்ளது. குறைந்த மார்க் வாங்கி, ஒதுக்கீடு கொள்கையால் இடம் பெறும் மாணவர்களை ஒரு வருடம் கூடுதலாகப் படிக்கச் செய்யலாமா என யோசித்து வருகிறது.

- பார்கவி

மருந்தை உணவில் கலந்து எலிகளுக்குக் கொடுப்பதனால் எலிகள் சீக்கிரம் இறப்பதில்லை; அதே மருந்தை நேரடியாக அவைகளுக்குக் கொடுத்தால் நெடுநாட்கள் உயிர் வாழ்வதில்லை" பிரபு ஆர்வத்துடன் பேசினார்.

"இதெல்லாம் ஏற்கெனவே தெரிந்த உண்மைகள்தானே?"

"ஆமாம்...." பிரபு நீலாவை ஏறிட்டுப் பார்த்தார்.

"அப்படியானால் நீங்கள் வேறு என்ன எதிர்பார்த்து 'மேலதயான்' ஆராய்ச்சியைத் தொடர்ந்து வருகிறீர்கள்?"

"அதை இப்போது சொல்லும் நிலையில் நான் இல்லையே" என்றார் பிரபு.

மேலும் கொஞ்ச நேரம் ஆராய்ச்சிகளைப் பற்றிப் பேசிவிட்டு நீலா புறப்பட்டாள்.

"உங்கள் முக்கியமான கம்ப்யூட்டர் டிஸ்க் ஒன்று காணாமல் போய் விட்டதாக மிஸ் பானு சொன்னாங்களே... கிடைச்சிட்டுதா?" என்றாள் நீலா.

"இன்னும் கிடைக்கவில்லை... அதைப் பற்றி கூட நீங்க கட்டுரையில் எழுதப் போறீங்களா?" சிரித்தார் டாக்டர் பிரபு.

"இல்லை... ஆனால் அமைச்சர் ரங்கதுரைக்கும் நீங்க செய்து வரும் ஆராய்ச்சிக்கும் என்ன தொடர்புன்னு கேக்கலாமா?" நீலா நிறுத்தினாள்.

பிரபுவின் சிரிப்பு மறைந்தது. நீலாவை உற்றுப் பார்த்தார். அவர் பதில் பேசவில்லை.

"ரங்கதுரைக்கும் உங்கள் கூட இருக்கும் ஆராய்ச்சியாளர்களான பாலு, சாலமன் இருவருக்கும் என்ன தொடர்புன்னு உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

சட்டென்று பிரபு எழுந்து நின்றார். அவர் முகம் சிவந்தது. சூடேறியது. நீலாவை நோக்கி இரண்டு அடிகள் நடந்தார்.

"இங்கே பாருங்க நீலா... நீங்க இந்த விவரங்களில் ஏன் தலையிடறீங்க... ஆராய்ச்சியை மட்டும் செய்தியா போட்டால் போதும்... இதிலே அரசியலைச் சேர்க்க வேண்டாம்."

"அரசியலைச் சேர்த்தது நானில்லை டாக்டர் பிரபு... நீங்களும் உங்கள் கூட்டாளிகளும்தான்..." என்றாள்.

அவள் சொன்னது பிரபுவின் மண்டையில் பேரிடியாக விழுந்தது. 'அந்த படுபாவிப் பயல்கள் பாலு, சாலமன் இரண்டு பேரும் ரங்கதுரைக்கு உளவாளிகளோ?' என்று அப்போதுதான் அவருக்கு நினைக்கத் தோன்றியது. நான் ஆராய்ச்சிக் கூடத்தில் இல்லாத நேரம் பார்த்து எப்படியோ ஆராய்ச்சிக் குறிப்புகளை எடுத்து ரங்கதுரைக்குத் தந்திருக்கிறார்கள். அந்த கம்ப்யூட்டர் டிஸ்க்... அதையும் அவர்கள்தான் அபேஸ் செய்திருப்பார்கள்... பிரபுவுக்கு எல்லாமே புரிய ஆரம்பித்தது.

"நீலா... ரொம்ப தேங்க்ஸ்... எனக்கு ஒரு விஷயத்தை நீங்கதான் புரிய வைச்சிருக்கீங்க... அவசரமா நான் ஓர் இடம் போகணும்... பிறகு பேசலாமா" என்று அவர் புறப்பட்டார்.

வேறு வழி இல்லாமல் நீலாவும் அவருடன் வெளியே வந்தாள். அப்போது எதிரில் மூர்த்தி ஆட்டோவிலிருந்து இறங்கி வருவது தெரிந்தது.

"மூர்த்தி... அந்த ஆட்டோவை அனுப்பி விடாதே... நாம டாக்டர் பிரபுவைத் தொடர்ந்து போகணும்... எனக்கு ஒரு சந்தேகம் வந்திருக்கிறது. அவர் எங்கே போகிறார் என்பதை மட்டும் தெரிந்து கொண்டால் போதும்... வா போகலாம்" என்று நீலா ஆட்டோவை நோக்கி விரைந்தாள்.

பிரபுவின் கார் சென்னை வீதிகளில் நுங்கம்பாக்கம் வரை விரைந்தது. அமைச்சர் ரங்கதுரை வீட்டு வாசலில் வந்து நின்றது. வாசலில் காவலுக்கு இருந்தவர் டாக்டர் பிரபுவைப் பார்த்தவுடன் கும்பிடு போட்டார். ஏற்கெனவே பிரபுவைத் தெரிந்து வைத்திருந்தார் போலும்.

தூரத்தில் ஆட்டோவில் உட்கார்ந்திருந்த நீலா, "நான் நினைத்தது சரியாகப் போய் விட்டது. மூர்த்தி... நாம திரும்பலாம்" என்று சொன்னாள்.

"நீலா, இது என்ன விளையாட்டு... அடையாறு எங்கே, நுங்கம்பாக்கம் எங்கே? ஏன் இந்த 'சேஸ்'? இப்ப என்ன தெரிஞ்சுகிட்டே...

அதையாவது சொல்லேன்" என்றான்.

"இப்ப எதுவும் சொல்லக் கூடாது மூர்த்தி... இத்தனை நான் தெரிந்து கொண்டதை விட இன்னைக்கி பிரபுவோட பேசின அரை மணி நேரத்துக்குள்ளே நிறைய தெரிஞ்சுகிட்டேன்... நாளைக்கு எல்லாத்தையும் செங்கோடன் சாருக்குச் சொல்லப் போறேன்... அப்ப நீயும் இருப்பயில்லே தெரிஞ்சுக்கலாம்..." என்றாள் பிடிவாதமாக.

அவளை வீட்டில் விட்டுவிட்டு மூர்த்தி மீண்டும் ஆபீசுக்குப் போன போது செங்கோடன் புறப்பட்டுக் கொண்டிருந்தார். மூர்த்தி நீலாவின் புதிய சாகசங்களைச் சொன்னான்.

செங்கோடன் யாருக்கோ ஒரு போன் செய்துவிட்டுப் புறப்பட்டார். அவர் முகம் குறும்பான சிரிப்பை உதிர்த்தது.

வீட்டினுள் நுழைந்த நீலாவை வரவேற்க சேது காத்திருந்தான். அவன் முகம்



"என்ன முதலமைச்சர் ஹெலிகாப்டருக்கு முன்னாடி ஒரு சின்ன விமானம் குட்டிக்கரணம் போட்டுக்கிட்டே போகுது?"

"அதுல போகிற அமைச்சருக்கு, வெறுமனே கால்ல விழுந்து போரடிச்சுப் போச்சாம்."

- ஜூலி

பெருமிதத்தால் விம்மியது.

"என்னங்க ரொம்ப சந்தோஷமாய் இருக்கீங்க போல இருக்கே?" என்றாள் பார்வை ஒருபுறமாக வைத்துக் கொண்டே.

"ஆமாம் நீலு.. இன்னைக்கி பெரிய விற்பனை. இருநூறு மூட்டையும் வித்துப் போச்சு. போன வாரம் வந்த மூட்டைகள் இவ்வளவு சீக்கிரம் விற்கும்னு நான் நினைக்கவேயில்லை."

"அப்படி என்ன அது ரொம்ப ஸ்பெஷல் அயிட்டமா?"

" 'மேலதயான்' என்கிற பூச்சிக்கொல்லி மருந்துதான்."

நீலா 'தொப்'பென்று சோபாவில் சாய்ந்தாள்.

'மேலதயான்' பூச்சிக்கொல்லி!!

"சேது... சேது... ஐயையோ... இந்த மருந்து பற்றி நீங்க முன்னாலே சொன்னபோதே நான் சரியா சிந்திக்கலையே", நீலா அலறினாள். கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.

"நீலு, நீலு... என்ன ஆச்சு? ஏன் நீலு இப்படி அழறே?"

"சேது... என்னாலே இதைச் சகித்துக் கொள்ளவே முடியாது சேது... நம்ம வாழ்க்கை இப்படியா அழியணும் சேது..." விம்மலுக்கிடையே வார்த்தைகளை வீசினாள் நீலா.

நீலாவைக் கட்டி அணைத்துக் கொண்டான் சேது. மௌனமாக அவளைச் சமாதானம் செய்வதில் இறங்கினான்.

"சேது... நீங்க இனிமே உரம், பூச்சிக்கொல்லி விற்கிற கம்பெனியிலே வேலைக்குப் போக வேண்டாம்... வேறு வேலை கிடைக்க எவ்வளவு காலமானாலும் பரவாயில்லே. இந்த வேலைக்கு முழுக்குப் போடுங்க" என்றாள் தீர்மானமாக.

"புரியும்படி சொல்லேன்" என்று பொறுமை இழந்து கேட்டான் சேது.

"உங்கள் உயிரணுக்களை உயிரற்றவையாகச் செய்தது அந்த பூச்சிக்கொல்லி மருந்துதான் சேது!"

சேது அதிர்ந்து போனான்!

ஏற்கெனவே நீலா 'மேலதயான்' ஆராய்ச்சிக்கு ஆண் எலிகளைப் பயன்படுத்துகிறார்கள் என்ற போது, அது எப்போதும் செய்யும் ஆராய்ச்சி முறைதானே என்பதால் அதில் அவன் கவனம் செலுத்தவில்லை.

கம்பெனியில் வந்து இறங்கும் மூட்டை மூட்டையான 'மேலதயான்' மருந்தின் நெடியை எத்தனை நாட்கள் அவன் நுகர்ந்திருக்கிறான்! அவ்வளவும் நேரடியாக உள்ளே போயிருக்கின்றனவே! அப்படியானால் அங்கு வேலை செய்யும் மற்ற ஆண்களுக்கும் இதே கதியா? அவர்களுக்காவது குழந்தைகள் உண்டா?

சேது துடித்து விட்டான்!

"சேது... இப்போ புரியுதா உங்களுக்கு... நமக்கு இனிமே குழந்தை எப்படி பிறக்கும் சேது? உங்கள் உடல்நிலை எப்போது நார்மலாக மாறும்? இதற்கெல்லாம் யார் பொறுப்பு?"

சேதுவினால் பேசவே முடியவில்லை. இந்தப் பூச்சிக்கொல்லி மருந்து மனித இனத்தை வளர விடாமல் கொன்று விடுமா?

"சேது... இருநூறு மூட்டை 'மேலதயான்' மருந்தை யார் வாங்கினார்கள்?"

"யாரென்று எப்படிச் சொல்வது? சுற்றுப்புறக் கிராமங்களில் இருக்கும் சில கடைகள் தான் வாங்கின" என்றான்.

"எந்த கிராமங்கள் எந்தக் கடைகள் விவரம் கிடைக்குமா?" என்றாள் நீலா.

"ஏன்?" என்று கேட்ட சேதுவுக்குப் பதில் மறுநாள் செய்தித்தாளில் கிடைத்தது.

(தொடரும்)

தட்டில் தூங்கலாம்!

எனது கல்லூரி நண்பன் எங்கள் வீட்டுக்கு விருந்தாளியாக வந்திருந்தான். அவனுக்குக் கன்னியாகுமரியெல்லாம் சுற்றிக் காண்பித்து, வீட்டுக்கு வந்து சாப்பிட்டதும், "வாடா, தட்டில் போய் படுத்துத் தூங்கலாம்!" என்றேன். "என்னது, தட்டில் படுத்துத் தூங்கலாமா? அவ்வளவு பெரிய தட்டா?" என்றான் வியப்போடு. குமரி மாவட்டத்தில் 'தட்டு' என்னும் சொல் மாடியைக் குறிக்கும் என்று அவனுக்கு விளக்கினேன். அதன்பிறகு ஹாஸ்டலுக்குத் திரும்பிய பின்னாலும் அடிக்கடி, "சத்தியன், தட்டில் படுத்துத் தூங்குவோமா?" என்று கேலி பண்ண அனைவரும் சிரிப்போம்.

கல்யாண விருந்தும் சில கணக்கும்!

குமரி மாவட்டத்தில் உள்ள இந்துக்களின் கல்யாணச் சாப்பாட்டில் ஏழு அல்லது ஒன்பது அல்லது பதினொன்று என்று ஒற்றைப் படை எண்ணிக்கையில் கூட்டு வகைகள் இருக்கும். பாசிப் பருப்பு பாயசம், பால் பாயசம், நேந்திரன் பழப் பாயசம் என்று மூன்று வகைப் பாயசங்கள் இருக்கும். கடைசியாக ஒரு கொசுறு: நாகர்கோயிலிலுள்ள இந்துக் கல்லூரியில் பணியாற்றும் ஒரு பேராசிரியையின் பெயர் : ஔவையார்.

- ஆர். உமா சத்தியன், தேரூர்.

குமரியின் ஸ்பெஷல் காப்பி!

குமரி மாவட்ட கிராமங்களில் காப்பி போடும் விதமே தனி. இங்கு பனைமரங்கள் அதிகம் என்பதால் கருப்புக்கட்டியும் அதிகம். அதனால் ஒரு பானை நீரில் கருப்புக் கட்டியை நொறுக்கிப் போட்டுக் கொதிக்க வைப்பார்கள். கொதிக்கும் போது அதில் தேவையான அளவு காப்பித்தூளை அப்படியே தூவுவார்கள். அப்போது கமகம வாசனையொன்று வரும். உடனே இறக்கி வைத்து, தேவைப்படும்போதெல்லாம் தண்ணீருக்குப் பதில் இந்தக் காப்பியைத்தான் குடிப்பார்கள் - ஆறிப் போன பிறகும்!

- தா. கல்வரன், இராசாக்கமங்கலம்.

சிரிக்க வைத்த பாட்டு!

ஒரு முறை எங்கள் வகுப்புக்கான ஆசிரியை வராமல் போகவே மாணவிகளின் அரட்டை அதிகமானது. எங்கள் வகுப்பு லீடர் அரட்டையைத் தடுப்பதற்காக, "யாராவது பாடுங்கள்; அனைவரும் கேட்போம்!" என்றாள். சுஹரா என்ற மாணவி, "நீ வருவாய் என நான் நினைத்தேன்" என்ற சினிமா பாடலைப் பாட ஆரம்பிக்கவும், ரவுண்ட்ஸ் வந்து கொண்டிருந்த எங்கள் தலைமை ஆசிரியை எங்கள் வகுப்புக்குள் எட்டிப் பார்க்கவும் சரியாக இருந்தது. எங்களோடு சேர்ந்து தலைமை ஆசிரியையும் 'கொல்'லென்று சிரித்துவிட்டார்.

- சுபா நடேசன், நாகர்கோயில் - 4.

குமரிக்கென்று சில சொற்கள்!

எங்கள் குமரி மாவட்ட வட்டார வழக்குக்குத் தனிச் சுவை:

அண்ணாச்சி நமக்கு நார்வா? அண்ணா உமக்கு நாகர்கோயிலா?; ஒன் செம குறஞ்சா? - இருமல் குறைந்ததா?; ஒன் பனி




எப்படியிருக்கு? - காய்ச்சல் எப்படியிருக்கு?; துண்டு எங்கே? - சீட்டு எங்கே?; என்ன கஷ்டம்? - உடம்புக்கு என்ன?; பஸ்லேருந்து சாடாதேடா - பஸ்ஸிலிருந்து குதிக்காதே; ஏண்டே காலச் சவுட்டுதா? - காலை ஏன் மிதிக்கிறாய்?; சென்னேமில்லியாலே? - சொன்னேனல்லவா?; அவன் பெய்த்தான் - அவன் போய்விட்டான்; வேண்டிற்று வா - வாங்கிக் கொண்டு வா; இந்தக் காரு எங்கே போவு பாட்டா? - இந்த பஸ் எங்கே போகுது தாத்தா?

- பெர்ட்டி ஜெ. கங்கன், (முகாம்) பாண்டிச்சேரி.

குமரி மாவட்டத் துணுக்குச் செய்திகளுக்கான சிறப்புப் பரிசு பெறுபவர் : ராதிகா அழகப்பன், நாகர்கோவில், ('மைலாடி' துணுக்கு - 2.7.95 இதழ்)

நாணயமே நாணயம்



ராம் காஷ்யப் சிட்ஸ் பி. லிமிடெட் நீங்கள் தேர்ந்தெடுக்க வசதியாகப் பல சீட்டு வரிசைகளை அளிக்கிறது. ஆகவே, ஒவ்வொரு வாடிக்கையாளரும் தாம் சேமிப்பதற்கு எளிதாக சீட்டு வரிசையைத் தேர்ந்தெடுக்க முடியும். ராம் காஷ்யப் சிட்ஸ், தன் பங்கிற்கு, உங்கள் பணத்துக்கு ஒரு பாதுகாவலனாகச் செயல்படும். குடும்பத்தில் பெரியவராக உள்ளவர் அக்குடும்பம் வளமோடு பெருக வேண்டும் என்பதில்தான் மிகுந்த கவனமுடன் அக்கறை செலுத்துவார். அதே கவனத்தையும் அக்கறையையும் ராம் காஷ்யப் சிட்ஸ் சேமிப்பு, நிதியுதவி ஆகிய நடவடிக்கைகளில் செலுத்துகிறது.

ராம் காஷ்யப் சிட்ஸ் நிறுவனம் தொழில் நிறுவன வல்லுனர்களால் பேணிக் காக்கப்படுகிறது. மிகச் சிறந்த, அனுபவம் வாய்ந்த, இத்தொழிலை அறிந்த நிபுணர்களால் நிர்வகிக்கப்படுகிறது.

சீட்டு வரிசை	சீட்டு மதிப்பு	பரிசு
ரூ.400×25 மாதங்கள்	ரூ.10,000	5 கிராம் வெள்ளிக்காசு
ரூ.500×30 மாதங்கள்	ரூ.15,000	7 கிராம் வெள்ளிக்காசு
ரூ.625×40 மாதங்கள்	ரூ.25,000	10 கிராம் வெள்ளிக்காசு
ரூ.1250×40 மாதங்கள்	ரூ.50,000	20 கிராம் வெள்ளிக்காசு
ரூ.4000×25 மாதங்கள்	ரூ.1,00,000	1 கிராம் தங்கக்காசு

நுழைவுக் கட்டணம் தனி. முன் அங்கீகாரம் பெற்றது

இத்திட்டம் 31-07-95 வரை மட்டுமே.
விரைந்திடுங்கள்! பாதுகாப்பான எதிர்காலத்துக்காக ஒன்று சேர்வோம்.
அறிமுகப்படுத்துவோருக்கும் பரிசுமழை காத்திருக்கிறது.

Ram Kaashyap

Chits Private Limited

(Member Ram Kaashyap Group)

ஈடில்லா சேமிப்பு. இணையற்ற தேர்வு.

பதிவு அலுவலகம்: 53, பிஷப் கார்டன், (கிரீன்வேஸ் ரோடுக்கு அருகில்)
சென்னை - 600 028 போன்: 4936931, 4936932

நிர்வாக அலுவலகம்: 1/1, சர் தேசிகா ரோடு (கீழ்த்தளம்),
ஆழ்வார்பேட்டை சிக்னல் அருகில், சென்னை-600 004.

கிளைகள்:

- கோயம்புத்தூர்: ஏசியாடிக் பில்டிங், 2-வது மாடி, (விஜிபி ஷோரூம் அருகில்), 378, டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயம்புத்தூர்-641 018.
- திருச்சிராப்பள்ளி: மைலாஜ், முதல்மாடி, (தலைமை அஞ்சல் நிலையம் எதிரில்) பாரதியார் சாலை, திருச்சிராப்பள்ளி-620 001. போன்: 461137 99
- செகந்தராபாத்: 65, அலெக்சாண்டர் ரோடு, செகந்தராபாத்-500 003.
- ஹைதராபாத்: 5-9-47/3, பஷீர்பாக், ஹைதராபாத்-500 029. போன்: 232962/237164.
- மதுரை* • தஞ்சாவூர்* (*விரைவில் திறக்கப்படவுள்ளன)

Insight-818

எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.விடம் மன்னிப்புக் கேட்ட அமைச்சர்!

●● கேரள மாநிலம் - கொடுமண்ணில் ஒரு புதிய கட்டடத் திறப்பு விழா. மின்சார அமைச்சர் கார்த்திகேயன் முன்னிலையில் நடைபெற்றது. பொதுவாக இது மாதிரி விழாக்கள் நடக்கும் போது அந்தந்தத் தொகுதி எம்எல்ஏக்கள்தான் தலைமை தாங்குவது மரபு. ஆனால் இந்த விழாவில் தொகுதி எம்.எல்.ஏ. பத்மகுமார் எதிர்க் கட்சிக்காரர் என்பதாலோ என்னவோ, அழைக்கப்படவேயில்லை. இருப்பினும் அவர் விழாவுக்கு வந்திருந்து தமது கண்டனத்தைத் தெரிவித்தார். விஷயத்தை அறிந்த அமைச்சர் தமது ஆட்களை விட்டு எம்.எல்.ஏ.வை விரட்டியடிக்கச் செய்தார் என்றா நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. அவர் கேரள அமைச்சராயிற்றே! நேராக அந்த எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.விடம் சென்று அவர் அழைக்கப்படாததற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டதோடு அவரை விழாவுக்குத் தலைமைதாங்கவும் சொன்னார். அதற்கு அவர் மறுத்தால் தாமும் விழாவில் கலந்து கொள்ளப் போவதில்லை என்றார். அப்புறமென்ன... விழா இனிதே முடிந்தது!

●● இனி பெற்றோரின் எதிர்ப்புக்கு அஞ்சிக் காவல் நிலையங்களைத் தேடி ஓடி வரும் காதல் ஜோடிகளுக்குக் காவல் நிலையங்களிலேயே கல்யாணம் செய்து வைக்கக் கூடாதென்று கேரள ஐ.ஜி. அலுவலகத்திலிருந்து எல்லா காவல் நிலையங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. காரணம் என்ன? காவல் நிலையங்களில் கல்யாணம் செய்து வைக்கப்படும் போது, ஏதாவதொரு சுவாமி படத்துக்கு முன்னால் வைத்துத்தான் செய்யப்படுகிறது. காவல் நிலையமோ நமது அரசியல் சாசனப்படி மதச்சார்பற்ற அரசின் ஓர் அங்கம். எல்லா மதத்தவருக்கும் பொது இடம். இந்த நிலையில், கல்யாணத்திற்காக ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்த சுவாமி படங்களைக் கொண்டு வந்து மாட்டுவது தவறாம். அதற்குத்தான் புதிய ஏற்பாடாம்!

●● கேரள மாநில போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் ஊழியர்களின் குழந்தைகள் படிப்பதற்காக ஒரு பொறியியல் கல்லூரி தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதற்கு அரசு அங்கீகாரம் கிடைப்பதா பெரிய பிரச்னை? பிரச்னை இல்லைதான், என்றாலும் அதுவொரு தமாஷ்! எப்படி என்கிறீர்களா? முதலில் கேரள போக்குவரத்துக் கழகத்தின் கமிஷனர் என். சந்திரசேகரன் நாயர், பொறியியல் கல்லூரி தொடங்குவது பற்றி கேரள பல்கலைக் கழகத்திடம் மனு கொடுத்தார். அது பற்றி பல்கலைக் கழக சிண்டிகேட் விசாரித்து, பல்கலைக் கழகத் துணைவேந்தர் என். சந்திரசேகரன் நாயரிடம் அறிக்கை சமர்ப்பித்தது. அந்த அறிக்கையை உயர் கல்வி அதிகாரியான என். சந்திரசேகரன் நாயருக்கு அனுப்பினார், துணைவேந்தர் என். சந்திரசேகரன் நாயர். உயர்கல்வி அதிகாரியான ச. நாயர், அரசு அனுமதி பெற்று துணைவேந்தர் ச. நாயருக்கு அனுப்ப, இனி துணைவேந்தர் ச. நாயர் அனுமதி கொடுத்ததும் கல்லூரி தொடங்கப்பட்டுவிடும் என்று உயர்கல்வி அதிகாரி ச. நாயர் போக்குவரத்துக் கழகச் செயலாளர் ச. நாயருக்கு எழுத்து மூலம் தகவல் தெரிவித்துள்ளார். இது என்ன விசித்தனமாக இருக்கிறதே என்கிறீர்களா? எல்லா சந்திரசேகரன் நாயரும் ஒரே ச. நாயர்தான் என்றாலும் அது அரசாங்கம் சம்பந்தப்பட்டதல்லவா, அதனால்தான் இப்படியொரு தலைசுத்தல்!



திருவனந்தபுரத்திலிருந்து:

எஸ்.எஸ். மணி

நிறுவனர்-தலைவர்
பத்ம விபூஷன்
டாக்டர் எம். பாலமுரளிகிருஷ்ணா

நிறுவியது-1980

✆ { 403080
403758

குரோம்பேட் சாஸ்வத நிதி லிமிடெட்

[மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம்]

"Dr. பாலமுரளிகிருஷ்ணா பில்டிங்" ராமகிருஷ்ணா தெரு, ராகவா நகர்,
குரோம்பேட்டை, சென்னை-600 044.

1. சேமிப்பு வைப்பு நிதி வட்டி **12%**

2. தொடர் வைப்பு நிதி மாதமொன்றுக்கு ரூ.50ம், அதன் மடங்குகளில் 12 மாதம் முதல் 84 மாதங்கள் வரை.

3. நிரந்தர வைப்பு நிதி: ஆண்டொன்றுக்கு வட்டி விகிதமும் காலமும்

1	மாதம் முதல்	12	மாதங்களுக்குக் குறைவாக	-	17%
12	மாதங்களும்	24	"	-	18%
24	"	36	"	-	19%
36	"	60	"	-	20%
60	மாதங்களும் அதற்கு மேல்			-	21%

58 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளின் வைப்புநிதிக்கு ½% கூடுதல் வட்டி.
வட்டிக்கான முன் தேதியிட்ட காசோலைகள் இந்தியாவில் உள்ள கனரா வங்கியின் எந்தக் கிளையிலும் மாற்றத்தக்க வகையில் வழங்கப்படும்.

4. தொகை வைப்பு நிதி	சேர்ப்பு வைப்புநிதி முதிர்விற்குப் பின் பெறும் மதிப்பு		
	12 மாதம் (ஒரு வருடம்)	24 மாதம் (2 வருடம்)	36 மாதம் (3 வருடம்)
ரூ. 10,000/-	ரூ. 12,000/-	ரூ. 14,600/-	ரூ. 18,100/-

5. மறு வைப்பு நிதி

முதலீட்டுத் தொகை	முதிர்விற்கு பின் பெறும் மதிப்பு			
	சர்வஸ்ரீ பத்திரங்கள்	கால வரம்புள்ள ரொக்கப் பத்திரங்கள்	தாராம்ருதம் *வைப்பு நிதி	ஐஸ்வர்ய பிரதாயனி பத்திரங்கள்
	42 மாதங்கள் (3½ வருடங்கள்)	84 மாதங்கள் (7 வருடங்கள்)	120 மாதங்கள் (10 வருடங்கள்)	180 மாதங்கள் (15 வருடங்கள்)
ரூ. 10,000/-	ரூ. 20,000/-	ரூ. 40,000/-	ரூ. 75,000/-	ரூ. 2,00,000/-

எந்தப் பகுதியிலுமுள்ள வீடுகளின் மீது அடமானக் கடன் வசதி உண்டு.
எல்லா விதமான சேமிப்பு மற்றும் காலவரைக்குட்பட்ட வைப்பு நிதி வசதிகளும் உண்டு.
அனுமதிக்கட்டணம் மற்றும் பங்கு மதிப்புக்கு ரூ.2 செலுத்தி உறுப்பினராகி எந்த விதக்கணக்குகளும் துவங்கலாம்.

எம். ராமகிருஷ்ணா
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்

டி. எஸ். கோகிலன்
துணைத் தலைவர்

♦ எல்லோரும் மன்னார் குடிக்கு வந்த முதல்வரைப் பற்றி எழுதிக் கொண்டிருக்க, நீர் மன்னார்குடி முதல்வரைப் பற்றி (ஸ்ரீவித்யா ராஜகோபாலர்) பாந்தமாய் எழுதியதைப் படித்த பொழுது அவரை நேரில் தரிசித்தது போன்ற நிறைவு நெஞ்சுக்குக் கிடைத்தது.
ஒட்டநத்தம், சங்கர்.

♦ வழக்கறிஞர் போராட்டம் பற்றிய செய்தி படித்தேன். வழக்கறிஞர்கள் மனுக் கொடுக்கச் சென்ற போது, அதனை பெற்றுக் கொள்வதை வேண்டுமென்றே தவிர்க்க விரும்புவதுபோல், முதல்வர், தலைமைச் செயலாளர், சட்ட அமைச்சர் மூவருமே இல்லாததுதான் போராட்டத்தை வலுவாக்கியது என்ற கடைசி பாரா மிகச் சரியானது. அத்துடன் சங்கத் தலைவரையே சந்தித்து மனத்தில் நெருடும் கேள்வியைக் கேட்டுப் பிரசுரித்த கல்கிக்குப் பாராட்டுக்கள்.
மருங்கூர், பால. கிருஷ்ணமூர்த்தி.

♦ 'குறுக்கும் நெடுக்கும்' சிறுகதை மிக அருமை. புதிர் போட்டிகளில் கலந்து கொண்டு முடிவுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் வாசகர்களின் மனத்தை அழகாகப் படம் பிடித்துக் காட்டியது!
திருவெண்ணெய்நல்லூர், இ.சி. ஆனந்த குமார்.

♦ ஆர். வெங்கடேஷ் எழுதியிருந்த 'மாஸ்டர்' கதையைப் படித்து முடித்த போது, ஏதோ 'கடலில் முங்கி முத்து எடுத்தது' போன்ற அனுபவம் ஏற்பட்டது. ஆழமான கருவைக் கொண்ட இயல்பான கதை.
திருப்பூர் - 1, எஸ். ரமேஷ்குமார்.

♦ திறமையானவர்களைக் கட்சிப் பாகுபாடின்றி அறிமுகப்படுத்தி, பெருமை கொள்வதில் இன்று கல்கிக்கு நிகர் கல்கிதான். உதாரணம்: ஸ்டாலின் பேட்டி!
கும்பகோணம், எஸ்.கே. மூர்த்தி.

♦ நீங்களென்ன தி.மு.க.வில் சேர்ந்து விட்டீர்களா? மு.க. ஸ்டாலினுக்குச் சிறப்பிதழ் வெளியிட்டுள்ளீரே!
மேலகிருஷ்ணன்புதூர், பிரபாலிங்கேஷ்.

♦ 'நல்ல கணவனாக இருப்பது எப்படி'- பதின்மூன்று யோசனைகளும் அருமை. விரைவில் திருமணம் செய்து கொள்ள இருக்கும் எனக்குக் கிடைத்த வரப்பிரசாதம் இது. பாராட்டுகள்.
தூத்துக்குடி, சிவராம சுப்பிரமணியம்.

♦ மு.க. ஸ்டாலினின் பேட்டி படித்தேன். 'சூர்யா' தொடரைப் பார்த்து வருகிறேன். ஸ்டாலின் இன்னும் கொஞ்சம் முயற்சி பண்ணி expressionஐ வெளிப்படுத்த வேண்டும்.
மணியக்காரன்பாளையம், ஏ.ஜி. கல்யாணசுந்தரம்.

♦ நல்ல கணவனாக இருக்க தங்களின் முத்தான பதிமூன்று யோசனைகளும் கடைப்பிடித்தே ஆக வேண்டியவை தான். ஒரே ஒரு வருத்தம்தான் நைனா!... ஒண்ணுமில்லே... இந்த யோசனை எல்லாவற்றிலும் தாய்க்குலத்துக்கு நீங்க ஜே! போட்டிருப்பதுதான்.
ஈரோடு, என்.ரஜினி தேவராஜ்.

கல்யாண சமயத்தில் பேருதவி!

♦ கே. பாலசந்தர் பற்றி அதிகமாகத் தெரியாத என் போன்ற இளைஞர்களாகிய வாசகர்களுக்கு அவரின் நினைவலைகள் பெரும் உதவியாக இருக்கிறது.
உ. நெமிலி, க. பழனிவேல்.

♦ கல்கி 4.6.95 இதழில், மாண்பமை முன்னாள் நீதிபதி திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் வெளியிட்டுள்ள கருத்தில், 'கிருஸ்துவர்களில் சில பிரிவினர் பலதார மணம் செய்து கொள்கிறார்கள்' என இடம் பெற்றுள்ளது. பலதார மணங்கள் என்பது கிருஸ்துவ மதத்தில் அறவே இல்லை.
ரிஷிவந்தியம், எஸ். ஆரோக்கியதாஸ்.

ரூ. 20 பரிசு பெறும் கடிதம்!

♦ நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதம் கணவன்மார்கள் நல்ல கணவனாக இருக்கவே முயற்சிக்கிறார்கள். ஆனால் வெற்றி பெறவில்லை என்பது சர்வ நிச்சயம். அலுவலக ஃபைல்களை எத்தனை சரியாக வைத்திருந்தாலும் அதிகாரிகள், அதற்குப் போட்டிருக்கும் அட்டையையாவது குறை சொல்லாமல் இருக்க மாட்டார்கள். இன்றைய மனைவிமார்களில் பலர் அந்த அதிகாரிகள் ரகம்தான்!
இலால்குடி, ஆங்கரை பைரவி.



• ரமேஷ்

வழக்கறிஞர்கள் போராட்டத்தினால் தமிழகமே பாதிக்கப்பட்டபோது 'Lawless college' என்று ஒரு காலத்தில் வேடிக்கையாகக் குறிப்பிடப்பட்ட சென்னை சட்டக் கல்லூரி நினைவு வந்தது. இப்போது நிலைமை எப்படி...?

ஓவர் ஸ்பீடில் போகிற ஒரு மோட்டார் சைக்கிளை நிறுத்துகிறார், ஒரு போக்குவரத்து சார்ஜண்ட். 'பேர் என்ன? லைசென்ஸ் இருக்கா?' என்பது போன்ற வழக்கமான அரை டஜன் கேள்விகளைக் கேட்கிறார். கடைசியில் கேஸ் புக் பண்ண புத்தகத்தை எடுக்கும்போது, 'நாங்க சட்டக் கல்லூரி மாணவர்கள்!' என்று அந்த மோட்டார் சைக்கிள் இளைஞர்கள் கூறுகிறார்கள். அவ்வளவுதான்! ஏதோ மந்திரச் சொல்லைக் கேட்டதுபோல் அந்த சார்ஜெண்டின் முகம் மாறுகிறது. சல்யூட் வைக்காத குறையாக அவர்களை அனுப்பி வைக்கிறார்.



• நிர்மலா

எந்த ரிலீஸ் படத்துக்காவது டிக்கெட் தேவையா? கவலையே படத்தேவையில்லை. நேராக சினிமா தியேட்டரின் மானேஜர் ரூமுக்குச் செல்வார்கள். 'நாங்கள் சட்டக் கல்லூரி மாணவர்கள்!' என்று அவர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்ட அடுத்த நிமிஷத்தில் அத்தனை பேருக்கும் டிக்கெட் வழங்கப்பட்டுவிடும்.

சட்டக்கல்லூரி என்றாலே ஒரு 'சல்யூட்' மரியாதைதானா?



• இளங்கோ

கியூவில் நிற்கிற அவஸ்தையெல்லாம் நமது சென்னை சட்டக்கல்லூரி மாணவர்களுக்குக் கிடையாது.

எதிர்காலத்தில் நீதிக்காக வாதாடப் போகிற இந்த மாணவர்களா இப்படியெல்லாம் குறுக்கு வழியில் நடந்து கொள்கிறார்கள்?

இரண்டாண்டுகளுக்கு முன்பு தமது சட்டப்படிப்பை முடித்து விட்டு, இப்போது ஜூனியராகப் பணிபுரிந்து கொண்டிருக்கும் ரமேஷிடம் கேட்டோம்.

''மெடிகல், எஞ்ஜினியரிங் கல்லூரிகளில் படிக்கிற மாணவர்கள் மாதிரி, படிக்க வேண்டும் என்கிற லட்சியத்தோடு சட்டக் கல்லூரிக்கு வருபவர்கள் மிகவும் குறைச்சல்!'' என்கிறார் ரமேஷ்.

படிக்கிற ஐந்தாண்டுகளிலும் சட்ட நுணுக்கங்களை ஒழுங்காகப் படித்தால்தானே பிற்காலத்தில் ஒரு சிறந்த வக்கீலாகத் திகழ முடியும்? இப்படியிருந்தால் எப்படி?

''தற்போது செமஸ்டர் முறை இல்லை, ஆண்டுக்கு ஒரு முறைதான் பரீட்சை. இன்டர்னல் அசஸ்மண்ட் போன்றதெல்லாம் இல்லாததால் ஆசிரியர்களுக்குப் பயந்து நடுங்க வேண்டும் என்கிற அவசியமும் இல்லை. மேலும் பரீட்சைகளில் பாஸ் பண்ணுவதற்குத் தான் இப்போது எத்தனையோ வழிகள் இருக்கின்றனவே! அதோடு, ஒழுங்காகப் பரீட்சை எழுதி பாஸ் பண்ண விரும்புகிறவர்கள் கூட எல்லாப் பாடங்களையும் படிக்க வேண்டிய அவசியமில்லை என்கிற நிலையும் ஏற்பட்டு விட்டது.

''முப்பது நாளில் ஆங்கிலம் என்கிற பாணியில், ஒவ்வொரு பேப்பருக்கும் முப்பது கேள்விகள் கொண்ட கைடுகள் நிறையக் கிடைக்கின்றன. அவற்றை வாங்கிக் கொண்டு கடைசி நேரத்தில் படித்தால்கூட சுலபமாக பாஸ் பண்ணி விடலாம். இதைத்தான் பெரும்பாலான மாணவர்கள் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்கிறார் இன்னொரு இளம் வக்கீலான இளங்கோ.

சரி இன்றைய மாணவ-மாணவியர் தங்கள் கல்லூரி பற்றி என்ன நினைக்கிறார்கள்?

''கோ-எஜுகேஷன்தான் என்றாலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி வகுப்புகள்தான். வருஷத்துக்கு ஒருமுறை get-together கொண்டாடுவதுடன் சரி. மாணவர்



களைக் கண்டு பயப்பட வேண்டிய அவசிய மில்லையென்றாலும் ஏழெட்டுப் பெண்களா கச் சேர்ந்தே போவோம்; வருவோம்!'' என் கிறார் சட்டம் பயிலும் நிர்மலதா.

''மேலும் இன்னொரு விஷயம் தெரியுமா? மற்ற எல்லா கல்லூரிகளிலும் மாணவர் பேரவைத் தேர்தல்களில் அரசியல் புகுந்து விளையாடும் இன்றைய சூழ்நிலையில் சட்டக் கல்லூரியிலோ மாணவர் பேரவைத் தேர்தலே கிடையாது. தேர்தலின்போது வன்முறைகள் உச்ச கட்டத்தையடைந்து கொலைகளில் கூட முடிவதுண்டு என்கிற அச்சத்தால் சட்டக் கல்லூரியில் மாணவர் யூனியனுக்கு அனு மதியே கிடையாது!'' என்கிறார் நிர்மலதா.

''மாணவர் பேரவைதான் இல்லையே தவிர, எல்லா அரசியல் கட்சிகளுக்கும் சட்டக் கல்லூரியில் மாணவர் பிரிவுகள் உண்டு. அந் தந்த அரசியல் கட்சிகளின் கட்டளைப்படி அவ்வப்போது அந்தந்த மாணவர் பிரிவு போராட்டங்களை நடத்தும்!'' என்கிறார் ரமேஷ்.

''ஆயினும் சட்டக்கல்லூரி மாணவர்கள் எப்போதுமே மற்ற கல்லூரி மாணவர்களைப் போல் பல்கலைக் கழகத் தேர்வுகள் போன்று தங்களை நேரடியாக பாதிக்கும் விஷயங் களுக்கு மட்டுமே போராடுவதில்லை. பஸ் கட்டண உயர்வு முதல் இலங்கைப் பிரச்னை வரை இவர்கள் பொது நோக்கம் கொண்ட பிரச்னைகளுக்காகவே போராடுவார்கள்!'' என்கிறார் இளங்கோ.

''இப்படி பாசிடிவ்வான விஷயங்களும் நிறைய உண்டு என்பதற்கு இன்னொரு உதாரணமும் சொல்லலாம்!'' என்று ஆரம்பித் தார் நிர்மலதா.


''ஒவ்வோர் ஆண்டும் தேசிய அளவிலுள்ள சட்டக்கல்லூரிகளுக்கிடையில் 'மாதிரி கோர்ட் போட்டி' என்று ஒன்று நடக்கும். கற்பனை யான ஆனால் வெகு சிக்கலான கேஸ் ஒன்றைக் கொடுத்து அந்த மாதிரி கோர்ட்டில் வாதாடச் சொல்லுவார்கள். அந்தப் போட்டி யில் கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து வெற்றிபெற்று வருவது சென்னை சட்டக் கல்லூரிதான். அகில உலக அளவில், அமெரிக்காவில் நடக்கும் இந்த மாதிரி போட்டிக்குத் தொடர்ந்து இந்தியாவிலிருந்து சென்று வருவதும் சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள்தான். அங்கேயும் பரிசுகள் வாங்கியதுண்டு!'' என்று உற்சாகமாகச் சொல்லிக் கொண்டு வந்த நிர்மலதா, கடைசியில் ஒன்றைப் பெரு மூச்சோடு குறிப்பிட்டார்.

''எங்கள் கல்லூரி மாணவ-மாணவியர் என்னதான் அமெரிக்காவுக்கெல்லாம் சென்று போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் வாங்கிக் கொண்டு வந்தாலும் இங்கே சென்னை நகரிலுள்ள மற்ற கல்லூரிகளில் 'அனைத்துக் கல்லூரி விழா'க்கள் நடக்கிற போது, சட்டக் கல்லூரியை அழைக்க மாட்டார்கள். காரணம், சட்டக் கல்லூரி மாணவர்கள் வந்தால் கலாட்டா நிச்சயம் என்கிற நினைப்புத்தான். எனவே, எங்களுக்காக நாங்களேதான் எல்லாவற்றையும் நடத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்குக் கூட கல்லூரி நிர்வாகம் நிதியுதவி செய்யாது. இத்தனை ஏன்... கல்லூரி வளாகத்துக்குள் நடத்துவதற்குக் கூட அனுமதி கிடையாது. எல்லாமே தனியார் ஸ்பான்சர்ஷிப்தான்!''

பேட்டி : **மௌலி**

படங்கள் : **கேமரா திருஞானம்**

சட்டக் கல்லூரி ஒரு ஃப்ளாஷ் பேக்




முறைப்படி சட்டம் சொல்லித்தர வேண் டும் என்ற நோக்கத்துடன் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஜார்ஜ் நார்டன் என்பவர், தமது வீட்டிலேயே சட்டம் சொல் லிக் கொடுக்கத் துவங்கியதுதான் இன்றைய சட்டக் கல்லூரியின் சிஷிமூலம். 1852ல், அன் றைய கவர்னரின் உத்தரவுப்படி, அரசு உயர் நிலைப்பள்ளியை மாநிலக் கல்லூரியாய் விஸ் தரித்து, அங்கே ஜான் புரூஸ் நார்டன் என்ப வர் சட்டப் பேராசிரியராய் நியமிக்கப்பட்டார். அடுத்த முப்பது வருடங்களுக்கு, ஒரே ஒரு சட்டப் பேராசிரியர்தான்! அப்புறம் இரண்டா வது நபர் நியமனம்.


அதனைத் தொடர்ந்து, பிரத்யேக சட்டக் கல்லூரி ஒன்றின் அத்யாவசியத்தை உணர்ந்த அரசாங்கம், மத்திய சட்டக் கல்லூரியைச் சென்னையில் அமைத்தது. கல்லூரி ஆரம்பித்த ஏழரை வருடங்களுக்கு, சொந்த கட்டடமின்றி, சென்னை பல்கலைக்கழக செனட் மண்டபத் தில்தான் வகுப்புகள் நடந்தன. 1899 ஜனவரி ஒன்பதாம் தேதி, சென்னை உயர்நீதி மன்ற வளாகத்திலுள்ள சொந்தக் கட்டடத்துக்கு கிரகப்பிரவேசம்!

-எஸ்.எஸ்.



• ஒன்றரை மைல் நீளமுள்ள மதில்சுவர்





• கள்ளர் திருக்கோலம்

உள்ளந்திருடும் கள்வன் கள்ளழகன்!

சுமார் நூறாண்டுகளுக்குப் பிறகு ஜூலை 16 அழகர் கோயில் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது....

'கருவிளை யொண்மலர்காள்! காயாமலர்காள்! திருமால் உருவொளி காட்டுகின்றீர்...' என்று ஆண்டாள் காணும் பொருள்களிலெல்லாம் அந்தக் கார்வண்ணனையே கண்டு மயங்கி நின்ற இடம் எது தெரியுமா? அதுதான் - திருமாலிருஞ்சோலை என்னும் அழகர் கோயில்.

ஆறு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட இத்தலம், மதுரையிலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவில் இருக்கிறது. இன்னமும் இயற்கை எழில்களுக்கு மத்தியில்தான் காட்சியளிக்கிறது இக்கோயில்.

முதன் முதலாக அழகர் கோயிலுக்குச் செல்பவர்கள் பதினெட்டுப் படிகளைக் கொண்ட பிரதான வாசல் மூடப்பட்டிருப்பதைப் பார்த்துத் திகைப்படையலாம்! ஏன் அது மூடப்பட்டு, அதற்கு வடக்கேயுள்ள வண்டி வாசல் வழியாகவே பக்தர்கள் போய் வர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது? ஒரு வரலாறு உண்டு!

கள்ளழகரின் மகிமை பற்றிக் கேள்விப்பட்ட மலையாள அரசன் ஒருவன், பெருமாளின் விக்கிரகத்தைத் தன் எல்லைக்குள் எடுத்துச் செல்ல ஆசைப்பட்டான். அதற்காக மந்திரத்தில் கைதேர்ந்த பதினெட்டுப் பேரை அனுப்பி வைத்தான். அவர்களால் அழகரைக் கொண்டு போக முடியாமல் போகவே, அவருடைய சக்தியைத் தங்கள் மந்திர சக்தியால் இழுத்து, அதை வேறொரு விக்கிரகத்தில் ஏற்றித் தங்கள் நாட்டில் கோயிலெழுப்ப எண்ணினார்கள். இதையறிந்த பட்டர்கள் பெருமாளிடம் முறையிட, அவர் அந்தப் பதினெட்டுப் பேரையும் பதினெட்டுப் படிகளாகச் சபித்து விட்டார் என்றும் அவர்களோடு வந்த ஒரு தெய்வம், தானே இனி கள்ளழகர் கோயிலைக் காவல் காப்பதாக ஒப்புக் கொண்டு அங்கேயே கருப்பண்ணசாமி என்ற பெயரில் தங்கி விட்டதாகவும் கதை.

இந்தக் கருப்பண்ணசாமி பிரதான வாயிலில் காவல் காப்பதால்தான் அது மூடியே கிடக்கிறது. அதோடு, கள்ளழகர், மதுரையில் நடக்கும் மீனாட்சி - சுந்தரேஸ்வரர் திருமணத்திற்குப் புறப்பட்டுச் செல்லும் போது அவர் மீது என்னென்ன நகைகள்

அணிவிக்கப்பட்டுள்ளன என்பதை இந்தக் காவல் தெய்வத்திடம் ஒப்பித்து விட்டுத்தான் செல்வார்கள்; அதேபோல் திரும்பி வரும் போதும் நகைக் கணக்கை ஒப்பிக்க வேண்டும்! அத்தனை சக்திவாய்ந்தது காவல் தெய்வம்.

உள்ளே நுழைகிறோம். மூலவரின் பெயர் ஸ்ரீபரமஸ்வாமி. (இவரது உற்சவ மூர்த்தியைத்தான் சுந்தரராஜர், அழகர் என்றெல்லாம் அழைக்கிறோம்.) ஸ்ரீதேவியும் பூதேவியும் உடனிருக்க, கம்பீரமாகக் காட்சியளிக்கிறார் மூலவர். திருப்பதி, திருவரங்கத்துக்கு அடுத்தபடியாகக் கள்ளழகர் தலத்துக்குத்தான் தங்க விமானம் இருக்கும் சிறப்பு. உற்சவரும் தங்கத்தில் என்பது மற்றொரு சிறப்பு.

தாயாருக்குத் தனி சந்நிதி. பெயர் : ஸ்ரீசுந்தரவல்லி. வடக்குப் பிராகாரத்தில் ஆண்டாள் சந்நிதி. மற்ற எங்கும் காணக் கிடைக்காத காட்சியாக இங்கு ஆண்டாள் உட்கார்ந்த நிலையில் காட்சி தருவது இன்னொரு சிறப்பு!

மேலும், ரௌத்ர ரூபமாகக் காட்சியளிக்கும் ஸ்ரீசுதர்சனர், யோகநரசிம்மர் சந்நிதிகளோடு, சைவ-வைணவ ஒற்றுமையை வலியுறுத்தும் விதமாக வலம்புரி விநாயகர், பைரவர் சந்நிதிகளும் உண்டு.

இவையெல்லாவற்றையும் விட பெருமாள் தனது திருக்கல்யாண தினத்தன்று ஸ்ரீதேவி, பூதேவி, கல்யாண சுந்தரவல்லி, ஆண்டாள் ஆகிய நால்வருடனும் தரிசனம் தருவது கண்கொள்ளாக்காட்சி.

எல்லாம் சரி. இவருக்கு ஏன் கள்ளழகர் என்று பெயர்? அக்காலத்தில் கள்ளர்கள் வழிபட்டதால் கள்ளழகர் என்று பெயர் பெற்றார் என்று ஒரு கதை சொல்லப்பட்டாலும் -

'திருமாலிருஞ் சோலை
என்றேன், என்னைத்
திருமால் வந்து என்நெஞ்சு
நிறையப் புகுந்தான்'

என்று நம்மாழ்வார் பாடுகிற மாதிரி, நமது உள்ளங்களில் புகுந்து நம்மையே கவர்ந்து கொள்ளும் அழகனாக இருப்பதால்தான், கள்ளழகர் என்று திருநாமம் பெற்றிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

— ஜி.எஸ்.எஸ்.

●● ச.கு. கணபதி ஐயர் எழுதிய 'தேனீ வளர்ப்பு' என்னும் புத்தகம் வைத்திருப்போர் விற்பதாக இருந்தால் விலை குறிப்பிட்டு எழுதவும். அல்லது தேனீ வளர்ப்பு சம்பந்தமான வேறு தமிழ், ஆங்கில நூல்கள் வைத்திருப்போரும் விற்க விரும்பினால் எழுதலாம்.

- **வை. பாலசுந்தரம்,**
வாளக்குடிவிருப்பு,
அழியாநிலை,
அறந்தாங்கி - 614 616.

●● நான் Stamp Collection ஐ ஹாபியாகக் கொண்டுள்ளேன். பழைமை வாய்ந்த இந்திய - வெளிநாட்டு அஞ்சல் தலைகளைக் கொடுத்து உதவ விரும்பும் அன்பர்கள் தொடர்பு கொள்ள வேண்டுகிறேன். நன்றியுடன் சன்மானம் தரவும் காத்திருக்கிறேன்.

- **ர. கமலக்கண்ணன்,**
166, என்.ஜி.ஓ. காலனி,
குளித்தலை - 639 104.

●● திரைப்பட நுணுக்கங்கள் அடங்கிய புத்தகங்கள் இருந்தால் தெரிவியுங்கள். உடனே பெற்றுக் கொள்கிறேன்.

- **இர. ரூபன்,**
8, செங்குளம் ரோடு,
கோபாலசமுத்திரம்,
நெல்லை மாவட்டம் - 627 451.

●● 'வேலை நிறுத்தம் என்பது தவறான அணுகுமுறை' என்னும் சிந்தனை கொண்ட தேசப் பற்று மிக்கவர்களின் நட்பைப் பெரிதும் வரவேற்கிறேன்.

- **ஆர். காந்திஜி,**
16, பெரியசாமி கோனார் சந்து,
(மேல் மாடி),
மதுரை - 10.

●● கடந்த 1992-93, 93-94 ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழியிலோ அல்லது கல்லூரியிலோ முதலாண்டு ஆங்கில இலக்கியம் படித்தவர்கள், முதலாண்டின் எல்லாக் கேள்வித்தாள்களும் கைவசமிருப்பின் அனுப்பி உதவ வேண்டுகிறேன்.

- **சோ. உமா மகேஸ்வரி,**
31, தட்சிணாமூர்த்தி காலனி,
தங்கவேல்நகர்,
பட்டுக்கோட்டை - 614 601.



பாலம்

●● லால்குடி அருகிலுள்ள மணக்கால் கிராமத்தில் வசித்த பாட்டையரின் வம்சாவளி தயாரிக்கப்படுகிறது. இந்த வம்சாவளியில் வந்தவர்கள் (கௌசிக கோத்திரம்) தங்கள் பாட்டனார், தகப்பனார் மற்றும் அவர்களுடைய சகோதரர்கள் பெயர்களையும் மேலும் உங்களுக்குத் தெரிந்த தாயாதிகள் பெயர்களையும் எழுதியனுப்ப வேண்டுகிறேன்.

- **என். ரெங்கராஜன்,**
12, திருவேங்கடம் தெரு,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை - 600 028.

●● 'காமு' என்னும் நாவல் சுருணன் என்பவரால் (சு. குருசாமி) தினமணி கதிரில் தொடர் கதையாக எழுதப் பெற்றது. கலைமகள் காரியாலயத்தாரால் நூல் வடிவிலும் வெளியிடப்பட்டது. அந்த நாவலின் ஒரு பிரதி எனக்குக் கிடைக்குமாறு செய்தால், நூல் விலையைத் தருவதோடு நன்றியும் பாராட்டுவேன்.

- **பா. அமிழ்தன்,**
43/5, பூஞ்சோலைத் தெரு,
கள்ளிக்குளம் - 627 113.
நெல்லை மாவட்டம்.

●● எங்களிடம் ஏராளமான 45 R.P.M. மற்றும் 33⅓ R.P.M. கிராமபோன் ரெகார்டுகள் உள்ளன. அனைத்துமே கர்நாடக, ஹிந்துஸ்தானி மற்றும் சினிமா இசை சம்பந்தப்பட்டவை. விலைக்கு வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம்.

- **பானுமதி சேஷகிரி,**
2, பார்க் அவென்யூ,
K.P. புரம், கிரீன்வேஸ் சாலை,
சென்னை - 600 028.

●● Loneys Composite Mathematics என்னும் நூல் மிகவும் அவசியமாகத் தேவை. அரிய நூல்தான் என்றாலும் விலை, தபால் செலவு உட்பட அனைத்தையும் செலுத்திப் பெற்றுக் கொள்வேன்.

- **P.V. ராமச்சந்திரன்,**
ஆபீஸர், இந்தியன் பாங்க்,
117, மேற்கு சித்திரை வீதி,
ஸ்ரீரங்கம்,
திருச்சி - 620 006.

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி - தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பேற்க இயலாது. - ஆர்.)



"யாருய்யா இந்த அறிவிப்புப் பலகையில் இந்த சில்மிஷத்தைச் செய்தது...?"

- ஆர். ஹரிகோபி

Many of the dead are very much alive; some of the living are already half dead.

- THE MOTHER -

நினைவலைகள்

கே. பாலசந்தர்

49

கவியரசு கண்ணதாசன், எம்.எஸ். விசுவநாதன், நான் மூவரும் சேர்ந்து பணியாற்றிய காலகட்டம் என் திரை வாழ்க்கையிலே ஒரு பொற்காலம் என்று சொல்வேன். எனது திரைப்படங்களில் சில, வியாபார ரீதியாகத் தோல்வியுற்றிருக்கலாம். ஆனால் எங்கள் combinationல் வெளிவந்த எந்தப் பாடலும் சோடை போனதில்லையென்று நான் அடிக்கடி சொல்வதுண்டு. உதாரணமாக எனது 'பட்டினப்பிரவேசம்' திரைப்படத்தில் வரும்

"வான் நிலா நிலா அல்ல... உன் வாலிபம் நிலா..."

எந்தப் படத்தில் வருகிறது என்று தெரியாமலேயே சூப்பர் ஹிட் ஆன பாடல் இது!

'Composing' உட்கார்ந்த போது மெல்லிசை மன்னர் இந்த டியூனை தத்தகாரத்தில் பாடிக் காட்ட... கேட்டுக் கொண்டிருந்த கவியரசு, எம்.எஸ்.வி.யிடம் சண்டைக்குப் போய் விட்டார்.

"என்னடா டியூன் போடறே நீ! தன... தன... தன... தன... எத்தனை தன? வார்த்தைக்கு எங்கே போவேன் நான்... டியூனை மாத்திப் போடு" என்றார் கவியரசு.

"இந்த டியூன் ரொம்ப நல்லாயிருக்கு கவிஞரே! உங்களால வார்த்தை போட முடியலேன்னா வேற யாராலே முடியும்..." என்று நான் சமாளித்தேன்.

"அப்படியா! சரி"யென்று சொல்லிவிட்டு, கவியரசு சிந்திக்கத் தொடங்கினார்... சரியாக மூன்றே நிமிடங்கள்!

எழுதி எழுதிப் பார்க்கும் பழக்கம் அவருக்குக் கிடையாது. ஒவ்வொரு வரியாகச் சொல்லும் பழக்கமும் கிடையாது. வார்த்தைகள் அடித்தலோ திருத்தலோ எல்லாமே மனத்திற்குள்தானோ என்னவோ!

முழு பல்லவியையும் மனத்திலேயே form பண்ணிக் கொண்டு "டியூனுக்குச் சரியா இருக்கா பாரு விசு" என்று சொல்லிவிட்டு, முழு பல்லவியையும் சொன்னார். உதவியாளர் எழுதிக் கொண்டார்.

வான் நிலா
நிலா அல்ல... உன்
வாலிபம் நிலா.
தேன் நிலா
எனும் நிலா
என் தேவியின் நிலா!
நீ இல்லாத நாளெல்லாம் - நான்
தேய்ந்த வெண்ணிலா!

"சபாஷ்!" என்றார் எம்.எஸ்.வி. செதுக்கி எடுக்கப்பட்ட வார்த்தைகள் மாதிரி... தத்தகாரத்தில் தேனாக வழுக்கி, தம் தம் இடத்தில் விழுந்த வார்த்தைகள் - கம்பன், காளிதாசனுக்கு ஈடான வர்ணனை ஜாலங்கள்.

"உங்களுக்கு ஓ.கே.யா பாலு?" என்றார் கவியரசு.

"இந்தப் பாடலை எப்படி படமாக்கப் போகிறோம் என்கிற visualisationக்குப் போய் விட்டேன் நான். வரிகளுக்கும், டியூனுக்கும் ஈடுசெய்கிறார் போல் படமெடுத்து, நானும் உங்களுக்குச் சமமாக என் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்கிற கவலைதான் எனக்கு" என்று சொன்னேன்.

படம் வெளிவந்த நேரம், இந்தப் பாடலைக் கேட்டிருந்த என்.டி.ராமராவ் அவர்கள் தமது தெலுங்குப் படத்திற்கு இதே டியூனில்தான் பாடல் வேண்டுமென்று வற்புறுத்தி, எம்.எஸ்.வி. அவர்களை இசையமைக்கச் சொன்னார்கள்!

கவியரசு 'கம்போஸிங்' வருகிறார் என்றால் எனக்கெல்லாம் மிகவும் சந்தோஷமாக இருக்கும். வந்து உட்கார்ந்தவுடன் மூன்று நிமிடங்கள் 'உபய குசலோபரி'! அடுத்த மூன்று நிமிடங்கள் அவர் உடல்நிலை... சர்க்கரை level... மாத்திரைகள் பற்றி; அடுத்த மூன்று நிமிடம் முதல் நாள் சாப்பிட்ட இடியாப்பம், புறாப் புட்டு பற்றி; அதற்கு அடுத்த



• இரு மேதைகள்

மூன்று நிமிடங்கள் அரசியல் பற்றி...

இப்படியாக 'கம்போஸிங்' போது முதல் பத்து அல்லது பதினைந்து நிமிஷம் வரை warming up session நடக்கும்.

சட்டென்று சுதாரித்துக் கொண்டு, "என்ன situation பாலு?" என்று பாடல் காட்சிக்கு வந்து விடுவார்.

பாடல் காட்சியை வர்ணித்துச் சொல்லும் போது என் முகத்தைப் பார்க்க மாட்டார்... வேறு எங்கோ தன் பார்வையை வைத்துக் கொண்டு, உன்னிப்பாக கவனத்தில் ஆழ்ந்தபடியே ம்ம்.... ம்ம்... என்று கேட்பார். நான் சொன்ன situation அவரை inspire பண்ணுவதாக அமைந்தால் முகத்திலே பரவசம் தோன்றும்.... எம்.எஸ்.வி. பக்கம் திரும்பி... "என்ன விசு? நீ டியூன் கொடுக்கிறாயா? இல்லை நான் பல்லவி கொடுக்கட்டுமா?" என்பார்.

"எல்லாத்துக்கும் நான் ரெடி அண்ணே..." என்பார் விசு.

இந்த composing அனுபவத்தையேதான் நான் ஒரு பாடல் காட்சியாக மாற்றினேன்.

படம் : வறுமையின் நிறம் சிவப்பு

பாடல் : சிப்பி இருக்குது!
முத்து இருக்குது!
திறந்து பார்க்க
நேரமில்லேடீ ராஜாத்தி

– ஸ்ரீதேவி டியூன் சொல்லச் சொல்ல கமல்ஹாசன் அதற்கேற்ற கவிதை வரிகளைச் சொல்வதைப் போல் அமைந்த அந்தப் பாடல் காட்சி. இந்தக் காட்சி மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றதை எல்லோரும் அறிவார்கள்.

மேலே சொன்ன பாடல் காட்சியின் அடித்தளத்தில் அமைந்திருக்கும் காதலுக்கே உரித்தான அந்த உன்னதமான intimacy, சிந்தனை இணக்கம், சரி சமமான wave length, முழுமையான ஈடுபாடு, சமமான ரசனை இவையனைத்தையும், எம்.எஸ்.வியும் கண்ணதாசனும் சேர்ந்து செயல்பட்டு பாடல் காட்சிகளை அமைக்கும் போது நான் உணர்ந்திருக்கிறேன்.

ஒரு பாடல் காட்சி அற்புதமாக அமைந்து விட்டால் கவியரசு சின்னக் குழந்தையாகவே மாறி விடுவார்.

'வரட்டுமா விசு' என்று சொல்லியபடியே கைகளினால் விசுவின் உடலில் கிச்சு கிச்சு மூட்டி அவரை tease பண்ணுவார்.

விசுவிற்கு இது ஒரு வீக்னஸ்! கிச்சு கிச்சு மூட்டுவதை மட்டும் அவரால் தாங்கிக் கொள்ளவே முடியாது. சின்னக் குழந்தை மாதிரி வளைந்து நெளிந்து ஓடி, ஓவென்று சிரித்து, கத்திக் கதறி 'வேண்டாம் அண்ணே' 'வேண்டாம் அண்ணே' என்று தன்னை விட்டு விடச் சொல்லிக் கெஞ்சக் கெஞ்ச, கவியரசும் விடாமல் விசுவைத் துரத்த, கடைசியில் ஒன்றும் முடியாமல் 'போடா டேய்' என்று சத்தம் போட்டு "அவரை அனுப்புங்கண்ணே முதல்லே" என்று கூச்சலிட்டபடியே என் பின்னால் ஓடி வந்து ஒளிந்து கொள்வார் விசு! 'கம்போஸிங்' வந்த மற்ற வாத்தியக்காரர்களும் இந்தக் காட்சியைப் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பார்கள்.

படைப்புத் தொழிலுக்கு மத்தியில் இப்படி சின்னப் பிள்ளை விளையாட்டுகளுக்கெல்லாம் அப்பொழுது நேரம் இருந்தது. படைப்புத் தொழில் என்பதே சின்னப் பிள்ளைத்தனமாக ஆகி விட்டதாலோ என்னவோ, இந்த lighter momentsகளுக்கு இப்பொழுது நேரம் இருப்பதில்லை.

'அபூர்வ ராகங்'களுக்குக் கவியரசு பாடல்கள் எழுதிய அந்த நாட்கள் என்றும் மறக்க முடியாத நாட்கள்.

படத்தின் நாயகி கர்நாடக இசையில் தேர்ச்சி பெற்ற ஒரு பாடகி... அவளிடம் முதல் முறையாக தனது காதலை வெளிப்படுத்துகிறான் கதாநாயகன் (பிரசன்னா). படத்தின் தலைப்பு : அபூர்வ ராகங்கள்.

ஆகவே இந்தப் பாடல் அபூர்வ ராகங்களில் ஒன்றாக அமைய வேண்டும் என்று நான் விரும்பியதும், விசு 'மகதி' ராகத்தின் அடிப் படையில் இந்தப் பாடலுக்கு இசையமைத் தார்.

'மகதி' ராகத்தில் இசையமைத்த முதல் திரைப்படப் பாடல் இதுவாகத்தானிருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

பாடலின் பல்லவி மகதி ராகத்தில் ஆரம் பித்தாலும் பாடல் போகப் போக... நாயகன் தன் காதலி யாரென்று இந்தப் பாடலின் மூலம் கதாநாயகி பைரவிக்குத் தெரிவிக் கின்றபடி பாடலின் சரணம் வரும்போது, அந்த சரணத்தை பைரவி ராகத்தில் அமைக்க வேண்டுமென்றும்... சரண வரி களைத் திருப்பிப் பாடுவதற்கு முன்னால் ஒரு சின்ன background இடைவெளி வேண்டும்; அந்த இடைவெளியில் நாயகன் "இன்னுமா புரியலே?" என்று சொல்லிவிட்டு அந்த வரி களையே மீண்டுமொருமுறை திருப்பிப் பாட வேண்டும்; அப்பொழுதுதான் நாயகி பைரவி யும் ராகத்தின் வழியாக இவன் தன்னைத் தான் காதலிக்கிறான் என்று புரிந்து கொண்டு, அவன் மீது கோபம் கொள்வது மாதிரி பாடலின் முடிவில் வர வேண்டும்... என்று இத்தனை கண்டிஷன்களையும் நான் கண்ணதாசனுக்கும் விசுவுக்கும் போட... கண்ணதாசன் எழுதிய

ஒருபுறம் பார்த்தால்
மிதிலையின் மைதிலி
மறுபுறம் பார்த்தால்
காவிரி மாதவி

முகம் மட்டும் பார்த்தால்
நிலவின் எதிரொலி
முழுவதும் பார்த்தால்
அவளொரு பைரவி

இந்த சரண வரிகளை அற்புதமாக பைரவி ராகத்தில் அமைத்துக் கொடுத்து, கதையிலே வருகின்ற மிகப் பெரிய திருப் பத்தை ஒரு பாடல் காட்சிக்குள் அமைத்துத் தந்த அந்த இரு மேதைகளின் பணியையும் அந்தப் பட வெற்றிக்கான அவர்களது பங் கையும் இந்த இடத்திலே நான் நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

அதே போலத்தான் இவர்களுடைய மேதாவிலாசத்திற்கு அந்தப் படத்தின் உச்சக் கட்டக் காட்சியும் சவால் விட்டது.

நான் அவர்களிடம் சொன்னேன் :

"படத்தின் உச்சகட்டக் காட்சி என்பது

தான் படத்தின் உயிர்நாடி. முடிச்சுகள் அவிழ்க்கப்படுவதும், பிரிந்தவர்கள் கூடுவதும் உணர்ச்சிபூர்வமாக, நெகிழவைக்கின்ற ஒரு காட்சி... அவை அத்தனையும் வாய் வார்த்தையாக, war of words ஆக இல்லாமல் மேடைக் கச்சேரியிலே நடக்கின்ற ஒரு பாடல் காட்சிக்குள் மட்டுமே அமைந்து விட வேண்டுமென்பதுதான் எனது உச்ச கட்டக் காட்சியின் concept. நீங்கள் இருவரும் இருக்கிற தைரியத்தில்தான் இப்படிப் பாடலாக conceive பண்ணியிருக்கிறேன்.. பிறகு உங்கள் சாமர்த்தியம்..."

இந்தப் பாடலில் இடம்பெறவிருக்கின்ற அத்தனை நிகழ்ச்சிகளையும் விலாவாரியாக shot-wise நான் அவர்களுக்கு விவரித்துச் சொன்னேன்.

இந்தக் காட்சி ஐந்து நிமிடங்கள் வரை ஓடக்கூடிய ஒரு பாடல் காட்சியாக இருப்பதால், பாடலை ராகமாலிகையில் அமைத்துக் கொள்வது நன்றாக இருக்கும் என்றும், பாடலின் பல்லவி மட்டும் "கேள்வியின் நாயகனே" என்று ஆரம்பிக்க வேண்டும் என்றும் எனது தேவைகளையெல்லாம் நான் சொல்ல... அந்த முழுப் பாடலும் பிறந்த கதையிருக்கிறதே... அந்த இனிய அனுபவங்களை மட்டும் எழுத எனக்கு ஒரு முழு புத்தகம் தேவைப்படும் என்று நினைக்கிறேன்.

மூன்று சரணங்கள் வேண்டுமென்று கேட்ட எனக்கு, அவர் வாய் வார்த்தையாகச் சொல்லிக் கொண்டே போக, அவரது உதவியாளர் எழுதிக் கொண்டே இருக்க, 22 சரணங்களைச் சொல்லி முடித்து விட்டு... "இதில் மூன்று சரணங்களை choose பண்ணி எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறியபடி பதிலுக்குக் காத்திராமல் எழுந்து போன அந்தக் கவியரசு கண்ணதாசனின்... கம்பீரமான நடை இன்னமும் எனது கண்களில் திரையோடிக் கொண்டிருக்க...

மரணம் அவரைத் தழுவ, அவரது பூத உடல் சென்னைக்குக் கொண்டு வரப்பட்ட போது அந்தக் காட்சியை என் கண்களால் பார்க்க எனக்குத் துணிவில்லையென்பது ஒருபுறம்; சிரித்துப் பேசியபடியே இருக்கும் அந்த கம்பீரத் தோற்றம் என் கருவிழிகளுக்குள் சிறைப்படுத்தப்பட்டு நிரந்தரமாக உட்கார்ந்து விட்ட நிலையில், படுத்துக் கிடக்கும் பூதஉடலின் தோற்றத்தை விழிகளுக்குள் நான் மாற்றிப் பதிவு செய்து கொள்ள விரும்பவில்லையென்பது ஒருபுறம்; இறுதி மரியாதைக்கு நான் செல்லவேயில்லை.

(தொடரும்)

'அ.தி.மு.க. தனித்தே போட்டியிடும்

● பூமலை மணியன், தி. அகரம்.

? மன்னார்குடி கல்வெட்டில் அம்மா வால்தான் குடமுழுக்கு நடைபெறும் என்ற குறிப்பு உள்ளதாமே?

! அப்படி ஒரு கல்வெட்டே இல்லை என்று கிழிகிழித்து விட்டார்களே, கவனிக்கவில்லையா? அரசே இப்படி பகிரங்க 'ரீல்' விடுவது அருவருப்பின் உச்சம்.



• நோட்டீஸ்!

● ஈ.டி. விஜயகுமார், ஈரோடு.

? மயிலை பங்களா விவகாரத்தில் சசிகலாவுக்கு வருமான வரித்துறை நோட்டீஸ் அனுப்பியது பற்றி...?

! நோட்டீஸ் அனுப்பியதுடன் கடமை தீர்ந்ததாக 'அக்கடா'வென்று சாய்ந்து கொட்டாவி விடக்கூடாது.

● முத்ஸ், நாரேந்தல்.

? தம் தாய்க்கு ஆபரேஷன் செய்ததில் தவறு என்று அமெரிக்க மருத்துவமனை மீது 75 கோடி நஷ்டஈடு கேட்டு ஸ்ரீதேவி வழக்கு தொடுத்து உள்ளாரே?



• வழக்கு!

! அமெரிக்க டாக்டர் செய்தது அலட்சியத்தின் உச்சகட்டம்; மன்னிக்க முடியாத குற்றம். நஷ்டஈடு எவ்வளவு என்பதை விட, டாக்டர் உரிய தண்டனை பெற வேண்டும் என்பதே முக்கியம். இன்னொன்று : உடம்புக்கு வந்து விட்டால் நம்மூர் டாக்டர்களை நம்பாமல், அயல்நாடுகளுக்கு ஓடுவது அபத்தம்; அங்கேயும் அசிரத்தை காரணமான தவறுகள் நடக்கக்கூடும் என்று நிரூபணமாகிறது. இவர்களை விட அவர்கள் அப்படியொன்றும் அதிமேதாவிகளும் அல்ல.

● தி.சி. ஆனந்தகுமார், திருவெண்ணெய்நல்லூர்.

? காற்றும் மினரல் வாட்டர் போல் அடைக்கப்பட்டு வரப் போகிறதாமே?

! காற்று இங்கே மாசுபடுத்தப்பட்டு உள்ளது உண்மைதான். ஆனால் தூய காற்றை விலை கொடுத்து வாங்க அவசியமில்லை. அதிகாலை நேரத்தில் கடற்கரை அல்லது மைதானம் அல்லது மொட்டை மாடியில் சுவாசப் பயிற்சி செய்தாலே போதும்; நுரையீரலும் இரத்தமும் தூய்மை பெற்று விடும்.



• அறிவிப்பு!

● மு. முருகேசன், இராமேஸ்வரம்.

? 'ஜெயலலிதா உருவம் பொறித்த துணி சீனப் பெருஞ்சுவரில் மாட்டப்படும்' என்று இந்திரகுமாரி சொல்லியிருக்கிறாரே?

! சீனர்களுக்கு நம்மைப் பற்றி என்ன தெரிந்திருக்கப் போகிறது என்ற தைரியம்தான், வேறென்ன!

● எச். மோகன், மன்னார்குடி.

? சமீபத்தில் தாங்கள் கேள்விப்பட்ட விஷயங்களில் உங்களை ரொம்ப பாதித்தது...?

! கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் என்பது பத்திரிகைத் துறைக்கு, விஞ்ஞான முன்னேற்றம் அளித்துள்ள வரம். அதை வைத்து ஒல்லியை குண்டாக்கலாம், குண்டை ஒல்லியாக்கலாம்; ஜெ. படிப்படியாக உருமாறி மூசோலினி வடிவமெடுப்பதாக "கார்ட்டூன் புகைப் படங்கள்" உருவாக்கலாம்! இன்னும் இப்படி பல ஜகஜ்ஜாலங்கள். ஆனால் அதுவே தவறாகப் பயன்படுத்தப்படவும் செய்யலாம். உதாரணமாக அண்மையில் பம்பாயில் ஒரு விளம்பர மாடலை நீச்சல் உடையில் படுக்க வைத்துப் புகைப்படமெடுத்து விட்டு, பிறகு புகைப்படத்தை கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸில் கொடுத்து அவரை நிர்வாணப்படுத்தி விளம்பரம் செய்து விட்டார்கள்! வழக்கு போட்டிருக்கிறார் என்பது ஒருபுறமிருக்க, இத்தகைய நீசத்தனமான எண்ணம் ஏற்பட்டிருக்கலாமோ?



• தனித்துப் போட்டி!

● சி. கொ. தி. முருகேசன், கோபி.

? 'பாராளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. தனித்தே போட்டியிடும்' என்று 'ஜெ' அறிவித்துள்ளது பற்றி...?

! நல்ல முடிவு. அவர் தோற்றால் மக்கள் அவரைத் தண்டித்தவர்களாவார்கள்; அவர் வென்றால், மோசமான ஆட்சி வழங்கி மக்களை அவர் தண்டிப்பது தொடரும். எப்படியானாலும் மக்களே முழுப் பொறுப்பு ஏற்கும்படியாகும்.

● கோ. ரா. சந்திரன், சங்கரன்கோயில்.

? அரசியல், சினிமா இல்லாத ஒரு ரச

மான விஷயம் சொல்லுங்களேன்!

! அந்தப் பெண் தனது 33வது வயதில் கணவனை இழந்து விட்டாள். என்றாலும் அக்கால வழக்கப்படி (சென்ற நூற்றாண்டின் இறுதி) அவள் மொட்டை அடித்துக் கொள்ள மறுத்தாள். கை வளையல்களையும் கழற்றவில்லை. "உல்லாச விதவை" என்று சிலர் ஏசியதை லட்சியம் பண்ணவில்லை. "சில விஷயங்களில் உங்கள் கணவரின் கட்டளையையும் மீறி நீங்கள் உறுதியாக இருந்திருக்கிறீர்களே, அது எப்படி?" என்று கேட்கப்பட்ட போது, "எல்லா விஷயங்களிலும் ஒருவர் மற்றவருக்கு அடங்கி நடப்பது சாத்தியமா என்ன? அத்தகைய வாழ்வும் ஒரு வாழ்வாகுமா?" என்றாள்! யார் அந்த நிஜமான புரட்சித் தலைவி? அன்னை சாரதா தேவிதான்! (ஆதாரம் : அன்னை ஸ்ரீ சாரதா தேவி, வெளியீடு : ராமகிருஷ்ணமடம், சென்னை - 4. விலை : ரூ. 50.)

● எம். சந்திரசேகர், மேட்டுமகாதானபுரம்.

? வழக்கறிஞர்களுக்குக் கிடைத்த முதல்



• புரட்சித் தலைவி!

குறித்து?

! தடைவிதிக்கப்பட வேண்டிய அளவுக்கு அவர்கள் ஏதும் செய்யவில்லை எனில் முதலில் தடைவிதித்திருக்கவே வேண்டாம். செய்

'ஜெ' அறிவிப்பு பற்றி..?

நீங்கள் கேட்டவை — தாராசு

வெற்றி பத்தி...?

! உயர்நீதிமன்றத் தீர்ப்புடன் திருப்தி அடைந்து போராட்டத்தை வாபஸ் பெற்றுக் கொண்டிருக்கலாம். கௌரவமாக இருந்திருக்கும். அதைச் செய்யாமல், பந்த், மறியல் என்று தொடர்ந்து, ஜெ. ஆதரவு வக்கீல்கள், எதிர்ப்பு வக்கீல்கள் என்று பிரிந்து, அரசியலைப் புகுத்தி அசிங்கப்படுத்தி, பந்த் பிசுபிசுக்க வெற்றியைத் தோல்வியாக்கிக் கொண்டார்கள்!



• ஐந்தாம் ஆண்டு!

● ம. செந்தில்நாதன், மதுரை.

? வெற்றிகரமாக ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் பிரதமர் பத்தி...?

! நாலு ஆண்டு சாதனைகளில் முதல் பெரிய சாதனை, ஆட்சியில் தொடர்ந்து இருந்ததே. அதை ஐந்தாம் ஆண்டும் நிறைவேற்றி விடுவார் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

● மு. தனகோபலன், திருவாரூர். ❑

? விசுவ ஹிந்து பரிஷத்துக்கு விதிக்கப்பட்ட தடை நடுவர் மன்றத்தால் நீக்கப்பட்டது

திருக்கிறார்கள் எனில், அதைச் சுலபமாக நிரூபித்திருக்கலாம். அப்படி சாட்சியங்களைச் சமர்ப்பித்து நிரூபிப்பதில் அலட்சியம் புகுந்திருக்கிறது. ஏன்? பின்னணியில் ஏதோ ரகசிய ஒப்பந்தம் இருந்திருக்க வேண்டும்.

● தேன்மொழி மன்னவன், கோனாப்பட்டு.

? தேசிய நெடுஞ்சாலையை உருவாக்க 22,000 கோடி ரூபாய் செலவிடுவதற்கு பதில் தென்னக நதிகளை இணைத்தால் அரிசி படி 50 பைசாவுக்குக் கிடைக்குமே?

! நீங்கள் நினைப்பது போல் பொருளாதார செயல்பாடு இராது. நெடுஞ்சாலையோ, நதிகள் இணைப்போ எதுவாயினும் முதலீடுகளை விழுங்கும் போது அந்த முதலீட்டைத் திரும்பப் பெற்றாக வேண்டும். எனவே, உற்பத்தி ஆகும் பண்டத்தின் விலை கூடவே வாய்ப்பு. என்றாலும் வேலை வாய்ப்புகள் பெருகும், நீண்ட கால நோக்கில் பலன் தரும் என்பதால் வரவேற்கலாம். முக்கியமான விஷயம், ஊழல் இல்லாமல் பார்த்துக் கொள்வதுதான். கமிஷன் அடிப்பதற்காகவே திட்ட மதிப்பீட்டினை உயர்த்துவதில் இன்றைய அரசியல்வாதி அசகாய சூரன்!

❑ ரூ 25 பரிசு பெறுபவர் : மு. தனகோபாலன், 32-D, சுவாமி மடத் தெரு, திருவாரூர் - 610 002.

பணம் பண்ணலாம் வாங்க



வி. கோபாலன்

எங்கே போகுது எல்லா பணமும்?

நம் வீடுகளில், பொதுவாக கணவன் செலவாளியாயிருந்தால் மனைவி சிக்கன சேமிப்பாளராகவும் மனைவி செலவாளியாயின் கணவன் லகான் பிடிப்பவராகவும் இருந்து குடும்பம் நடக்க வழி செய்வது வழக்கம். லகான் பிடிப்பவர், 'ரொம்ப செலவாயிடுச்சு'; 'உன்/உங்கள் கை ஓட்டை'; 'இந்த மாதம் ஆர்.டி. கட்ட பணம் எங்க?'; 'அடுத்த மாதம் ஸ்கூல் ஃபீஸ் கட்டணும், நினைவிருக் கட்டும்....' என்றெல்லாம் எச்சரித்து, பாங்க் பாலன்ஸில் ஒரு கண்ணும் செலவு கணக்கு நோட்டில் ஒரு கண் ணுமாக காலம் தள்ளுவதும் வழக்கம்.

வீட்டுக் கண்காணிப்பாளரைப் போல் நாட்டுக் கண்காணிப்பாளர் ஒருவர் இருக்கிறார் - நிதியமைச்சரோ, நிதித் துறைச் செயலரோ அல்ல... Centre for Monitoring Indian Economy என்ற அமைப்பு. இந்த அமைப்பு, நாட்டின் பொருளாதாரத்தில் ஓர் அங்கமான தனிநபர் சேமிப்பையும் கண்காணித்துக் கொண்டேயிருக்கும்.

ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியை - Gross Domestic Product (சுருக்க மாக GDP) கணக்கிடும் போது, தனி நபர்களின் சேமிப்பையும் நிதி முதலீ டையும் அதில் உள்ளடக்குவார்கள். ஒவ்வொரு வீட்டிலும் சேமிக்கப் படும், முதலீடு செய்யப்படும் தொகைகள் நாட்டின் ஒட்டு மொத்த உற்பத்தியில் ஓர் அங்கம் என்று அர்த்தம்.

ஆக, நாம் சேமிப்பது நமது நலனுக்கு உதவுவதுடன் நாட் டின் ஒட்டுமொத்த பொருளாதார முன்னேற்றத்துக்கும் உதவுகிறது என்பது எவ்வளவு பெரிய விஷயம்!

ஆனால், கடந்த சில ஆண்டுகளாக GDPயில் 22 சதவிகித மாக இருந்த தனிநபர் சேமிப்பு இப் போது 20 சதவிகிதமாகக் குறைந்து விட்டது.

அதாவது, தனி நபர் கள், வங்கிகளிலோ, பங்கு மார்க்கெட்டிலோ, என். எஸ். ஸி. பி.பி.எஃப் போன்ற அரசு சேமிப்புத் திட்டங்களிலோ போட்டு வரும் பணத்தின் அளவு குறைந்து வருகிறது!

தனி நபர்களைப் போலவே தனியார் கம்பெனிகளும் பொதுத்துறை நிறுவனங்களும் லாபத் தின் ஒரு பகுதியைச் சேமிப்பாக வைப்பது வழக்கம். Reserves என்று இதைக் குறிப்பிடுவார்கள். லாபத்தில் பங்கான dividend ஐ பங்குதாரர்களுக்கு விநியோகித்ததுபோக Reserve இல் வைக்க கணிசமான தொகை மிஞ்சும்.

சமீப காலமாக இந்த கம்பெனிகளுள் சில, நூறு சதவிகிதம் வரைகூட dividend அறிவித்தன! இப்படி பங்குதாரர்களுக்குத் தூக்கிக் கொடுத்து பணப் புழகத்தை அதிகப்படுத்தியதுதான் மிச்சம்!

லாபத்தில் பங்காக எக்கச்சக்க தொகை பெற்றுள்ள பங்கு தாரர்கள் அதை மீண்டும் சேமிப்பிலேயே முதலீடு செய்திருந்தால் நாட்டின் ஒட்டு மொத்த சேமிப்பு விகிதாசாரம் அதிகமாகியிருக்க வேண்டும் இல்லையா....? அப்படியில்லாமல் அந்தத் தொகை குறைந்திருக்கிறது என்னும் போது, நிறுவனங்கள் அள்ளி அள்ளித் தரும் டிவிடன்ட் ஆர்பாட்டமாகச் செலவு செய்யப்படு கிறது என்ற முடிவுக்கே நாம் வர வேண்டியுள்ளது.

''ஆகக் கூடி தனி நபர்களுடைய சேமிப்பும் குறைஞ்சு போச்சு, நிறுவனங்கள் 'ரிசர்வ்' கணக்குக்குக் கொண்டு போகும் தொகையும் குறைஞ்சு போச்சு.... இது நாட்டுக்கு நல்லதில் லையே....!'' என்று சரியாக நிலைமையைப் புரிந்து கொண்டு சொன்னார் சிகாமணி.

''ஆமாம்! வீட்டில் செலவாளிகளை எச்சரிக்கும் சிக்கன சிகா மணிகள் போல நாட்டை எச்சரிக்கை பண்ணிக்கிட்டிருக்கு 'Centre for Monitoring Indian Economy' போன்ற அமைப்புகள். ஆனால் கலர் டீ.வி., வாஷிங் மிஷின், வெட் கிரைன்டர், அவனுக்கு யமஹா, அவளுக்கு 'சன்னி' என்று 'தேவைகள்' அதிகரிக்க, தவணையில் எல்லாவற்றையும் வாங்கும் வசதியும் கூடவே இருக்கும் போது, சேமிப்புக்கு ஒதுக்கும் பணம் குறையுது. அதே போல, கம்பெனி களில் டிவிடன்ட் கொடுப்பதில் போட்டி அதிகரிப்பதால் ரிசர் வுக்கு எடுத்துப் போகும் தொகை குறையுது.....'' என்றேன்.

''இப்படியே போனா, நீங்க 'பணம் பண்ணலாம் வாங்க' என்கிற துக்குப் பதிலா 'பணம் செலவழிக்கலாம் வாங்க'ன்னு தொடர் எழுத வேண்டியதுதான்!'' - சிகாமணி ஜோக் அடித்தார். (பணம் பெருகும்)

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka